# பெண்மணி

நவம்பர் 2013

ரூ.23/-



தீபாவளி மலர்



ஆர். மணிமாலா

## என் வானத்து வெள்ளி நிலவு!

முழு நாவல்

# தேக பலத்துக்கு உலர் திராட்சை

திராட்சையில் நிறைய வகைகள் உள்ளது. அனைவரும் விரும்பி உண்ணக் கூடிய திராட்சை உலர் திராட்சைதான். இந்த பழங்களை உலர வைத்து எடுப்பதால் உலர் திராட்சை பழம் என்கிறோம். உலர் திராட்சையில் வைட்டமின் மற்றும் சுண்ணாம்புச் சத்து அதிகம் நிறைந்துள்ளது. மேலும் சுக்ரோஸ், பரக்டோஸ், வைட்டமின் ஏ, பி1, பி2, பி3, பி6, பி12, அமினோ அமிலம், இரும்புச்சத்து, பொட்டாசியம், கால்சியம் போன்ற அனைத்து சத்துகளும் இதில் உள்ளன.

வளரும் குழந்தைகளுக்கு உலர் திராட்சை சிறந்ததாகும். இதில் கால்சியம் சத்துகள் நிறைந்துள்ளதால் எலும்புகள் உறுதி பெறவும், பற்கள் வலுப் பெறவும், உடல் வளர்ச்சி பெறவும் இது உதவுகிறது. குழந்தைகளுக்கு தேகபுஷ்டி வேண்டுமென்றால் தினமும் இரவு தூங்கச் செல்வதற்கு முன்பு பாலில் போட்டு காய்ச்சி அருந்தச் செய்யுங்கள். இவ்வாறு பருகுவதால் மலச்சிக்கல் பிரச்சினை தீரும்.



மலச்சிக்கல் பிரச்சினையால் அவதிப்படும் முதியோர்களுக்கு சிறந்தது. உலர் திராட்சை தாமிரச் சத்து கொண்டுள்ளதால் ரத்தத்தில் உள்ள சிவப்பணுக்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும். இந்த பழத்தை வாயில் போட்டு சாப்பிடும் போது எலும்பு மஜ்ஜைகள் வலுப் பெறும். மஞ்சள் காமாலை நோய் உள்ளவர்கள் தினமும் காலை, மாலை வேளையில் சாப்பிட்டு வந்தால் மஞ்சள் காமாலை குணமாகும்.



தொண்டைக்கட்டு ஏற்பட்டவர்கள் பால் காய்ச்சும் போது மிளகுத்தூள், உலர் திராட்சையை போட்டு பருகலாம். உலர் திராட்சையுடன் மிளகு சேர்த்து கஷாயம் செய்து சாப்பிட்டால் நாவறட்சி எளிதில் குணமாகும். உடல்வலியால் அவதிப்படுபவர்கள் உலர்திராட்சையுடன் சுக்கு, பெருஞ்சீரகம் சேர்த்து தண்ணீர் விட்டு காய்ச்சி பருகினால் உடல் வலி தீரும்.

பித்தத்திற்கும் இது சிறந்த மருந்து. கர்ப்பிணிப் பெண்களும் பாலில் உலர் திராட்சை சேர்த்து சாப்பிட்டு வந்தால் ஆரோக்கியமான குழந்தை பிறக்கும். இந்தப் பழத்தை பாலில் போட்டும் வெறுமனேவும் சாப்பிட்டு வந்தால் இதயத் துடிப்பு சீராக செயல்படும். தினமும் ஒரு பத்து உலர் திராட்சை பழத்தை தொடர்ந்து ஒரு மூன்று மாதம் சாப்பிட்டு பாருங்கள், உங்களுக்கே பல மாற்றங்கள் தெரியும்.

**–சுகன்யா.**

---

கேரட் அல்வா செய்வதற்கு கேரட்டை துருவுவதற்கு அதிக நேரம் பிடிக்கும். அதற்குப் பதிலாக கேரட்டை கழுவி துண்டுகளாக்கி கேரட்டின் பாதி அளவிற்கு பால் சேர்த்து, குக்கரில் 15 நிமிடங்கள் வேக வைத்து, ஆறின பின்பு அதை மசித்து அல்வா செய்து பாருங்கள். துருவிச் செய்கின்ற அல்வா மாதிரியே இருக்கும். வித்தியாசமும் தெரியாது.

**–என்.ஜரினா பானு, திருப்பட்டினம்.**

# சித்தாந்தம்

-மேலாண்மை பொன்னுச்சாமி

**ஊ**ர் மடத்துக்கு மெள்ள மெள்ள ஊர்ந்து வந்து படியேறி... திண்ணையில் உட்காருவதற்குள் 'ஆத்தாடி, அம்மாடி' என்றாகிப் போயிற்று... அருஞ்சுனை நாடாருக்கு. வயசு எழுபத்தாறு. இடுப்பில் நாலுமுழ வேட்டி தாறுமாறாக அள்ளிச் சொருகப்பட்டிருக்கிறது. கச்சைத் துணியில் தைத்த கைப்பனியன், கதர்த்துண்டு. நரைத்த மீசை ரோமம் ஆடியது, 'உஸ்ஸ்' சென்று விட்ட ஆயாசப் பெருமூச்சில். 'கேஸ், பூஸ்'சென்று இளைக்கிறது, மார்புக்கூடு.

உள்ளங்கையால் முழங்கால் மூட்டை நீவிவிட்டார். வீங்கியிருக்கிறது. காலை உதறி எட்டு எடுத்து வைக்கவிடாமல், முழங்கால் வீக்கம்தான் முடக்குகிறது. உட்கார்ந்தால், எழுந்தால் மூட்டுகளில் மொடு மொடுக்கிறது. கரண்டைக்கால் எலும்பு வேறு, வலி உசுரை வாங்குகிறது. முத்துன நெந்துக பாடு, தும்பம்தான்.



''ச்சேய்... ஒரு வயசுக்கு மேலே உசுரோட இருக்குறதும் தப்புத்தான். போய்ச் சேர்ந்தாத்தான் நிம்மதி. உசுரே ஒரு பாரமாயிருது. கிடந்து, பாடாய் படுத்துது. சீரழிவு தான். ஆனா, என்ன செய்ய? கூத்துவன் ஓலையைக் கிழிக்கலியே... கிழிச்சாலும் நா போகமாட்டேன், எம் பேரனைப் பாக்காம.''

'பேரனை நினைச்சா பெருமையாயிருக்கு. உத்தியோகத்துக்கு வந்துட்டான். பொறுப்பான உத்தியோகம். புருஷலட்சணம், கால்காசு உத்தியோகம்னாலும் கவர்மெண்டு உத்தியோகம். பேரன் தலைமுறை கரையேறிட்டா அதுக்குப் பின்னாடி வர்ற தலைமுறைகளை அவன் மலைமேலே ஏத்திருவான்.

கிரை வித்து வவுத்தை நனைச்ச அருஞ்சுனை நாடான் பேரன்... கோட்டு சூட்டும், பூட்டுமா வரப்போறான். அவன் புள்ளைகளைப் பெரிய பெரிய படிப்பு படிக்க வைச்சுருவான். அதுக்கான சத்து அவங்கிட்டே வருந்துரும்.

ஊரையே கிரையம் பண்ணி, ராஜாவான மாதிரி ஒரு பெருமிதம். கவுரவமான உசரத்துலே பேரனை ஏத்திவிட்டுட்டதுலே ஒரு கவுரவம். ஒரு சந்தோஷம். தலைமுறை தலைமுறையா அடிமையாயிருந்த சாதியிலே ஒரு குலக்கொழுந்தை... மேடேத்திட்டோம். மே(ல்) நிலைக்குக் கொண்ணாந்துட்டோம். அருஞ்சுனை நாடான்னா, சும்மாவா? அருஞ்சாதனை செய்யாம வுடுவானா?'

தொங்கிப் போயிருந்த நரைத்த மீசையை இடது கையால் நீவினார். மேலாக முறுக்கி விட்டார். பெருமிதத்தில் விம்முகிற நெஞ்சு. நிமிர்கிற தலை. பார்வையில் ஒரு மின்னல். நெஞ்சுக்குள் லேசான கர்வம்.



பேரன் மீது கிழவருக்கு தனீ...ப் பாசம். இவன் ஒன்றும் ஒற்றைப் பேரனல்ல. அருஞ்சுனை நாடாருக்கு மகன்கள் இரண்டு. மகள் ஒன்று. பேரன் பேத்திமார் ஏழு பேர். ஆனாலும் இவன் மேல் சற்று தூக்கலான பிரியம். இவர் பெயரையே அவனுக்கு வைத்திருப்பதாலா? அதுவும் ஒரு காரணம். ஆனால், அது மட்டுமல்ல.

இவரது அம்மா சாயலில் பேரனின் முகம் இருப்பதா? இருக்கலாம். இவன் ஆறாப்பு படிக்கிறப்ப ஒருநாள் உற்சாகப் பிரளயமாக ஓடி வந்தான். மேல்சட்டையின் முதுகு காற்றில் புடைத்தது. மகிழ்ச்சியில் முகம் பூத்திருந்தது. கண்ணில் ஆனந்த மின்னல். ஒரே கொண்டாட்டமாக ஓடி வருகிறான்.

"என்னடா... இம்புட்டு ஆதாளி?"

"ஐயாப்பா... நாந்தா...ன் க்ளாஸ் பஸ்ட்."

அன்றைக்குத்தான். அவன் மீது ஒரு கூடுதல் வாஞ்சை விழுந்தது. நெஞ்சுக்குள் ஒரு நெகிழ்வு. அடிமைத்தனத்திலும், அவமதிப்புகளிலும் ரணப்பட்டு ரணப்பட்டு தழும்பாகிப் போயிருந்த மனசுக்குள், ஒரு சின்ன உயிர்த்துளி.

ப்ளஸ்டூ–வில் தொள்ளாயிரத்துக்கு மேல் மார்க். படிக்க வேண்டும் என்று பேரன் ஒற்றைக்காலில் நின்றான். கடைக்கே அனுப்புவதில் ரெட்டைக்காலில் நிற்கிற மகன்.

''ஏலேய்...'' என்று குறுக்கிடப்போன கிழவரை... "நீரு சும்மா கிடயும். ஒமக்கென்ன வலிக்கா? காலேஜ் படிப்புக்கு, கட்டுக்கட்டா ரூவா வேணுமே... எவங்கிட்டே இருக்கு?'' என்று சீறிச் சினந்த மகன்.

வெட்டுப்பட்ட பருத்திச் செடியாக வாடி நிற்கிற பேரன். கண்ணில் முட்டி நிற்கிற ஈரக்கனவு. வம்சத்துப் படிப்பாளி. வம்ச ரட்சகன்.

''ஏலேய்...'' கிழவரின் அதட்டலான குரல். "என்னோட அன்னவஸ்திரத்தை வித்துப் படிக்க வைடா... அவனை."

"ஒமக்கு?"

"ஏங் கடைசிக்காலம் எப்புடியானாலும் சரிடா. கீரை வித்துச் சீரழிஞ்ச நம்ம பரம்பரை... இவனாலேயாச்சும் நிமிரட்டும்டா..."

அருஞ்சுனை நாடாரை பாசத்தோடு வெறிக்கிற மகன்.

அருஞ்சுனை நாடார் உழைத்துச் சம்பாதித்த நிலம். காடுகரை, கிணறு, கூளப்படப்புகள், மாடு கன்றுகள் எல்லாம்... பஞ்சாயத்தார் முன்னிலையில் சமமாக பாகஸ்தம் நடந்துவிட்டது. அரைக் குறுக்கம் (ஏக்கர்) இறைவைப் புஞ்சையும், மூணு குறுக்கம் கரிசல்காடும் அருஞ்சுனை நாடாருக்கு அன்னவஸ்திரமாக ஒதுக்கப்பட்டது. கடைசிக்கால அன்னத்துக்கான – மானத்துக்கான கவசம்.

எந்தப் பிள்ளை கிழவரின் கடைசிக் காலத்துக்கு முழுப் பொறுப்பு ஏற்றுக் கொள்கிறானோ... அவனுக்கு அந்தச்

சொத்து. அதைத்தான் பேரனுக்காக தானம் செய்கிறார்.

* * *

**ஊ**ர் மடத்தில் ஒரு கடையும் இருக்கிறது. சின்னஞ்சிறிசுகள் வந்த வண்ணமாயிருக்கிறது. தினமும் பேப்பர் கிடைக்கிறது. மண்டிபோட்டு மனப்பாடம் பண்ணுகிற பெரிசுகள். சினிமாச் செய்தியை ருசிக்கிற இளசுகள். 'தங்கமலரை' மேய்கிற பொடிசுகள்.

சைக்கிள் வந்து நின்றது. கிளிப்பை தட்டுகிற இளவட்டம். பேண்ட், ஷர்ட், கறுப்பான பையன். கையில் காகிதக் கற்றை.

''அருஞ்சுனை நாடார்ங்குறது... நீங்கதானா?''

''ஆமா...''

''ப்ரம் அட்ரஸ்லேயும் 'அருஞ்சுனை'ன்னு இருக்கே?''

''அது எம்பேரன். காயிதம் போட்ருக்கானா?''

''ம். இந்தாங்க...''

நீலநிற கவர். வாங்கி, திருப்பித் திருப்பிப் பார்த்தார்.

'ஓர் இழவும் புரியவில்லை. எப்படி உடைக்க? எது வாய்ப்பக்கம்? தவறுதலா கிழிச்சுட்டா... மோசம் போயிருமே...'

''தம்பி... போஸ்ட்மேன் தம்பி... இதை கிழிச்சுக் குடுத்துட்டுப் போ. கிழட்டுக் கழுதைக்கு கண்ணும் பத்தலே... கையும் நடுங்குது.''

காகிதத்தைக் கண்ணுக்குப் பக்கத்தில் வைத்துக் கொண்டார்.

## தீபாவளியும் வெடியும்

**த**ஞ்சை சரசுவதி மகால் நூலகத்திலுள்ள ஆகாச பைரவ ஜல்பம் எனும் ஓலைச்சுவடியில் வாணவெடிகளைப் பற்றிய செய்திகள் உள்ளன.

ஒளி எனும் பொருள் தரும் சொல் மஹ்தாப் என்பது. இது உருதுச் சொல். இச்சொல்லில் இருந்துதான் மத்தாப்பு எனும் பெயர் வந்தது.

நம் தமிழ்நாட்டில் பட்டாசுக்குப் பெயர் பெற்றதாக விளங்கும் சிவகாசியில் பட்டாசு உருவாக்கும் தொழில் 1923-ம் ஆண்டு தொடங்கியது.

-தென்றல்.

'அன்புள்ள ஐயாப்பா அவர்களுக்கு,

உங்கள் பேரன் அருஞ்சுனை எழுதிக் கொள்வது...'

கடிதம் விரிகிறது, நீள்கிறது, படர்கிறது, எழுத்துகளுக்குள் பொங்கிப் பிரவகிக்கிற உணர்வுகள். நனவான கனவுகள். அவனது அனுபவங்கள். அபிப்பிராயங்கள்... அவன் இங்கு வரப்போவதாகத் தகவல். வருகிற தேதி. தாமதமான காரணம். ஜூலை 13-ந் தேதி வருவதாக எழுதியிருக்கிறான்.

'அப்படீன்னா... என்னிக்கு? இன்னிக்கு தேதி என்ன? நேத்து, ஆனி மாசம் 28-ந் தேதி. இன்னிக்கு ஆனி 29. ஜூலை 13-ன்னா தமிழுக்கு என்ன தேதி? இது என்னடா இழவு? ஒண்ணும் புரியமாட்டேங்குது.

படிச்சவன் சொல்ற தேதி, தமிழ் கிழவனுக்கு தெரிய மாட்டேங்குது. படிக்காத கெழவன் சொல்ற தமிழ் தேதி, படிச்சவங்களுக்குத் தெரிய மாட்டேங்குது... நல்ல கூத்துதான்.

படிப்பு... பேரனை தாத்தாவுக்கு அந்நியமாக்கிருமா? படிப்பு, பேரனை புதுமாதிரியா உருக்கி வார்த்திருமா? வேறு உலகவாசியாக்கிருமா? ஆனியை மறக்கடிச்சு... ஜூலை மனுசனாக்கிருமா?'

கடைக்காரனை சத்தம் போட்டு கூப்பிட்டார்.

''என்ன வளத்தையா?''

''இன்னிக்கு தேதி என்னடா?''

''இங்கிலீஷுக்கா, தமிழுக்கா?''

''இங்கிலீஷுக்கு''

''ஜூலை 13.''

அருஞ்சுனை நாடாருக்குள் ஒரு துள்ளல். மனக்குதூகலம். குபுக்கென்று ஒரு மகிழ்ச்சிச் சுனை பெருக்கெடுக்கிறது, குளிர்ச்சுனை.

அவர் மனசுக்குள் பேரனின் கடித வரிகள். வரத் தாமதமானதற்கு அவன் எழுதியிருக்கிற காரணம். 'அது நிசந்தானா? அதுவும் சாத்தியந்தானா? அப்படியும் நடக்குமா? நம்ம காலத்துலேயெல்லாம் வேற மாதிரி நடந்துச்சே...'

* * *

**மு**ழுத்த இளவட்டமாக இருந்த அருஞ்சுனை. தோண்டினால் நாலு கஜத்தில் தண்ணீர். தலா போட்டு முக்கி முக்கி இறைப்பான். இழுக்க... தூக்க... கவிழ்க்க... என்று நெஞ்சுக் கிடந்து இளைக்கும். கால் குறுக்கம் புஞ்சையில் சின்னச் சின்ன பாத்திகள். கீரை பயிரிடுவான். வரப்புகளில் சீனியவரைக்காய். ரெண்டு ஈரச்சாக்குகளில்



கீரையும் காயும். தலையில் ஒன்றும் முதுகில் ஒன்றுமாக சுமை. பாரத்தோடு மூச்சிரைக்க நடை. அக்கரைப்பட்டி. அய்யமார்தான் ஜாஸ்தி. ஆற்றோர ஊர். பெருமாள் கோவில். கண்மாய்ப் பாசன ஆயக்கட்டுகளில்... முக்கால்வாசி வயற்காடு, அய்யமார்களுக்குத்தான்.

கீரையும் காயும் வாங்குவார்கள். ஊருக்குள் நுழைந்துவிட முடியாது, கூடாது. ஊரோரத்தில் தள்ளி நின்று கொண்டு கத்தணும். தெருக்கோடி வரை கேட்கணும்.

“கீரை நாடா...ன் வந்துருக்கே...ன்.”

சொளகில் நெல். வலது கையில் செம்புத் தண்ணீர்.

பதினஞ்சு அடி தள்ளி வந்து ஓரிடத்தில் சொளகு நெல்லை வைத்து விட்டுப் போன பிறகுதான்... அருஞ்சுனை முன்னேறிப் போய்... சொளகு நெல்லை அளந்து சாக்கில் போட்டுக் கொண்டு... கீரையை சொளகில் அள்ளி வைக்கணும். இவன் பின்னால் பதினஞ்சு அடி திரும்பி வந்த பிறகு... சாமியவுக (ஐயர் மனைவியும் சாமிதான்) செம்புத் தண்ணீரோடு வந்து, ஜலம் தெளித்து, தீட்டு கழித்து கீரையை எடுப்பார்கள். இப்படியேதான் அருஞ்சுனை முன்னுக்கும் பின்னுக்குமாக நடந்து சாகணும். முப்பதடி தூரத் தீண்டாமையோடுதான் ஏவாரம்.

* * *

அப்ப அருஞ்சுனைக்கு வயசு நாற்பது இருக்கும். ஊருக்குள் கரண்டெல்லாம் வந்து, பம்ப்செட் வந்து, சாகுபடி நிலம் விரிந்து, மிளகாய், பருத்தி, கம்பு என்று வெள்ளாமையெல்லாம் வந்தாயிற்று. கடனும் வந்தாயிற்று. சொஸைட்டி கடன் வாங்க ‘பத்தொன்று அடங்கல்’ வேணும். அக்கரைப்பட்டி அய்யர்தான் முன்சீப். அவரிடம்தான் வாங்கணும்.

அப்ப... ஊருக்குள் போகலாம். தெருவில்தான் நிற்கணும். வாசல்படியைக் கூடத் தொடக்கூடாது. கால் வலித்தால்... வீட்டு முற்றத்தில் உட்காரலாம்.

அய்யருக்கு வயசு முப்பதுதான் இருக்கும்.

“என்னலே... சோணை?”

“சாமி, பத்தொண்ணு அடங்கல்...”

“வீட்டு வாசலுக்கு வந்துதான் கேக்கணுமோ? விட்டா, வீட்டுக்குள்ளேயே வந்து சம்மணம் போட்டுருவீகளோ? ஏன்டா...”

“இல்லே சாமி... அவசரம்...”

“தலையாரிகிட்ட சொல்லியனுப்பி, ரூவாயைக் குடுத்தனுப்புனா... வந்து சேரும்லே?”

கடுமையும் கோபமுமான அவரது பார்வை. அந்தச் சிவந்த முகம். சந்தனத் திருநீறு. அருஞ்சுனை குடல் பதறிப் போய் நிற்பான்.

திருத்தங்கல் முருகன் கோயிலுக்குள் நாடார்கள் நுழையக்கூடாது அப்ப. நுழைந்து சாமி கும்பிட்டு, வெட்டுப்பட்டு இறந்த நாடார் ஒருத்தர். மதுரை மீனாட்சியம்மன் கோவிலுக்குள் நுழைய முயன்று... அடிபட்டு, கல்லெறிபட்டு, காயம் பட்ட நாடார்கள்.

கதை கதையாகக் கேட்டிருக்கிற அருஞ் சுனை, அய்யர் என்றால் ‘அர்ச்சுனன் பேர்

## கங்கையின் சிறப்பு

இமயமலையில் 22,000 அடி உயரத்தில் கங்கை தோன்றி, அந்த இடத்திலிருந்து சுமார் 16 கி.மீ. தொலைவில் கங்கைக் கரையில் முதல் கோவில் அமைந்துள்ளது. 250 கி.மீ. கடந்து அரித்துவாரை அடைகிறது.

இமயத்தில் 10,300 அடி உயரத்தில் வெளிப்படுகையில் அதன் பெயர் பாகீரதி. தேவப்பிரயாகை எனுமிடத்தில் பாகீரதி நதி அலகநந்தா நதியுடன் இணைந்து கங்கையாகப் பாய்கிறது.



வங்காளத்தில் நுழைகையில் அதன் பெயர் பத்மாநதி. அதன்பின் பாகீரதி எனும் பெயருடன் வங்கக்கடலில் கலக்கிறது. அலகாபாத்தில் கங்கை யமுனையுடன் கலக்கிறது. அலகாபாத் வரை தெற்கு நோக்கிப் பாயும் கங்கை காசியைத் தொட வடக்கு நோக்கிப் பாய்வது அதிசயம்.

-ராஜம்.

பத்து' என்று நடுங்குவான். பதறிச் சாவான்.

இப்படி பிறந்துவிட்டோமே என்ற கசப்பு... எப்பவும் உண்டு, அருஞ்சுனைக்கு. இப்படி அவமானப்படவும் தூர ஒதுங்கி நிற்கவும்... நாமளும் மனுசங்கதானே? ஒடம்புல ஓடுறது செவப்பு ரத்தம்தானே? நாமும் பத்து மாசம் தானே? என்னத்துல கொறைஞ்சுட்டோம்? என்னத்துக்கு இந்த அவமானம்? ச்சேய்!

மனசு கிடந்து கசந்து அழறும். தன் பிறப்பின் மீதே காறித் துப்பத் தோன்றும்.

* * *

இப்ப, இப்ப காலம் மாறியிருக்கு. கீரைப் பாத்தி போட்டிருந்த அருஞ்சுனைக்கு வீடு, காடுகரை, மாடு கன்னு, சொத்து சுகம். அக்கரைப்பட்டி அய்யமார்கள், வந்த விலைக்கு வயற்காடுகளை விற்றுவிட்டு... படிப்பு, உத்தியாகம், தொழில் என்று டவுன்களுக்குப் பறந்துவிட்டார்கள். ஆனால்–

இப்பவும் அய்யர் என்றால், இவனுக்கு 'அர்ச்சுனன் பேர் பத்து' தான். பயம்தான். நடுக்கம்தான். தானாகவே தோள் துண்டு, கக்கத்துக்கு வந்து விடும். 'சாமி' என்று பவ்யமாகவே உச்சரிப்பான்.

ஆனால்...

நம்ம பயல் இப்படிக் காகிதம் எழுதியிருக்கிறான்.

அந்தப் பகுதியை வாசிக்க வாசிக்க, இவருக்குள் ஆச்சரியம். ஆன்மா சிலிர்த்து, உடம்பெல்லாம் புல்லரிக்கிற பரவசம். 'இப்படியும் நடந்துருக்கே' என்கிற பிரமிப்பு.

''வங்கிப் பணியில் சேர்ந்த புதிதில் தடுமாறித் தத்தளித்தேன். வங்கியில் பணியாற்றுகிற தொழிற்சங்கத் தலைவர் பாலசுந்தரம் அவர்கள்தான் தைரியம் தந்தார். பணி செய்யும் முறைகளைக் கற்றுக் கொடுத்தார். எனக்குள் வெளிச்சம் பாய்ச்சினார்.

இரண்டு மாதமாயிற்று. 'ஐயாப்பாவைப் பார்த்து ஆசீர்வாதம் வாங்க வேண்டும்' என்றேன். அவர், ரெண்டு நாள் கழித்துப் போகச் சொன்னார்.

விருந்து சாப்பிட வீட்டுக்கு வரச் சொல்லியிருந்தார். தடபுடலான விருந்து. பிராமண வீட்டு விருந்து என்றாலே, அது ஒரு தனிவாசம்தான். நெய்யும் பருப்பும் பாயசமும் அதன் ருசியே நன்றாக இருந்தது. அன்பும் பாசமும் வேறு தோழமையாக மணத்தது. அவரைப் போலவே அந்த மாமியும் தாய்மையின் பேருரு. கனிவே, அவர்கள் சுபாவம்.

அந்த விருந்து காரணமாகத் தாமதமாகப் புறப்பட வேண்டியதாகி விட்டது."

நாடாருக்கு இதை வாசிக்க வாசிக்க, உள்ளுக்குள் இன்பத் தத்தளிப்பு. முப்பதடி தூரத் தீண்டாமை... உழக்கில் தண்ணீர்... வாசலுக்கு வெளியே கக்கத்தில் துண்டோடு கூசி நின்ற கோலம்.

அய்யர் வீட்டில், நடுமையத்தில், என் பேரனுக்கு விருந்து. அன்பான உபசரிப்பு. என் பேரனுக்கு, நடுவீட்டில் விருந்து.

எப்படி? எப்படி? இதெல்லாம் எப்படி.

காலம் செய்த மாற்றமா? காலமாற்றக் குணமாற்றமா? கல்வியால் வந்த பண்பாட்டு நாகரீகமா? உத்தியோக ஒருமையால் வந்த சமத்துவமா?

எது காரணம்? எப்படி இந்த மாற்றம்? எப்படி இந்த அதிசயம்?

அவருக்குள் ஓரே குடைச்சல். சந்தோஷக் குடைச்சல். இன்பக் குறுகுறுப்பு. பரவச உறுத்தல்.

* * *

ஆறு மணி பஸ்ஸுக்கு வந்தான் பேரன் அருஞ்சுனை. காலில் பூட்ஸ். கறுப்பு சூட்டு. கட்டம் போட்ட முழுக்கை சட்டை. முதுகில் கனத்த பை. கையில் ஒரு சூட்கேஸ். டிப்டாப்பாக வந்தான். மடத்தில் உட்கார்ந்திருந்த கிழவரைப் பார்த்துச் சந்தோஷமாகச் சிரித்தான். அவன் உதட்டுக் கனிவில் மனசின் வெளிச்சம்.

"என்ன... ஐயாப்பா, எப்புடியிருக்கீக? எனக்காகத்தான் காத்துக்கிட்டிருக்கீகளா? காகிதம் கிடைச்சுதா? நல்லாயிருக்கீகளா?"

"இருக்கேன்டா... உன்னைப் பாத்துட்டுக்

## மேனி பளபளக்க...

அடிக்கடி இளநீர் குடித்து வர வேண்டும். இளநீரிலுள்ள சல்பர், கால்சியம், பாஸ்பரஸ், வைட்டமின்கள் உடல் பளபளப்பாவதற்கு உதவுகிறது என ஜெர்மனியில் மேற்கொண்ட மருத்துவ ஆராய்ச்சி தெரிவிக்கின்றது.

சிறிது தேங்காய்ப்பால் எடுத்து அத்துடன் கருப்பட்டி பொடித்திட்டு, சூடாக்கி ஆறினதும் குடித்து வர வாய்ப்புண் குணமாகும்.

–உத்ரா ஆனந்த், நாகர்கோவில்.

கண்ணு மூடணும்னு காத்துக்கிட்டிருக்கேன்."

"சரி. எந்திரிங்க ஐயாப்பா. நம்ம வீட்டுக்குப் போவம்."

கைத்தாங்கலாகத் தூக்கினான். பேரன் ஆதரவில் நடப்பதில் ஒரு சுகம். தன் ரத்தத்தின் அரவணைப்பில், ஓர் பெருமை. கீரைப்பாத்தி நாடார், பாங்க்கில் வேலை பார்க்கிற பேரன் மேல் சாய்ந்து நடப்பதில் ஒரு பரவசம் காண்கிறார்.

நனவான கனவு. கைகூடிய கற்பனை. தலைமுறைப் புதுமை.

அவருக்குள் இன்பக் குறுகுறுப்பு. உறுத்துகிற கேள்விகள். 'எப்படி இது?' என்று கேட்க ஆசை.

'இப்ப வேண்டாம். ஆசுவாசம் ஆகட்டும். பயணக் களைப்பு தீரட்டும். ஆற அமரக் கேட்போம், நாளைக்கு!'

* * *

"**நீ**ங்க கீரை வித்த கோலத்தையெல்லாம் பாலசுந்தரம் சார்கிட்ட சொன்னேன். 'நீங்க மட்டும் ஏன் இப்புடி மனுச சமத்துவத்தைக் கடைப்பிடிக்கிறீக?'னு கேட்டேன். அதுக்கு அவரு சொன்னதை அப்படியே சொல்லட்டா?"

"சொல்லு, சொல்லு, சொல்லு..." – சின்னப்பிள்ளை மாதிரி ஆவலாகப் பறந்தார் பெரியவர். அவர் கண்ணில் ஆர்வம். சுருக்கமும் நரைத்த ரோமமும் நிறைந்த முகத்தில் ஒரு மலர்ச்சி.

அவரது ஆவல் பறப்பை – ஆர்வப் பரபரப்பை – கண்ணுற்று பெரிய மனிதத் தோரணையில் கனிவாகச் சிரித்தான் பேரன்.

"நா சின்ன வயசுலேயிருந்து சிவப்பு சித்தாந்தத்துல ஊறிப்போன தொழிற்சங்க ஊழியன். மனுச நேயம் என்னோட சுபாவம். மனுச சமத்துவத்தை இயல்பாகவே கடைப்பிடிக்கிறேன். அதுக்காக... வர்ணாசிரம அடிப்படையிலே அமைஞ்சிருக்கிற சாதி ஏற்றத்தாழ்வு முழுசா மாறியிருச்சுன்னு நினைச்சிராதே..."

"கல்வியாலே... உத்தியோகங்களுக்கு எல்லா சாதியினரும் வந்ததாலே... கால நாகரீகம் மாறுனதனாலே சாதி உணர்வு கொறையலியா?"

"கொஞ்சம்தான் கொறைஞ்சிருக்கு. வர்ணாசிரம சித்தாந்தம் அவ்வளவு லேசுல சாய்ஞ்சிராது."

"அப்படியா சொல்றீங்க?"

ரவை உப்புமா செய்யும்போது ஒரு தக்காளிப்பழத்தை பொடியாக அரிந்து சேர்த்துக் கொண்டால் உப்புமா சூப்பர் சுவையாக இருக்கும். சத்தும் கூடும்.

**– ராதிகா அழகப்பன், விக்கிரமசிங்கபுரம்.**

"எளிய சாதி சனங்களைக் கட்டித் தழுவுன ராமானுஜர், 'எல்லா உயிர்களும் சமம்'னு கருணை காட்டுன வள்ளலார், ஆலயப் பிரவேசத்துக்கு ஆள் திரட்டுன வைத்தியநாத அய்யர், 'எல்லோரும் ஓர் குலம்'னு சொன்ன பாரதியார், 'தாழக் கிடப்போரைத் தாங்கிப் பிடிப்பதே தர்மம்'னு சொன்ன வைகுண்டநாதர் போன்ற பெரிய பெரிய மகான்களெல்லாம் இந்தச் சாதிய ஏற்றத்தாழ்வை எதிர்த்துத்தான் போராடுனாங்க.

ஈ.வெ.ரா.பெரியாரும், வ.உ.சி.யும் போராடுனாங்க. இப்ப, சிவப்பு சித்தாந்தம் போராடுது. மனுசனை மனுசனா நெனைச்சு, சமமா மதிக்குற மனுசநேய சித்தாந்தம் எல்லா சனங்க மனசுலேயும் வேர் புடிச்சாதான், சாதி உணர்ச்சி கொறையும்..."

பாலசுந்தரம் சொன்னதாகப் பேரன் சொல்லச் சொல்ல... அருஞ்சுனை நாடாருக்குள் திகைப்பு. இருட்டு. மருண்டு அலைபாய்கிற கண்கள், முகமெல்லாம் குழப்ப ரேகைகள்... புரியாத பாஷை, புரியாத சொற்கள்... புரியாத கருத்துலகம்.

"என்னடா ஒண்ணும் வெளங்க மாட்டேங்குது?"

"எனக்குந்தான் வெளங்கலே... 'போகப் போகக் காலமும் வாழ்க்கையும் வெளங்க வைக்கும்'னு பாலசுந்தரம் சார் தைரியம் சொல்றாரு..."

'எப்படியோ... எல்லா மனுசங்களும் சமம்னு வந்தா சரி' என்று பெருமூச்சுடன் நினைத்துக் கொண்டிருந்த நாடாருக்குள் பழைய நாட்கள்.

முப்பதடி தூரத் தீண்டாமை... முற்றத்தில் ஒதுங்கி, பதறி நின்ற நாட்கள்...

கெட்ட கனா கண்டவராக, பதறிப் பதைத்து மனம் குலுங்கிய அருஞ்சுனை நாடார் முன்பு, நல்ல கனாவாகப் பேரன் அருஞ்சுனை உட்கார்ந்திருக்கிறான்... வருங்காலக் குறியீடாக!

**(ஆனந்த விகடனில் முத்திரைச் சிறுகதையாக பரிசு பெற்றது.)**




மீனாட்சி. இல்லத்தரசி. இவரது கணவர் மீனாட்சிசுந்தரம். மின்வாரியத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர். இவர்களுக்கு ஒரே மகன். பெங்களூருவில் வசிக்கிறார்கள். இவருக்கு புதுவிதமாக சமையல் செய்யப் பிடிக்கும். கோலம் போடுவது, புத்தகங்கள் படிப்பது இவருக்கு பிடித்தமான ஒன்று. 'பெண்மணி' இதழுக்காக சில சமையல் குறிப்புகளை அனுப்பியுள்ளார். அதனை படித்து நாமும் ருசியான சமையல் செய்ய தெரிந்து கொள்வோமா !

## காலிபிளவர் அல்வா

**தேவையான பொருட்கள்:**

உதிர்த்த காலிபிளவர் – 1 கப், பால் – ½ கப், சர்க்கரை – ¾ கப், சர்க்கரை போடாத கோவா – சிறிதளவு, நெய் – 4 அல்லது 5 ஸ்பூன், ஏலக்காய் தூள் – ¼ ஸ்பூன், முந்திரிப்பருப்பு–4, கிஸ்மிஸ் பழம் – 4.



**செய்முறை:**

சுத்தம் செய்த காலிபிளவரை பொடியாக நறுக்கிக் கொள்ளவும். பால், சர்க்கரை இரண்டையும் ஒன்றாகக் கலந்து அடுப்பில் வைக்கவும். சர்க்கரை நன்கு கரைந்ததும் காலிபிளவரையும் கோவாவையும் போட்டு கிளறவும். சிறிது சிறிதாக நெய் சேர்க்கவும். காலிபிளவர் நன்கு வெந்து கெட்டியானதும் அடுப்பிலிருந்து இறக்கி ஏலக்காய்தூள் சேர்க்கவும். நெய்யில் முந்திரி, திராட்சை



(கிஸ்மிஸ்)யை வறுத்து அலங்கரிக்கவும். ருசி மிகுந்த காலிபிளவர் அல்வா தயார்.

## தினைப் பொங்கல்

**தேவையான பொருட்கள்:**

உமி நீக்கி சுத்தம் செய்த தினை அரிசி – 1 கப், பாசிப்பருப்பு – 3 ஸ்பூன், வெல்லம் – 1¼ கப், நெய் – 5 அல்லது 6 ஸ்பூன், முந்திரிப்பருப்பு – 4, திராட்சை –



4, ஏலக்காய் தூள் – ½ ஸ்பூன், சுக்குத்தூள் – சிறிதளவு.

**செய்முறை:**

பாசிப்பருப்பை லேசாக வறுத்துக் கொள்ளவும். குக்கரில் நான்கு கப் தண்ணீர் விட்டு கொதித்ததும் அதில் அரிசியையும், பருப்பையும் களைந்து போட்டு மூடி வேக வைத்துக் கொள்ளவும்.

வெல்லத்தைத் தட்டி சிறிதளவு கொதிநீரில் போட்டு நன்றாக கரைந்ததும் வடிகட்டி வெந்த பொங்கலில் ஊற்றி வெல்ல வாசனை போகும்வரை கிளறி இறக்கவும். பின்பு நெய்யில் வறுத்த முந்திரி, திராட்சை, ஏலக்காய்தூள் முதலியவற்றை பொங்கலில் கலந்து பரிமாறவும். சுவையான சத்துமிகுந்த தினைப் பொங்கலை அனைவரும் விரும்பி சாப்பிடுவார்கள்.

## பீட்ரூட் கேரட் டிக்கியா

**தேவையான பொருட்கள்:**

பீட்ரூட், கேரட் துருவல் – தலா 100 கிராம், பொடியாக நறுக்கிய வெங்காயம் – ¼ கப், பச்சை மிளகாய் – 5 அல்லது 6 (பொடியாக நறுக்கவும்), கரம் மசாலாத்தூள் (விருப்பப்பட்டால்) – ½ ஸ்பூன், பொடியாக நறுக்கிய கொத்தமல்லித்தழை – சிறிதளவு, தேங்காய்த்துருவல் – 2 ஸ்பூன், வேகவைத்து உதிர்த்த உருளைக்கிழங்கு – 100 கிராம், பிரெட் தூள் – சிறிதளவு, எண்ணெய், உப்பு – தேவைக்கேற்ப.

**செய்முறை:**

துருவிய பீட்ரூட், கேரட் இரண்டையும் கட்டியில்லாமல் உதிர்த்த உருளைக்கிழங்குடன் கலந்து கொள்ளவும். அதனுடன் வெங்காயம், உப்பு, பச்சைமிளகாய், தேங்காய்த்துருவல், மல்லித்தழை, கரம் மசாலாத்தூள் அனைத்தையும் சேர்த்து நன்கு பிசைந்து சிறுசிறு உருண்டைகளாக்கிக் கொள்ளவும்.

பின்பு ஒவ்வொரு உருண்டையையும் தட்டையாகத் தட்டி பிரெட் தூளில் புரட்டிக் காய்ந்த தோசைக்கல்லில் போட்டு சுற்றிலும் எண்ணெய்விட்டு இருபுறமும் சுட்டு எடுக்கவும். இது மாலை நேரத்திற்கு ஏற்ற சிற்றுண்டி.

## சவ்சவ் தேங்காய்ப்பால் அல்வா

**தேவையான பொருட்கள்:**

முற்றிய தேங்காய் – 1, பிஞ்சு சவ் சவ் (மேலே முள் இல்லாதது) – ¼ கிலோ, பச்சை கற்பூரம் – 1 சிட்டிகை, சர்க்கரை – 200 கிராம், நெய் – 50 கிராம்,



முந்திரிப்பருப்பு – 10.

**செய்முறை:**

சவ்சவ்வை தோல் சீவி கேரட் துருவியில் துருவி, ஒரு ஸ்பூன் நெய் விட்டு வதக்கவும். தேங்காயை துருவி மிக்ஸியில் அரை டம்ளர் வெந்நீர் விட்டு அரைத்து முதல் பால் எடுக்கவும். மறுபடியும் வெந்நீர் விட்டு அரைத்து இரண்டாம் பால், மூன்றாம் பால் எடுக்கவும். வாயகன்ற பாத்திரத்தில் முதல் பாலை விட்டு பிரிட்ஜில் ஒன்றரை மணி நேரம் வைக்கவும். மேலே கிரீம் படிந்து வரும். அதை ஸ்பூனால் வழித்து எடுத்து கொண்டு அடியில் தங்கிய பாலை இரண்டாம் பாலுடன் கலக்கவும். (இதை அடுத்து செய்யும் இனிப்பில் பயன்படுத்தலாம்.)

சர்க்கரையை இரட்டை கம்பிப்பாகு வைத்து அதில் சவ்சவ், தேங்காய் கிரீம், தூளாக்கிய பச்சை கற்பூரம் சேர்த்து நெய் விட்டுக் கிளறி அல்வா பதம் வந்ததும் தாம்பாளத்தில் கொட்டவும். முந்திரியை இரண்டிரண்டாக உடைத்து, சிறிது நெய்யில் வறுத்து எடுத்து ஒவ்வொரு துண்டின் மேலும் செருகி பரிமாறவும். பண்டிகை காலங்களில் செய்வதற்கு ஏற்ற இனிப்பு இது.

– எஸ். கனகவல்லி, திருச்சி.



> பாயசம் செய்யும் போது அதில் கொஞ்சம் பாதாம் மிக்ஸ் சேர்த்தால் பாயசம் திக்காக, சுவையாக இருக்கும்.
>
> தேங்காயுடன் கொஞ்சம் பால் விட்டு அரைத்து தேங்காய் பர்பி செய்தால் வெள்ளையாக இருக்கும்.
>
> –பி.சந்திரகலா, சென்னை.

## மல்டி கிரையின் குழம்பு

**தேவையான பொருட்கள்:**

கொண்டக்கடலை, பச்சை நிலக்கடலை, பட்டாணி, சோயாபீன்ஸ், தட்டாம் பயறு (எல்லாம் சேர்த்து) – 2 கப், புளி – ஒரு பெரிய எலுமிச்சை அளவு, சாம்பார் பொடி – 3 ஸ்பூன், பெருங்காயம் – சிறிதளவு, மஞ்சள்தூள் – ¼ ஸ்பூன், தேங்காய்த்துருவல் – 4 ஸ்பூன், பழுத்த தக்காளி – 2 அல்லது 3, பச்சை மிளகாய் – 2, கடுகு, உளுத்தம் பருப்பு – 1 ஸ்பூன், இரண்டிரண்டாக நறுக்கிய சின்ன வெங்காயம் – 6, கருவேப்பிலை – சிறிது, எண்ணெய் – 3 ஸ்பூன், உப்பு – தேவையான அளவு.

**செய்முறை:**

பயறு வகைகளை ஏழு மணிநேரம் ஊற வைத்து களைந்து குக்கரில் போட்டு தேவையான அளவு தண்ணீர் விட்டு சிறிதளவு உப்பு சேர்த்து நன்றாக வேகவிடவும். புளியை இரண்டரை கப் தண்ணீர் விட்டுக் கரைத்து கொதிக்க விடவும். பச்சை வாசனை போனதும் உப்பு, சாம்பார் பொடி, பெருங்காயத்தூள், மஞ்சள்தூள் சேர்க்கவும். குழம்பு கொதிக்கும் பொழுது வேகவைத்துள்ள பயறு வகைகளை சேர்க்கவும்.

தேங்காய், பச்சைமிளகாய், தக்காளி மூன்றையும் நைசாக அரைத்துக் குழம்புடன் சேர்க்கவும். சிறிது கெட்டியானதும் இறக்கி வைக்கவும். எண்ணெயில் கடுகு, உளுத்தம் பருப்பை தாளித்து நறுக்கிய வெங்காயம், கருவேப்பிலையை போட்டு வதக்கி குழம்புடன் கலக்கவும்.

சாதத்தில் ஊற்றி சாப்பிடலாம். இட்லி, தோசை, சப்பாத்தி ஆகியவற்றிற்கும் ஏற்ற மணமான சைடு டிஷ் இது.

## ராகி மாவு அடை

**தேவையான பொருட்கள்:**

கடலைமாவு – ½ கப், அரிசிமாவு – ¼ கப், ராகி மாவு – ¾ கப், பொடியாக நறுக்கிய வெங்காயம் – ½ கப், பொடியாக நறுக்கிய பச்சைமிளகாய் – 1 ஸ்பூன், கருவேப்பிலை, கொத்தமல்லித்தழை – சிறிதளவு, நெய் – 1 ஸ்பூன், எண்ணெய், உப்பு – தேவையான அளவு.

**செய்முறை:**

மாவு வகைகள் அனைத்தையும் ஒரு அகலமான பாத்திரத்தில் போட்டு அத்துடன் வெங்காயம், பச்சைமிளகாய், உப்பு, கருவேப்பிலை, மல்லித்தழை, நெய் அனைத்தையும் கலந்து சிறிதளவு தண்ணீர் விட்டு தளர பிசைந்து கொள்ளவும். ஒரு பிளாஸ்டிக் ஷீட்டில் சிறிது எண்ணெய் தடவி பிசைந்த மாவில் ஒரு பெரிய எலுமிச்சம்பழம் அளவு எடுத்து தட்டி காய்ந்த தோசைக்கல்லில் போட்டு எண்ணெயை சுற்றிலும் விட்டு வேக வைத்து எடுக்கவும்.

இந்த சத்தான அடையை குழந்தைகளுக்கு செய்து கொடுக்கலாம்.

## குட்டி குட்டி தட்டை

**தேவையான பொருட்கள்:**

மைதா மாவு – 1 கப், ரவை – ½ கப், அரிசிமாவு – ¼ கப், கார்ன்பிளார் – 2 ஸ்பூன், மிளகுத்தூள் – 1 ஸ்பூன், பெருங்காயத்தூள் – ¼ ஸ்பூன், நெய் – 2 ஸ்பூன், எண்ணெய் – பொரிக்க, உப்பு – தேவைக்கேற்ப.

**செய்முறை:**

மைதா, ரவை, அரிசிமாவு, கார்ன்பிளார் ஆகியவற்றை ஒன்றாகக் கலந்து உப்பு, மிளகுத் தூள், பெருங்காயத்தூள், நெய் எல்லாவற்றையும் சேர்த்து சிறிதளவு தண்ணீர் விட்டு கலந்து கெட்டியாகப் பிசைந்து கொள்ளவும். பின்பு கோலி குண்டு அளவு மாவை எடுத்து உள்ளங்கையில் வைத்துக் கட்டை விரலால் அழுத்தினால் சிறுதட்டை போல் வரும். இதே மாதிரி எல்லா மாவையும் தட்டையாக செய்து காய்ந்த



எண்ணெயில் பொரித்தெடுக்கவும்.

பள்ளி விட்டு வரும் குழந்தைகளுக்கு கை நிறைய அள்ளிக் கொடுக்கலாம். மிளகுத் தூளுடன் சிறிது மிளகாய் தூளும் சுவைக்காக சேர்த்துக் கொள்ளலாம்.

## ஆந்திரா தக்காளி தொக்கு

**தேவையான பொருட்கள்:**

நன்கு பழுத்த தக்காளி – ½ கிலோ, பொடியாக நறுக்கிய பூண்டு – *10* அல்லது *15*, மிளகாய்தூள் – *3* அல்லது *4* ஸ்பூன், மஞ்சள் தூள் – ½ ஸ்பூன், மிளகாய் வற்றல் – *7* அல்லது *8*, பெருங்காயத்தூள் – சிறிதளவு, வறுத்துப் பொடித்த வெந்தயத்தூள் – ¼ ஸ்பூன், கடுகு – ½ ஸ்பூன், நல்லெண்ணெய் – *100* கிராம், உப்பு – தேவைக்கேற்ப.

**செய்முறை:**

தக்காளியை நன்கு அலம்பி, நான்கு துண்டுகளாக நறுக்கி வெதுவெதுப்பான நீரில் போட்டு சிறிது நேரம் மூடி வைக்கவும். பின்பு தக்காளியைத் தோலை நீக்கிக் கைகளால் நன்கு பிசைந்து கொள்ளவும். (மிக்ஸியில் அரைக்க வேண்டாம்.)

வாணலியில் முக்கால் பங்கு நல்லெண்ணெயைக் காயவைத்து கடுகு தாளித்து, பெருங்காயத்தூள், வெந்தயத்தூள், நறுக்கிய பூண்டில் பாதி அளவு, தக்காளி விழுது, மிளகாய்பொடி, மஞ்சள்பொடி, உப்பு எல்லாவற்றையும் போட்டு எண்ணெய் பிரியும் வரை நன்கு வதக்கவும். கெட்டியானதும் இறக்கி விடவும்.

மற்றொரு வாணலியில் மீதமுள்ள எண்ணெயை விட்டு காய்ந்ததும் மீதமுள்ள பூண்டு, மிளகாய் வற்றலைப் போட்டு நன்றாக வதக்கி தக்காளி தொக்கில் கலந்து விடவும். காரசாரமான தக்காளி தொக்கு தயார். இட்லி, தோசை, சப்பாத்திக்கு ஏற்ற காம்பினேஷன்.

> அதிரச மாவுக்கலவையுடன் நான்கு தேக்கரண்டி பால்பவுடர் சேர்த்து நன்கு கலந்து செய்தால், அதிரசம் சூப்பர் சுவைதான்.
>
> ஜாங்கிரிக்கு மாவு பிசையும் போது மூன்று தேக்கரண்டி எலுமிச்சைச்சாறு விட்டு நன்கு கலந்து ஜாங்கிரி சுட்டு எடுத்தால் சுவை தூக்கலாக இருக்கும். எளிதில் ஜீரணமாகும்.
>
> – *ராதிகா அழகப்பன், விக்கிரமசிங்கபுரம்.*

## புளித் துவையல்

**தேவையான பொருட்கள்:**

தேங்காய்த்துருவல் – *1* மூடி, பச்சை மிளகாய் – *4* அல்லது *5*, புளி – கோலிகுண்டு அளவு, கடுகு, உளுத்தம்பருப்பு – ½ ஸ்பூன், எண்ணெய் – *3* ஸ்பூன், உப்பு – தேவைக்கேற்ப.

**செய்முறை:**

தேங்காய், பச்சை மிளகாய், உப்பு, புளி எல்லாவற்றையும் உப்பு சேர்த்து மிக்ஸியில் நைசாக அரைத்தெடுக்கவும். வாணலியில் எண்ணெய் ஊற்றிக் காய்ந்ததும் கடுகு, உளுத்தம்பருப்பு தாளித்து அரைத்த துவையலை போட்டு சிறிது தண்ணீர் விட்டு நன்றாக வதக்கவும். கெட்டியானதும் இறக்கி விடவும்.

தயிர் சாதத்திற்கு தொட்டுக் கொள்ள அருமையாக இருக்கும்.

## தயிர்ச் சட்னி

**தேவையான பொருட்கள்:**

தேங்காய்த்துருவல் – *1* மூடி, பச்சை மிளகாய் – *3* அல்லது *4*, தயிர் – *1* கப், கடுகு, உளுத்தம்பருப்பு – ½ ஸ்பூன், எண்ணெய் – *1* ஸ்பூன், உப்பு – தேவையான அளவு.

**செய்முறை:**

தயிரை கடைந்துக் கொள்ளவும். தேங்காய்த்துருவலுடன் பச்சைமிளகாய், உப்பு சேர்த்து நைசாக மிக்ஸியில் அரைத்து தயிரில் சேர்த்து கடுகு, உளுத்தம்பருப்பைத் தாளித்து கலக்கவும்.

இட்லி, தோசைக்குத் தொட்டுக் கொள்ள சூப்பராக இருக்கும். *

# சாத்திரப்படி தீபாவளி கொண்டாடுவது எப்படி?



தீபாவளி நன்னாள் ஆன்மா தூய்மை பெறும் திருநாள் ஆதலால் அந்நாளில் நாம் செய்ய வேண்டிய கடமைகள் என சாத்திரங்கள் கூறுவன இவை:

தீபாவளி நாளில் அதிகாலைப் பொழுதில் அதாவது பிரம்ம முகூர்த்தம் எனப்படும் 4.30 மணி முதல் 6 மணி வரை உள்ள காலகட்டத்தில் எழ வேண்டும்.

விழித்தெழுந்ததும் உள்ளங்கைகள் இரண்டையும் பார்த்து,

**'கராக்ரே வசதே லட்சுமி கரமத்யே சரசுவதி**

**கரமூலது கௌரியாத் ப்ரபாதே கூரதர்சனம்'** எனும் இரண்டு வரிகளைச் சொல்லி, இரண்டு கைகளையும் தாமரைபோல் விரித்துப் பார்க்க வேண்டும்.

பிறகு பல் துலக்கி விட்டு குடங்களில் நீர் நிரப்பி கங்கா தீர்த்தம் இருந்தால் அதில் கலந்திடலாம். இல்லாவிடில் மந்திரார்த்தமாக அதைச் செய்ய வேண்டும்.

**'கங்கேச யமுனே சைவ கோதாவரி சரசுவதி நர்மதே சிந்து காவேரி தீர்த்தேஸ் மின் சந்நிதிம் குரு'**

எனும் மந்திரத்தைக் குடத்தின் வாயில் கைவைத்தவாறு மூன்று முறை சொல்ல வேண்டும். இதன் பொருள், புண்ணிய நதிகளே, கங்கை, யமுனை, கோதாவரி, சரசுவதி, நர்மதை, சிந்து, காவேரி ஆகிய நீங்கள் இந்த நீரில் சங்கமிக்க வேண்டும் என்பதாகும்.

வாங்கி வந்துள்ள புத்தாடைகள், வெடிகள், இனிப்புகளை வைத்து ஒரு கணம் நரகாசுரனை நினைக்க வேண்டும்.

கங்கை நீரில் நாம் குளிக்கும் முன் அதை வீரியமுள்ளதாகச் செய்ய நன்னாரிவேர், வெட்டிவேர், மரமஞ்சள், அகில், தேவதாரு, கஸ்தூரி மஞ்சள், பூலாங்கிழங்கு, ரோஜா இதழ் ஆகியன நறுக்கிப் போட வேண்டும். (இவை அனைத்துமே நாட்டு மருந்துக் கடைகளில் கிடைக்கும். இந்நீரைத் தலையில் ஊற்றிக் கொள்வதால் நம் வறுமை அகலுவதுடன் உடல் உபாதைகள் விலகி விடும்.)

பிறகு எண்ணெய் தேய்த்து, இடுப்பில் ஆடை கட்டிக் கொண்டு நீராட வேண்டும்.

நீராடுகையில்,

**'த்வஜ வஜ்ராங்கு லோஷ்யபாத பம்மம்**

**கநிர் மலம் தத்பாத பத்மஜாம்**

**கங்காம் நிபதந் தீம் ஸ்வமூர்த்தி**

**சிந்தயேத் ப்ரம்ம சந்த்ரேண ப்ரவிசதீம்**

**ஸ்வகரம் தநும் த்யா சம்ஷாணிதம்**

**த்யாயேத் பாஹ்ய மாப்யந்தரம் மலம்'**

எனும் துதியைச் சொல்ல வேண்டும். பிறகு புத்தாடை அணிந்து நெற்றிக்குறி இட வேண்டும்.

விபூதி அணிபவராயின் 'ஓம் நமச்சிவாய' என்று கூறி, **'த்ரியம்பகம் யஜாமஹே சுகந்திம் புஷ்டிவர்த்த நம் உர்வாருகமி வந்தனாத் ம்ருத்யோர் முக்ஷீய மாம்ருதாத்'** எனக் கூறிய பின் இட வேண்டும்.

திருமண் அணிபவராயின்,

**'ஓம் நமோ நாராயணாய, வாசுதேவாய, லக்ஷ்மீ நாராயணாய நமோ நமஹ'**

என்று சொல்லித் திருமண் அணிய வேண்டும்.

அதன்பின் சுவாமிப்படத்தின் முன் நின்று தினமும் சொல்லும் இஷ்டதெய்வ சுலோகங்கள் சொல்லலாம். திருமாலையும், ஈசுவரனையும், திருமகள், குபேரனையும் வணங்கிய பின் பெரியவர்களை வணங்க வேண்டும்.

தீபத்தை வணங்குகையில் **'தீபதேவி மகாதேவி சுபம் பவது மேசதா - மகாலட்சுமி ரூபேண சவுக்யம் தேகிமே ததா'** என்று சொல்ல வேண்டும்.

பிறகு அருகில் உள்ள ஆலயம் சென்று வந்தபின் உறவினர்களைக் கண்டு தீபாவளி நல்வாழ்த்துகள் கூறல், இனிப்பு வழங்குதல் செய்ய வேண்டும்.

*-ரமணி புனிதகுமாரி.*

இரண்டு வீடு தள்ளி பிரமாண்டமாய் வளர்ந்து கிளை பரப்பியிருந்த தூங்குமூஞ்சி மரத்தின் பிங்க் நிற பூக்கள்... இந்த வீட்டு வாசலில் போடப்பட்டிருந்த வண்ணக்கோலத்தின் மீது சிதறியிருந்த அழகு... மாடர்ன் ஆர்ட் மாதிரி இருந்தது.

சற்றே சற்று தொலைவில் இருந்த கடல் அனுப்பிய காற்று... வியர்வையை துடைத்துக் கொண்டிருந்தது.

சாந்தோம் பகுதி!

அகன்ற தெருவின் மையத்தில் இருந்த வீடு... ரொம்பவே களைகட்டியிருந்தது. ஏதேனும் விசேஷமோ என எண்ணும்படியான உற்சாகம் வாசல்தாண்டி வியாபித்திருந்தது.

பூஜையறையில் வீற்றிருந்த சாமி சிலைகள் கஸ்தூரியும், தவனமும் சேர்த்து கட்டப்பட்ட மாலைகளை அணிந்துக் கொண்டு, ஜம்மென்றிருந்தது. அவர்களின் கவனமெல்லாம் தங்கள் எதிரே அமர்ந்து வீணையை இசைத்துக் கொண்டிருந்த தான்யாஸ்ரீ மீதே இருந்தன.

'நம்மால் சிருஷ்டிக்கப்பட்ட இந்த பெண் என்ன அழகாய் வளர்ந்து, என்ன அற்புதமாய் இசைக்கிறாள்?' கடவுள்களுக்கே ஆச்சர்யம்!

தலைகுளித்து... காய்வதற்காக... கொஞ்சமாய் சேர்த்து க்ளிப் போட்டு, படரவிட்டிருந்த கூந்தல்...





# என் வானத்து வெள்ளி நிலவு!

**– ஆர். மணிமாலா**

தரையைத் தொட்டிருந்தது.

தலையசைத்தபடி... விரல்கள் வீணையை மீட்ட... அந்த நிலையில் தான்யாஸ்ரீயை பார்ப்பவர்கள்... பெண்ணாகவே இருந்தாலும்... அவளை சில மணித்துளிகள் ரசிக்காமல் இருக்க மாட்டார்கள்.

இப்போதைய பேஷனில் வந்திருக்கும் பாவாடை தாவணி. உடைக்கேற்ற இளநீலநிற கல் கொண்ட சின்ன தோடு. கழுத்தில் அதே நிறத்தில் மெல்லியதாய் நெக்லஸ். நீண்ட விரல்களில்... வளர்க்கப்பட்ட நகங்களில்... நீல வண்ண க்யூடெக்ஸ். அவை அழகாய் வீணை நரம்புகளை மீட்டும் போது... அபிநயம் பிடித்து நடனமாடுவது போலவே இருந்தன.

குத்துவிளக்குகளில்... ஐந்து முக திரிகளில் ஏற்றப்பட்டிருந்த தீபம்...

ஆடாமல், அசையாமல் வீணையின் நாதத்தை ரசித்தன.

விஜயனுக்கும் சரி, பத்மினிக்கும் சரி... மகளின் வீணை வாசிப்பு என்றால் சோறு தண்ணியே வேண்டாம். விஜயன் குளித்து முடித்து... உடம்பில் சரிவர துடைக்காததால்... கவ்வியிருந்த நீர்முத்துக்களுடன், ஹால் சோபாவில் அமர்ந்து விட்டார்.

பத்மினிக்கும் ஆவலாய் இருந்தது. ஆனால், அன்றைக்கு நலங்கு இருந்ததால், அதற்கான வேலைகளில் இறங்கியிருந்தாள். இருந்தாலும் அவ்வப்போது அங்கே எட்டிப் பார்ப்பதும், விரல்கள் தாளமிடுவதும், தலையை அசைப்பதும் அனிச்சையாய் நடக்கவே செய்தது.

ஹாலை ஒட்டி... கூடம்! பித்தளை சங்கிலியால் கட்டப்பட்ட தேக்குமர ஊஞ்சல். அதில் அமர்ந்து சன்னமாய் ஆடிக் கொண்டிருந்த காவ்யாஸ்ரீ... ஏதோ யோசனையில் ஆட்பட்டிருந்தாள். வீணையின் நாதம்... அவளை கொஞ்சமும் அசைக்கவில்லை.

கல்யாணப் பெண் என்பதால் அவளை யாரும் தொந்தரவுச் செய்யவில்லை.

விஜயன் ரிடையர்டு கவர்ன்மெண்ட் சர்வண்ட்! அதுவும் வாலண்டரி ரிடையர் மெண்ட்! சர்வீஸ் முடிய இன்னும் ஏழெட்டு வருடங்கள் மிச்சமிருந்தன. முதுகு தண்டுவடத்தில் தீராத வலி! டாக்டர்கள் அறிவுரைப்படி ஓய்வு அவசியம் என கூறியதால்... அந்த முடிவு எடுக்க வேண்டியதாய் இருந்தது.

சொந்தவீடு! தாத்தாவுக்கு தாத்தாவின் சொத்து! அந்தக் காலத்தில் முற்றம், தாழ்வாரம் என்று விசாலமாய் கட்டப்பட்ட, பர்மா தேக்கினால் பளபளத்த வீடு.

வசதியாய், உறுதியாய் இருந்ததால்... ஆல்டர் என்ற பெயரில் வீட்டை ரணமாக்காமல், பெயிண்டும், வார்னிஷும் மட்டுமே பயன்படுத்தி உயிர்ப்புடன் வைத்திருந்தார். நேரடி வாரிசு விஜயன் மட்டுமே! உடன்பிறந்தவர்கள் என்று யாருமில்லை. ஆனால், அதற்கு மாறாக பத்மினி அக்கா, அண்ணன், மாமா, தம்பி, தங்கை என பெரிய உறவுக் கூட்டத்தில் பிறந்தவள்.

பெரிய பெண் காவ்யாஸ்ரீ... படித்துவிட்டு நல்ல பணியில் இருப்பவள். கைநிறைய சம்பளம். திருமணத்திற்கு பிறகு, வேலைக்குப் போகலாமா, வேண்டாமா? என்பதை முடிவுச் செய்யவில்லை. மாப்பிள்ளை வீட்டினரும் அதைப்பற்றி பேசவில்லை.

கல்யாணத்திற்கு இன்னும் நான்கைந்து நாட்களே உள்ளன. அதற்காகத்தான் பெங்களூருவில் இருந்து வந்திருந்தாள் தான்யா.

தான்யா பி.பி.ஏ. முடித்து விட்டு, அடிஷனலாய் பியூட்டி கோர்ஸும் படித்திருந்தாள்.

பத்மினியின் அக்காள் மகள் யுவனியும் பியூட்டி கோர்ஸ் முடித்து விட்டு தனியே சொந்தமாய் பியூட்டி பார்லர் ஆரம்பித்திருந்தாள்.

அவள் வீடு பெங்களூருவில்! பத்மினியின் அக்கா கோகிலாவை அந்த ஊரில்தான் கட்டிக் கொடுத்திருந்தனர்.

விடுமுறை காலங்களில் காவ்யாவும், தான்யாவும் அங்கே சென்று விடுவதுண்டு.

எப்போதும் கிச்சு கிச்சு மூட்டும் அந்த ஊரின் சீதோஷ்ணம் தான்யாவை பெரிதும் கவர... யுவனி தன் தொழிலில் பார்ட்னராக வருகிறாயா? எனக் கேட்டுவிட,

அதுபோதாதா தான்யாவிற்கு? பெட்டியும், தோள்பையுமாய் கிளம்பி விட்டாள். பெற்றவர்களுக்கு அப்படி மகளை தனித்துவிட மனசில்லைதான்.

‘என் செல்ல அம்மாயில்லே? என் தங்க அப்பாயில்லே?’ என்று ஓவராய் கெஞ்ச... யார்தான் மனமிரங்க மாட்டார்கள்?

அதுவும் பத்மினியின் சொந்த அக்கா பெண் வேறு! ஈகோவிற்காகவாவது... பெண்ணின் பக்கம் சப்போர்ட் பண்ணியாக வேண்டுமே!

சும்மாச் சொல்லக் கூடாது. கடவுள் தான்யாவின் விரல்களில் ஏதோ மந்திரம் போட்டுதான் அனுப்பி இருக்கிறார்.

அவள் த்ரெட்டிங் செய்தால்... புருவம் அற்புதமாய் வளைந்து கொடுக்கிறது. பேஷியல் செய்தால்... முகத்து கரும்புள்ளிகள் காணாமல் போய் பளபளக்கிறது. மெஹந்தி போட வேண்டுமா? அதற்கு அவளை அடித்துக் கொள்ள ஆளே இல்லை. விரைவாய் நேர்த்தியாய்... கல்யாண சடங்குகளையும், ஊர்வலத்தையும் கைகளில் கொண்டு வந்து விடுவாள்.

பார்லருக்கு யார் வந்தாலும் தான்யாவைத்தான் தேடுவார்கள். அவள் இப்போது அங்கில்லாதது யுவனிக்கு கை உடைந்தமாதிரி.

இருவரும் மாதக்கணக்கில் பின்தங்கி இருந்தாலும் ஒரே வயதினர்தான். அதனால் அவர்களுக்குள் எந்த ஒளிவு

மறைவும் இல்லை. பார்லரைப் பார்த்துக் கொள்ள வேண்டுமென்பதால், யுவனி திருமணத்தன்றுதான் வருகிறாள்.

காவ்யாவிற்கும், தான்யாவிற்கும் ஒன்றரை வயதுதான் வித்தியாசம் என்றால் யாரும் நம்ப மாட்டார்கள்.

பார்க்க ட்வின்ஸ் போலவே இருப்பார்கள். உயரம், நிறம், கூந்தல், முக அமைப்பு, உடல் அமைப்பு... எல்லாமே அச்சில் வார்த்ததுப் போல இருக்கும். சில சமயம் பெற்றவர்களுக்கே கண்டுபிடிக்க முடியாது. அது குரல் வித்தியாசம் மூலம்தான் அடையாளம் காண இயலும்.

அதேபோல் அவரவர் விருப்பங்களும் மாறுபட்டவைதான்.

தான்யா எப்போதும் கலகல! எதையாவது அறிந்து கொள்ளும் ஆர்வம். முக்கியமாய் வானவெளியில் புதைந்திருக்கும் ரகசியங்களை கண்டறிய பேராவல். தினசரிகளில் வால் நட்சத்திரம் பற்றி தகவல் போட்டிருந்தால், விழித்திருந்து அதைக் காண தவமிருப்பாள். அதே சமயம் விட்டுக் கொடுத்து போகும் குணமும் அதிகம்.

காவ்யா கொஞ்சம் அமைதி! புத்தகப்புழு. தமிழ் அல்லது ஆங்கில நாவல் எப்போதும் அவள் ஹேண்ட் பேகில் இருக்கும். சினிமா பிடிக்கும். சாப்பாட்டில் நான்-வெஜ் இஷ்டம். பிடிவாத குணம். நினைத்ததை சாதிப்பாள்.

ஆனால், திருமண விஷயத்தில் அவள் பிடிவாதம் எடுபடவில்லை. நினைத்ததை சாதிக்கவும் முடியவில்லை.

தான்யா வாசிப்பை முடித்து விட்டு, வீணையை பயபக்தியுடன் அதனிடத்தில் சார்த்தி விட்டு கைகூப்பி வணங்கி... டைனிங் ஹாலுக்கு வந்தாள்.

அவளுக்கு முன்பே விஜயனும், காவ்யாவும் அமர்ந்திருந்தனர்.

அம்மா... உணவு பாத்திரங்களை டேபிள் மீது வைத்தபடி... செல்போனில் யாரிடமோ பரபரப்பாக பேசிக் கொண்டிருந்தாள்.

## 2

‘‘என்ன பதற்றம் உனக்கு? பிள்ளைங்க சாப்பிட உட்கார்ந்திருக்காங்க பார்! முதல்ல தட்டு எடுத்து வை...’’ எனக் கடிந்துக் கொண்டார் விஜயன்.

“நான் வைக்கறேன்ப்பா...!” என எழுந்து தட்டு வைத்து... உணவுப் பண்டங்களை பரிமாறினாள் தான்யா.

‘‘நீ உட்காரு தானும்மா... பந்தல்காரன்க... கல்யாணத்துக்கு இன்னும் நாலு நாள்தான் இருக்கு. நேத்து சாயந்திரமே வர்றேன்னான்... இன்னும் வரலே. அதான் கத்திட்டேன்!”

‘‘இவங்கள்லாம் அப்படித்தான்

## உலக சாதனை பட்டியலில் குட்டி நாய்!

மனிதர்களால்தான் உலக சாதனை நிகழ்த்தப்படும் என்பதில்லை. உலக சாதனை பட்டியலில் விலங்குகளும் இடம் பெறுகின்றன. வழக்கத்திற்கு மாறாக அல்லது இயற்கைக்கு மாறாக இருக்கும் சில விஷயங்களும் உலகசாதனையாக அறிவிக்கப்படுகின்றன. இப்படித் தான் ஒரு நாய்க்குட்டி உலகின் மிகச்சிறிய நாயாக அடையாளம் காணப்பட்டு உலக சாதனை புத்தகத்தில் இடம் பிடித்துள்ளது. இந்த நாய்க்குட்டிக்கு இரண்டு வயதுதான் ஆகிறது. இதன்



எடை 500 கிராம் மட்டுமே. உயரம் 9.65 செ.மீ.

இதற்கு முன்னால் உலக சாதனை புத்தகத்தில் அமெரிக்காவில் புளோரிடா மாநிலத்தைச் சேர்ந்த ஒரு நாய்க்குட்டி இடம் பிடித்திருந்தது. இதன் உயரம் 10.16 செ.மீ. இந்த நாய்க்குட்டியைக் காட்டிலும் இப்போது உலக சாதனை புத்தகத்தில் இடம் பிடித்துள்ள நாய்க்குட்டியின் உயரம், எடை இதனால்தான் முந்தைய நாயின் சாதனையை முறியடித்து இந்த நாய்க்குட்டி உலகின் மிகச்சிறிய நாய்க்குட்டி என்ற உலக சாதனையை படைத்துள்ளது.

பத்தும்மா... கிராக்கி பண்ணிப்பாங்க. இந்த வேலையெல்லாம் நான் பார்த்துக்கறேன்... நலங்கு எப்ப?''

''சாயந்திரம்ங்க... காவ்யா என்ன யோசனை? தட்டைப் பார்த்து சாப்பிடு...''

''இன்னைக்கு உன் பெரியக்கா மாலினியோட பொண்ணு வைக்கற நலங்குதானே? இன்னும் வரலே?''

''கிளம்பிட்டாங்க... பதினோரு மணிக்குள்ள வந்திடுவாங்க!''

''எத்தனை பேருக்கு சமைப்பே? மதியம் எல்லாருக்கும் ஹோட்டல்லேர்ந்து வரவச்சிடலாம்.''

''அது பிரச்சினையில்லே... சமைச்சிடலாம். சாயந்திரம் பங்ஷனுக்கு உறவுக்காரங்க, அக்கம்பக்கம் ஆளுங்க வருவாங்க. அவங்களுக்கு மட்டும் டிபனுக்கு ஏற்பாடு பண்ணிடலாம்!''

''பேஷா பண்ணிடலாம்!''

கல்தோசையும், பொட்டுக்கடலைச் சட்னியும் அமர்க்களமாய் இருந்தது. கல்தோசை என்றுதான் பெயர். பிய்த்தால் பஞ்சு மாதிரி வந்தது.

''ஆயிரம் சொல்லும்மா... பெரியம்மாவுக்கு உன் கைப்பக்குவம் இல்லே! மீன் குழம்பு சாம்பார் மாதிரி இருக்கும், சாம்பார் ரசம் மாதிரி இருக்கும். சாப்பாடு பொங்கல் மாதிரி இருக்கும், கண்டிப்பா கல்தோசையில கல் இருக்கும். சமையல்ல ராணின்னா நீதான்!''

பத்மினியின் முகத்தில் சின்னதான கர்வம் உதட்டில் விரிந்தது.

''அதெப்படிடி... நான் சமையல் கத்துக்கிட்டதே என் அக்காகிட்டதான்! அவளை குறை சொல்றே?''

''நீ குருவை மிஞ்சிய சிஷ்யைம்மா!''

''ஏன் தானும்மா... நான் இங்கேயே இடம் பிடிச்சு பார்லர் போட்டுத் தர்றேன். இங்கேயே இருந்துடேன்!'' என்றார் தந்தை.

சடுதியில் திகைத்துப் பதறியவள்...

''அ...அதெப்படிப்பா? யுவனிக்கு நானில்லேன்னா கஷ்டம். அதுவுமில்லாம எனக்குன்னு ஏகப்பட்ட கஸ்டமர்ஸ் இருக்காங்க!'' அவசரமாய் வந்தன வார்த்தைகள்.

''இருக்கட்டும் தானு! அப்பா சொல்றதை நானேச் சொல்லணும்னு நினைச்சிட்டிருந்தேன். இதோ காவ்யா கல்யாணமாகிப் போயிடுவா. வீடே வெறிச்சின்னு ஆகிடும். நீயும் இங்கே வந்திட்டியானா... எங்களுக்கு கொஞ்சம் சந்தோஷமா இருக்கும்.''

''அதெப்படிம்மா? நான் இன்னொரு பார்லரை அங்கே ஓபன் பண்றதுக்கு ஐடியாப் பண்ணிக்கிட்டிருக்கேன்...''

''அப்படி அவசரப்பட்டு செஞ் சிடாதே! இப்பவே ஏகப்பட்ட வரன்கள் வீடுதேடி வருது. நானும் அப்பாவும் ஒரே முடிவுல இருக்கோம். காவ்யாவை எப்படி சென்னையில உள்ள வரனுக்கு கல்யாணம் முடிக்கப் போகிறோமோ, அதே மாதிரி உனக்கும் சென்னை மாப்பிள்ளைதான்! நீ பாட்டுக்கு அவசரப்பட்டு பெங்களூருல கடையத் திறந்துடாதே! உனக்காக யாரும் குடும்பத்தை விட்டுட்டு அங்கே வந்து செட்டில் ஆகிட மாட்டாங்க!''

''அதில்லேம்மா!''

''தானும்மா...'' என்று இடைமறித்தார் விஜயன்.

''நீ ஆசைப்பட்டியேன்னுதான் அந்த ஊருக்கு அனுப்பி வச்சோம். செட்டிலாகறதுக்கு அல்ல. சட்னி வச்சிக்க... புள்ளைக்கு இன்னொரு தோசை போட்டுக் கொண்டு வா!'' வாஞ்சையுடன் சின்ன கண்டிப்பும் இருந்தது.

மாறி மாறி மூவரும் பேசிக் கொண்டிருக்க... தனக்கு அதில் ஏதும் சம்பந்தமில்லாததுப் போல... சிறு சிறு வில்லைகளாய் பிய்த்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தாள் காவ்யா. அவள் எண்ணம் இங்கில்லை என்பதை வெறித்தப் பார்வை பறைசாற்றியது.

தன் விஷயம் பற்றிப் பேச இது நேரமில்லை என்பதை உணர்ந்தவள் அக்காவை சிறு நெருடலுடன் கவனித்துக் கொண்டுதான் இருந்தாள்.

'உற்சாகமின்றி, பதற்றத்தை மறைத்தபடி இருக்கிறாள். என்னாச்சு?'

வாசலில் யாரோ அழைக்கும் சப்தம் கேட்க, சுடச்சுட தோசையை தான்யாவின் தட்டில் போட்டு விட்டு, ''வர்றேன்'' என்றபடி வாசலுக்கு விரைந்தாள் பத்மினி.

பந்தல் போடுபவர்கள்.

''ஏம்ப்பா... நேத்து வர்றேன்னுச் சொன்னவங்க இப்ப வர்றீங்க?''

''இன்னைலேர்ந்து கணக்கு வச்சுக்கம்மா!''

''அது யாருக்குத் தெரியாது. நாங்க சொல்ற அன்னைக்குப் போட்றதுதானே உங்க வேலை?''

''இதெல்லாம் ஒரு பதிலாப்பா?'' சின்ன டவலில் கையைத் துடைத்தபடி வந்தார் விஜயன்.

‘‘என்னங்க... அதுக்குள்ள கையக் கழுவிட்டீங்க?’’

“போதும்டி... நீ உள்ளே வேலையப் பாரு. இந்த வேலைய நான் கவனிச்சுக்கறேன். இப்படி வாங்க... இந்த பக்கம் தோண்டி மூங்கிலை வையுங்க!’’

பத்மினி உள்ளே வர... டைனிங் டேபிள் காலியாக இருந்தது. தான்யா கிச்சனில் இருந்தாள்.

பாத்திரங்களை ஒழுங்குப்படுத்தி, கழுவ வேண்டியவற்றை அகன்ற ஸிங்கில் போட்டு, பாவாடையை தூக்கி செருகிக் கொண்டாள்.

“என்னப் பண்ணப் போறே?’’

‘‘வந்துட்டியா? யாரும்மா, பந்தல் போடறவங்களா?’’

“ஆமாம்!’’

“ஸ்பீக்கர் எப்பக் கட்டுவாங்க?’’

“ரிசப்ஷன் அன்னைக்கு... ஆமா, என்னப் பண்ணிக்கிட்டிருக்கே?’’

“பாத்திரம் தேய்க்கறேன்ம்மா!’’

‘‘வேணாம்... வச்சிட்டு வா! நல்ல ட்ரஸ்... வீணாகிடப் போகுது!’’

‘‘ஓரோர் அம்மா... பொண்ணுங்க வேலை செய்ய மாட்றாங்களேன்னு கவலைப்படுவாங்க. நீ என்னன்னா?’’ செல்ல சலிப்புடன் குழாயைத் திருகி கையைக் கழுவினாள்.

“சரிதான்... ஆனா, நீதான் நாங்க என்னச் சொன்னாலும் கேக்கறப் பொண்ணாச்சே? எப்பவாவது வந்துட்டுப் போறே... உன்னை உக்கார வச்சு, விதவிதமா சமைச்சுப் போட்டு சாப்பிட வைக்கணும்னு ஆசையா இருக்கு கண்ணு! இப்படி வா!’’

‘‘ரொம்பத்தான் கொஞ்சறே உன் பொண்ணை?’’

“என் பொண்ணை நான் கொஞ்சறேன்... உனக்கென்ன வந்துச்சாம்?’’ அவளுக்கும் இருபது வயது குறைந்தது.

“மாமியாரா ஆகப்போற வயசு வந்தாச்சு! இன்னுமென்ன கொஞ்சல்?’’

“என் கடைக்குட்டியாச்சே? எப்பவும் நீ எனக்கு குழந்தைதான்!’’

“காவ்யாக்கா காதிலே விழுந்து புகை வரப் போகுது!’’

“ஏன் அவளும் எனக்கு குழந்தைதான். அதுக்கேன் பொறாமைப்படப் போறா?’’

“சரிம்மா... கேக்கணும்னு நினைச்சேன். காவ்யாக்கா ஏன் டல்லா இருக்கா? என்கிட்ட கூட சரியாப் பேசலே!’’

சட்டென முகம் சோர்ந்துப் போனது பெற்றவளுக்கு.

‘‘என்னன்னுச் சொல்ல? இப்பக் கல்யாணம் வேணாங்கறா! இன்னும் ரெண்டு வருஷம் போகட்டும்... நல்லா சம்பாதிச்சிட்டு அப்புறம் பண்ணிக்கறேங்கறா! நடைமுறையில சாத்தியமில்லாத விஷயங்களை எடுத்துச் சொல்லிப் புரிய வச்சோம்!’’

‘‘இப்பக் கல்யாணம் வேணான்னு சொன்னாளா? இந்த அலையன்ஸ் வேணான்னு சொன்னாளா?’’

“சேச்சே... மாப்பிள்ளைய நீ இன்னும் நேர்ல பார்க்கலே இல்லே?’’

“இல்லையே... போட்டோவுலதான் பார்த்தேன். நிச்சயத்துக்கு வர முடியல... அங்கேயும் முகூர்த்த நாள்னு, மேக்கப், மெஹந்தின்னு ஏற்கனவே ஒப்புக்கிட்ட கமிட்மெண்ட்ஸ்!’’

‘‘மாப்பிள்ளை ரொம்ப அழகு தான்யா. தங்கமான குணம். அரசாங்க உத்யோகம். வளசரவாக்கத்துல சொந்த வீடு! அவங்களும் பொண்ணுன்னு பார்க்க ஆரம்பிச்சு வந்த முதல் வரனே காவ்யாவோடதுதானாம். பிடிச்சுப்போய் உடனே தகவல் அனுப்பிட்டாங்க. அவரோட அம்மாவும் சரி, தங்கையும் சரி... பாந்தமாத் தெரியறாங்க. அந்தம்மாவுக்கு உடம்புக்கு முடியலேன்னுதான்... சீக்கிரம் கல்யாணத்தை வச்சுக்கலாம்னு அவசரப்பட்டாங்க!’’

‘‘எல்லா உறவுக்காரங்களுக்கும் இன்விடேஷன் வச்சுட்டியாம்மா?’’

“இன்னும் நாலஞ்சு பேருக்கு விடுபட்டுப் போச்சு. சைதாப்பேட்டை வரைக்கும் போக வேண்டியிருக்கு. நாளைக்குக் காலையிலே கிளம்பணும்!’’

“பத்தூ....’’ வெளியில் உற்சாகக் குரல் கேட்க...

“அக்கா...’’ எனச் சிரித்தபடி ஹாலுக்கு வந்தாள் பத்மினி.

பெரிய உறவுக் கூட்டம் ஹால் முழுக்க... வாயெல்லாம் சிரிப்பாக!

## 3

ரொம்ப ஆடம்பரமின்றி, அடக்கமாய் இரண்டு பெட்ரூம், ஹால் என்று கட்டப்பட்ட வீடு! புதிதாய் சுண்ணாம்பு

## குளிர்சாதனப் பெட்டியை சுமந்து ஓடும் ஓட்டப்பந்தயம்!

இங்கிலாந்தில் ஆண்டுதோறும் ஒரு தொண்டு நிறுவனத்திற்கு நிதி திரட்டுவதற்காக நூதனப் போட்டி ஒன்று நடத்தப்படுகிறது. இந்த போட்டி 21 கி.மீ. தூரம் கொண்டது. உலகின் இரண்டாவது மிகப்பெரிய அரை மாரத்தான் போட்டி என்று இது அழைக்கப்படுகிறது. 1991-ம் ஆண்டு முதல் வருடந்தோறும் செப்டம்பர் மாதம் இப்போட்டி நடத்தப்படுகிறது. இந்த ஆண்டு நடந்தப் போட்டியில் 56 ஆயிரம் பேர் பங்கேற்றனர். இப்போட்டியில் 49 வயதான டோனி பீனிக்ஸ் என்பவர் கலந்து கொண்டார். இவர் 42.5 கிலோ கிராம் எடை உள்ள குளிர்சாதனப் பெட்டி ஒன்றை முதுகில் சுமந்து கொண்டு ஓடினார்.



அதே பாதையில் மீண்டும் மீண்டும் 41 நாட்களாக ஓடினார். இதன் மூலம் 1,632 கி.மீ. தூரத்தை நிறைவு செய்தார். இவர் புரிந்தது ஒரு அதிசய சாதனைதான் என்றாலும் தொடர்ந்து இவர் ஓடியதால் இவருக்கு முதுகுத்தண்டு பாதிக்கப்பட்டது. நடப்பதற்கு கூட மிகவும் சிரமப்பட்டார். மருத்துவமனையொன்றில் அனுமதிக்கப்பட்ட பொழுது எம்.ஆர்.ஐ. ஸ்கேன் எடுத்துப் பார்த்ததில் இந்த பாதிப்பு கண்டுபிடிக்கப்பட்டது. இருந்தாலும் போட்டியில் வெற்றி பெற்றது மற்றும் தனக்குப் பின்னால் ஏராளமானவர்கள் திரண்டு ஆதரவளித்தது தனக்கு இன்றைக்கும் மிகுந்த உற்சாகத்தை அளிப்பதாக கூறுகிறார்.

சாதனை மனிதர்களுக்கு வேதனை ஒரு பொருட்டல்ல என்பதை இவர் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.

அடிக்கப்பட்டு, வாசலில் பந்தல், வாழைமரம் கட்டப்பட்டு, வந்திருந்த உறவுக்காரர்களின் வாண்டுகள், அவற்றைச் சுற்றி ஓடியாடி விளையாடிக் கொண்டு...

வாசலில் ஓரமாய் பைக்கை நிறுத்தினான் கௌஷிக்.

"ஹை... மாப்பிள்ளை மாமா... வந்தாச்சு, மாப்பிள்ளை மாமா வந்தாச்சு" வாண்டுகள் அவனைச் சுற்றி வட்டமிட்டு சத்தமிட...

முகத்தில் வெட்கம் பரவியது.

''உஸ்ஸ்... அப்படில்லாம் கத்தக் கூடாது..."

"ஏய்... பசங்களா... சும்மாயிருங்க... வந்துட்டியாண்ணா... உள்ளே வா... அத்தை, மாமாவெல்லாம் வந்திருக்காங்க!"

''அம்மா சாப்பிட்டாங்களா? அத்தை, மாமா, பசங்க எல்லாரும்?"

"சாப்பிட்டாச்சுண்ணா!"

''ஹோட்டல்லேர்ந்து வரவைச்சதா?"

''இல்லேண்ணா! வீட்லதான் நிறைய லேடீஸ் இருக்கோமே! ஆளுக்கொரு வேலைய செஞ்சோம். அமர்க்களமா விருந்து தயாரிச்சிட்டோம்! அப்புறம்ண்ணா... அண்ணிக்கு மேரேஜ், ரிசப்ஷன் எல்லாத்துக்கும் ப்ளவுஸ் தச்சிட்டு வந்தாச்சு."

"ஓ!" மனசுக்குள் இனம்புரியாத உணர்வு, பரவசம்.

உள்ளே வந்தான்.

உறவினர்கள் ஆளாளுக்கு நலம் விசாரித்து கிண்டல் செய்ய... அரைமணி நேரம் அப்படியேக் கடந்துப் போனது.

அம்மாவின் அறையில் எட்டிப் பார்த்தான். உறங்க முற்பட்ட கற்பகம் இவனைப் பார்த்துவிட ''வாப்பா!'' என்றழைத்தாள்.

"தூங்கும்மா... அப்புறம் பேசலாம்!"

"பரவாயில்லே... வா!"

அம்மாவின் முன் சேரை இழுத்துப் போட்டு அமர்ந்தான்.

கற்பகம் படுக்கையை விட்டு எழுந்தமர்ந்தாள்.

மெலிந்த தேகம்! கருணை சுமந்த முகம். நரைத்த தலை... அவள் தோற்றத்திற்கு எடுப்பாயிருந்தது. ஆறு மாதம் முன்புதான் ஓபன் ஹார்ட் சர்ஜரி பண்ணியிருந்தார்கள். வயதாகிவிட்டதால்... உடல்நிலை எப்போதும் சோர்வுடனே இருந்தது.

''என்னப்பா... எல்லாருக்கும் அழைப்பிதழ் குடுத்து முடிச்சாச்சா?"

"ஆச்சும்மா!"

"நம்ம சங்கவியோட மாப்பிள்ளைக்கு லீவு கிடைக்கலையாம். வரமுடியலைன்னு வருத்தப்பட்டாரு."

"எனக்கும் போன் பண்ணியிருந்தாரும்மா! காண்ட்ராக்ட் பேஸிஸ்ல போயிருக்கப்ப... திடீர்னு லீவு கிடைக்கறது கஷ்டம்மா... அதுவும் அரேபியன் கண்ட்ரில பயங்கர ஸ்ட்ரிக்ட்! நாமளும் ஷார்ட் பீரியட்ல மேரேஜை பிக்ஸ் பண்ணிட்டோம். அவரை குறை சொல்ல முடியாது."

"நாலு வீடு தள்ளி, நாயக்கர் வீட்ல... ரெண்டு மாடி காலியாதான் இருக்கு. அவங்களைக் கேட்டுட்டேன். வந்திருக்கிற உறவுக்காரங்களை அங்க தங்க வச்சிடலாம்!"

"சரிம்மா!" என்று முடிக்குமுன்... ஒரு கவரோடு உள்ளே நுழைந்தாள் சங்கவி.

"இதிலே டைலர்கிட்டேர்ந்து வந்த பிளவுஸ் இருக்கு... பாரேண்ணா!"

ஒவ்வொன்றாய் எடுத்துப் பார்த்தான்.

இளநீலமும், மயில்தோகை நிறமும் கலந்த டபுள் ஷேட் வண்ணத்தில், குந்தன் கற்களும், மணிகளும் கலந்து நேர்த்தியாய் அலங்காரம் பண்ணப்பட்டிருந்த பிளவுஸைப் பார்த்ததும், கற்பனையில் அதை அணிவித்துப் பார்த்தான்.

'என் வண்ண மயிலுக்கேற்ற நிறம்!'

"ஈவ்னிங் நான் போய் குடுத்துட்டு வந்துர்றேண்ணா. இப்பவே போட்டுப் பார்த்தாதான்... சரியில்லேன்னா... சரிப்பண்ணிக்க முடியும்!"

ஜெர்க் ஆனான் கௌஷிக்.

"அதுக்கு எதுக்கு நீ? வீட்ல எவ்ளோ வேலை இருக்கு? கெஸ்ட்டெல்லாம் கவனிச்சுக்கணும். எனக்கு அந்தப் பக்கமா ஒரு வேலையிருக்கு. அப்படியே இதையும் குடுத்துட்டுப் போறேன்..."

"ஓஹோ... ஹோ..." சங்கவி கிண்டலாய் சிரித்தாள்.

கற்பகமும் சேர்ந்து சிரித்தாள். ஆனால் அதில் சின்ன சங்கடமும் இருந்தது.

"கௌஷிக்..."

"என்னம்மா?"

"கல்யாணத்துக்கு முன்னாடியே இப்படி... அங்கே போய்..." தயங்கி இழுத்தாள்.

எங்கே அம்மா மறுத்து கடிவாளம் போட்டு விடுவாளோ என்று பயந்தான். கௌஷிக்கிற்கு அம்மா என்றால் உயிர். அதைவிட மரியாதை அதிகம். கற்பகம் கொஞ்சம் பழங்காலத்து மனுஷி! அந்த காலத்து சாஸ்திர சம்பிரதாயங்களில் பற்றுள்ளவள். இந்தக் கல்யாணம் முடிவானதும் தன் தமையனிடம் அவள் வைத்த இரண்டு வேண்டுகோள், 'திருமணமாகும் வரை போனில் பேசுவது, வெளியில் சந்திப்பதெல்லாம் கூடவேக் கூடாது. அடுத்து, திருமணத்திற்கு முதல் நாள் ரிசப்ஷன் என்ற பெயரில் மாப்பிள்ளையும் பெண்ணும் மேடையில் ஜோடியாய் நிற்கக் கூடாது. பரியம் போட்டு, வரிசை வைத்து, சம்பிரதாயமாய் நடத்த வேண்டும்' என்றாள்.

இப்போதெல்லாம் இந்தமாதிரி யார் செய்கிறார்கள்! ஆனால், திருமணம் முடியும் வரை எதுவும் சாஸ்வதம் இல்லையே! பல ரூபங்களில்... தாலி கட்டும் நேரத்தில் கூட கல்யாணம் நின்று விடுகிறதே! மேடை வரை வந்து கல்யாணம் நின்றுப் போனால், ஆணுக்கு பெரிய பிரச்சினை இல்லை. ஆனால், பெண்ணிற்கு? அப்படியொரு மோசமான நிகழ்வை... தன் பெரியம்மா பெண்ணின் வாழ்க்கையில் கற்பகம் பார்த்திருந்தாள். அதனால் வந்த எச்சரிக்கை உணர்வுதான் இது!

காவ்யாவின் பெற்றோருக்கும் இது பிடித்திருந்ததால்... எந்த முரண்பட்ட வாதங்களும் எழவில்லை. ஆனால், கௌஷிக்கிற்கு கொஞ்சம் ஏமாற்றம்தான்!

அவனும் வீட்டிற்கு அடங்கியப் பிள்ளையாய் வளர்ந்தவன்தான். ஆனாலும், தன்னில் சரிபாதியாகப் போகிறவளிடம், இரவில் மெல்லிய குரலில், சாப்ட்டியா, என்ன பிடிக்கும், ஏது பிடிக்கும் என்று எதையாவது பேசி... தன் ஆண்மைத் திமிறலுக்கு கொஞ்சம் மருந்துப் போட்டுக் கொள்ள ஆசைதான். ஆனால், காவ்யா வீட்டிலும் அறிவுறுத்தினார்களோ என்னவோ, அவள் சைடிலும் எந்த ரியாக்ஷனும் காணோம்.

அட்லீஸ்ட் அவளைப் பார்க்கும் இந்த சந்தர்ப்பத்தையும் விட்டுவிட மனசில்லை.

"இல்லம்மா... நம்ம வீட்டு சார்பா, ஆண்கள் யாராவது இந்த நேரத்திலே அங்கே வரப் போக இருக்கணும். ஒரு மரியாதைக்கு மாமாகிட்டே மண்டப அரேன்ஜ் பத்தி பேசிட்டு வர்றேம்மா! இதோ... இந்த ப்ளவ்ஸெல்லாம் பெரியவங்க கிட்டேதான் குடுத்துட்டு வரப் போறேன். சரியாம்மா?"

அவள் அடுத்து வேறு பதிலைச் சொல்லிவிடப் போகிறாளோ என்ற பயத்தில் வேகமாய் அறையை விட்டு வெளியேறினான்.

"அண்ணன் பாவம்மா... விட்ரும்மா" என்றாள் சங்கவி.

"புரியுதுடி... சில விஷயங்கள்ல கடிவாளம் போடலேன்னா... சங்கடங்கள் கழுத்தை நெறிக்கும். போதாதுக்கு அவன் ஜாதகத்துல கல்யாணத்துல சில தடங்கல்கள் இருக்குன்னு ஜோசியர் சொல்லியிருந்தார். இந்தக் கல்யாணம் நல்லபடி நடக்கணும். அது மட்டும்தான் என் பிரார்த்தனை!"

"யாரோ ஒரு ஜோசியக்காரன் மேல வைக்கிற நம்பிக்கையை அண்ணன் மேல வையம்மா! இந்த குடும்பத்துக்காக அது ரொம்பவே கஷ்டப்பட்டுடிச்சி! இனியாவது தனக்காக அது வாழணும்."

மெல்லத் தலையாட்டினாள் கற்பகம்.

"அதுவுமில்லாம, நாம அண்ணனுக்கு வரன் பார்க்க ஆரம்பிச்சு... மொத இடமே அமைஞ்சது பெரிய விஷயம். காவ்யாவ அண்ணனுக்கு ரொம்ப பிடிச்சுப் போச்சு. அதனால்தான், என் மாமியார் வீட்ல என் நாத்தனார் மஞ்சுவுக்கு அண்ணனைக் கேட்டப்ப மறுக்க வேண்டியதாப் போய்டுச்சு!"

"மஞ்சுவும் நல்லப் பொண்ணுதான். படிச்சவ, பந்தமா இருக்கா. பெரியவங்களை அனுசரிச்சு நடக்கற குணம். மறுத்திருக்க வேணாமோன்னுத் தோணுது!"

"நான் மட்டுமென்ன மஞ்சுவைப் பிடிக்கலேன்னாச் சொன்னேன்? நல்லப் பொண்ணுதான். அண்ணனுக்கு நல்லப் பொருத்தமானவதான். ஆனா, நாம இந்த இடத்தை முடிச்சிட்டப் பிறகுதானே, கல்யாண விஷயமாப் பேசினாங்க? அதுவுமில்லாம அண்ணனுக்கு காவ்யாவை ரொம்பவேப் பிடிச்சுப் போச்சு!"

"ஆனா, உன் மாமியார் வீட்ல இது விஷயமா கோவமாதானே இருக்காங்க. அழைப்பிதழ் குடுக்கப் போனப்ப கூட பட்டும் படாமதானேப் பேசினாங்க?"

"விடும்மா... மஞ்சுவுக்கு ஒரு இடம் தகையும்போது எல்லாம் சரியாப் போய்டும். என் புருஷன் நம்மளைப் புரிஞ்சு வச்சிருக்கார்... அது போதும்மா..."

"சம்பந்திங்க... கல்யாணத்துக்கு வருவாங்கயில்லே?"

"அந்தளவுக்கு அநாகரீகமானவங்க இல்லேம்மா... கண்டிப்பா வருவாங்க!"

கற்பகத்தின் கவலை... அவள் பதிலால் கொஞ்சம் மட்டுப்பட்டது.

## 4

**பி**ன்கட்டில் அதிரசமும், லட்டும் செய்துக் கொண்டிருந்தனர் பெண்கள். வாண்டுகள் அங்கேயும், இங்கேயும் ஓடியாடிக் கொண்டிருந்தனர்.

அதிரச வாசனை வீடு முழுக்க நிரம்பி வழிந்தது.

தான்யா... சுடச்சுட பிடித்து வைத்திருந்த லட்டுடன் காவ்யாவின் அறைக்குள் நுழைந்தாள்.

கையில் புத்தகத்தை விரித்து வைத்துக் கொண்டு ஜன்னல் வழியே பார்வையை வீசியிருந்தாள். அது இலக்கின்றி

### கின்னஸ் சாதனை படைத்த இளம் விமானி!

**சீ**னாவைச் சேர்ந்த சிறுவன் ஹே யிடே. இவனுக்கு 5 வயதுதான் ஆகிறது. டுவோடுவோ என்று செல்லமாக இந்த சிறுவன் அழைக்கப்படுகிறான். பீஜிங் உயிரியல் பூங்காவிற்கு மேலாக அல்ட்ராலைட் விமானம் ஒன்றை 35 நிமிடம் ஓட்டி கின்னஸ் சாதனையில் இடம் பிடித்து இருக்கிறான். இவ்வளவு சிறிய வயதில்



இதுவரை யாரும் இவ்வளவு குறுகிய நேரத்தில் குறிப்பிட்ட திசையில் திறமையாக விமானத்தை செலுத்தியதில்லை என்று இச்சிறுவனுக்கு விமானம் ஓட்ட பயிற்சி அளித்த ஏவியேஷன் சிறப்பு இயக்குநர் சாங்க் யங்குயி தெரிவித்துள்ளார்.

வெறுமையை வெளிப்படுத்தியிருந்தது.

சில கணங்கள் உறைந்து நின்றாள் தான்யா.

அக்காவிடம் ஏதோ ஒன்று சரியில்லை என்பதுபோல் தோன்றியது.

"காவி..."

"............!"

"காவிக்கா... உன்னைத்தான்!"

"அ... எ... என்ன தானி?"

"இந்தா லட்டு... சூப்பரா, சூடா இருக்கு. எடுத்துக்க"

"ப்ச்... வேணாம்!"

சிறு கவலையுடன் ஜன்னலருகே தட்டை வைத்து விட்டு, அருகே அமர்ந்தாள்.

"ஹேய்... நானும் வந்ததிலேர்ந்துப் பார்க்கறேன். டல்லா இருக்கே... சரியாப் பேச மாட்டேங்கிறே! என்ன ஆச்சு?"

"நத்திங்!"

"அப்படித் தெரியலியே! எதுவாயிருந்தாலும் சொல்லு காவி!"

"அதான் ஒண்ணுமில்லேன்னுச் சொல்லிட்டேனே!"

"நான் உன் தங்கச்சி காவி! அம்மாக் கூட உன்னைப் பத்திச் சொல்லி வருத்தப்பட்டாங்க. இப்ப கல்யாணம் வேணாம்னு சொன்னியாம்! உன் ஆங்கிள்ல அது சரின்னுக் கூடச் சொல்லுவேன். எகனாமிகலா லேடீஸ் நல்லா சவுண்டா தன்னை ப்ரிப்பேர் பண்ணிக்கறதுதான் பெஸ்ட்! பட், அப்பாம்மா சைட்ல பார்த்தா... அதுவும் சரியாதானே இருக்கு? இருபத்தி நாலு வயசுங்கறது... அவங்களை தூங்கவிடாம செய்யுது. எல்லாத்தையும் விடு! கௌஷிக்கை நான் போட்டோவுலதான் பார்த்தேன். உனக்கு செம மேட்ச் தெரியுமா? ரொம்ப நல்ல கேரக்டராம். அதுதானே முக்கியம்? இதைவிட வேறென்ன வேணும்? ப்ரீயா இரு காவி! இன்னும் ரெண்டு நாள்ல கல்யாணம். முகத்துல கொஞ்சம் வெக்கம், கொஞ்சம் சந்தோஷம்னு இரேன். பார்க்க ஆசையாயிருக்கு!"

காவ்யாஸ்ரீ தங்கையை ஏறிட்டுப் பார்த்து உதட்டை மென்று சிரித்தாள்.

"சரி... நல்ல ஹெட்டெக். ஒரு டீ போட்டுத் தர்றியா? குடிச்சிட்டு படுத்துடறேன்."

"ஓ... ஷ்யூர்!"

வாசலில் நின்றிருந்த வாகை மரத்தின் பறவைகள் விதவிதமாய் குரல் கொடுக்க... அதை ரசித்தபடி கிச்சனிற்குள் சென்றாள்.

அம்மாவும் அப்பாவும் மிச்சம் மீதி பாக்கியிருந்த உறவினர்களுக்கு அழைப்பிதழ் கொடுக்கச் சென்றிருந்தனர்.

பின்கட்டில் பெரியம்மா, சித்தி, அத்தை என்று அத்தனை பேரும் ரவுண்டு கட்டி இனிப்பு செய்துக் கொண்டிருக்க... அவர்கள் பொருட்டு கிச்சனும் களேபரமாய் இருந்தது.

அதைப் பார்த்ததும் தானும் டீ குடிக்க வேண்டும் போல் தலைவலி ஏற்பட்டது.

பாலை ஸ்டவ்வில் வைத்துவிட்டு, இஞ்சி, ஏலக்காய், நான்கு மிளகு, மொத்தத்தையும் இடித்து, டீயுடன் போட்டு கொதிக்க வைத்தாள். தம்ளரில் பில்டர் பண்ணிக் கொண்டிருந்த போது... வாசலில் பைக் சத்தம் கேட்டது.

'அப்பாவா?'

நம்மூரில் நமது சிறுவர்கள் சைக்கிள் ஓட்டவே பயப்படும் போது இந்த வீரச் சிறுவன் 5 வயதிலேயே விமானம் ஓட்டி சாதித்திருப்பது ஆச்சரியமாகவே இருக்கிறது. வருங்காலத்தில் விமான பைலட்டாக வரவேண்டும் என்பதும், இத்துறையில் புதிய கண்டுபிடிப்புகளை நிகழ்த்த வேண்டும் என்பதும் தனது கனவு என்கிறான் இந்த சிறுவன்.

விமானம் ஓட்டுவதைத் தவிர படகோட்டும் போட்டியிலும் இச்சிறுவன்



பங்கேற்று இருக்கிறான். புயல்மழை அடிக்கும் போதே ஜப்பானின் புஜியாமா மலையில் ஏறி சாதனையும் படைத்துள்ளான் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒரு இளைஞன் பைக்கை ஸ்டாண்ட் போட்டு விட்டு, கையில் கவருடன் தயக்கத்துடன் நடந்து வந்தான்.

மத்திம உயரத்தைவிட சற்றே உயரமாய், நல்ல உடல்வாகுடன், தயக்கமிருந்தாலும் ஒளிர்ந்த கண்களுடன், நறுக்கப்பட்ட அளவான மீசையுடன் கம்பீரமாய் இருந்தான்.

தான்யாவிற்கு புரிந்துப் போனது. உதடு சன்னமாய் விசிலடித்து சந்தோஷத்தை வெளிப்படுத்தியது.

'போட்டோவில் பார்த்த அக்காவின் மாப்பிள்ளை! வாவ்! நேரில் இன்னும் சூப்பராய் இருக்கிறாரே!'

பரபரப்பானாள்.

அவன் காலிங்பெல் ஸ்விட்சில் விரல் கொண்டு போக, அவன் முன்னே வந்து நின்றாள் தான்யா.

"வாங்க... உள்ளே வாங்க!"

பிரமித்துப் போனான் கௌஷிக்.

அவளே எதிரில் வந்து வரவேற்றதும் அவனுக்கும் விசிலடிக்கத் தோன்றியது... கட்டுப்படுத்தினான்.

"வீ... வீட்ல... அத்தை... மாமா..."

"இல்லே... இன்விடேஷன் தர போயிருக்காங்க."

இப்போது தைரியமாய் நிமிர்ந்து அவளை ஏறிட்டான்.

லூஸாய் பின்னலிட்டு, ஒற்றை ரோஜா செருகி, பாவாடை தாவணியில் அழகான வண்ண மயில் போலவே இருந்தாள். அருகில் பார்த்ததில் நெஞ்சம் ரெயில் தண்டவாளமாய் தடதடத்தது.

"இ... இதிலே தைச்ச பிளவுஸ் எல்லாம் இருக்கு. குடுத்துட்டுப் போகலாம்னு..."

"தாங்க்ஸ்ங்க... டீ சாப்பிடுவீங்கதானே?"

"ம்..."

"ஒரு நிமிஷம்!"

அவள் திரும்பி நடக்க... பின்னழகு அசத்தியது.

'அருகில் யாருமில்லை. ரெண்டு வார்த்தைப் பேசி விடலாமா? கல்யாணத்துக்கு மூணு நாளை வச்சிக்கிட்டு இதைக் கூட பேசலேன்னா எப்படி?'

தான்யா டீயுடன் வந்தாள்.

முதலிரவில் பால் சொம்புடன் வருவதுப் போல் எண்ணி மனசு ஏகாந்தமானது.

குடித்தான்.

"டீ சூப்பர்!"

"நான்தான் போட்டேன்!"

"டீ மட்டுமில்லே... இந்த டிரஸ்ஸூம் ரொம்ப சூப்பர். நான் எதிர்பார்க்கலே... இந்த காலத்திலே இப்படி ட்ரெண்டியா டிரஸ் பண்ணுவேன்னு!"

சில கணங்கள் அவன் பேசுவது புரிய தாமதமானது.

'என்னை இப்போதுதான் முதன் முதலாக பார்க்கிறார். ரொம்ப நாள் பழக்கம் போல் பேசுகிறார்! எப்படி?'

"தப்பா எடுத்துக்கலேன்னா... ஒண்ணு கேப்பேன்!"

"என்ன மாமா?"

'மாமாவா?' குற்றாலச் சாரலில் நனைந்தான்.

"இப்படிக் கூப்பிடறதுக்கூட அதுவும் உன் வாயால கூப்பிடறது... ரொம்ப பிடிச்சிருக்கு. என்னை எப்பவும் இதே மாதிரி கூப்பிடணும்... சரியா?"

"அதானே முறை?"

"அப்புறம்... உன் போன் நம்பர் தர்றியா? பட், யாருக்கும் தெரியக் கூடாது காவ்யா! எனக்கு உன் கூட பேசணும்னு ரொம்ப ஆசை... ஆனா..."

தான்யாவுக்குப் புரிந்து போனது.

'இவ்வளவு நேரமும் என்னை காவ்யான்னு நினைச்சிட்டுதான் வழியறாரா? பார்ப்போம்!' என்று பதிலேதும் பேசாமல் தலை கவிழ்ந்தாள்.

"எ... என்னப் பேசணும்?"

"நமக்குள்ளே பேச விஷயமாயில்லே? நம்பர் தா!"

"தெரிஞ்சா அவ்வளவுதான்!"

"அதான் யாருக்கும் தெரியாதே!"

"அதான் எனக்குத் தெரிஞ்சு போச்சே?"

"உனக்குத் தெரிஞ்சா என்ன?"

"தெரிஞ்சா என்னவா? மச்சினிக்குத் தெரிஞ்சா... ஊருக்கே பத்த வச்சிட மாட்டேனா?" குறும்புடன் உதடு சுழித்து நகைத்தாள்.

"மச்சினி? வாட்?" முகம் சுண்டியது.

"என் பேரு தான்யா. அக்கா உள்ளே இருக்கா..."

"ஐய்யோ!" அலறியபடி எழுந்துக் கொள்ள... கையிலிருந்த டீ சிதறி... அவன் கைமேலேயே ஊற்றியது.

"பார்த்து மாமா!"

கௌஷிக் வெட்கத்துடன் தலை கவிழ்ந்தான். என்றாலும் ஆச்சரியப்பட்டான்.

அநியாயத்திற்கு இப்படியொரு ஒற்றுமையா?

''ஸாரி... ஸாரி... நான் இப்பத்தான் பார்க்கிறேன்... ஸாரி...''

''ஓஹ்... நோ... மாமா! இதுக்கேன் இவ்வளவு பதற்றம்? என்னைப் பார்த்திருக்க வாய்ப்பில்லே! நிச்சயத்துக்கும் வரலே! பெங்களூருல இருந்து நாலஞ்சு நாள் முன்னாடிதான் வந்தேன். வயசுல வித்தியாசம் இருந்தாலும், அக்காவும் நானும் ட்வின்ஸ் மாதிரியே இருப்போம்!''

''யெஸ்.... யெஸ்!'' என்றான் சற்றே பதற்றம் தணிந்து.

''காவ்யா உள்ளே படுத்திட்டிருக்கா... இருங்க கூப்பிட்டு விடறேன்!''

பதிலுக்கு சின்னதாய் முறுவலித்தான்.

நடந்தவைகளைச் சொல்லி அவளையும் சீண்டி விட்டு விளையாடும் நோக்கில் அறைக்குள் சென்றவள்... இழுத்துப் போர்த்தி ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த தமக்கையைக் கண்டு வியப்புடன் நெருங்கினாள்.

அதற்குள்ளா உறங்கிவிட்டாள்?

''காவ்யா... காவ்யா... எந்திரியேன்... கௌஷிக் வந்திருக்காரு...''

அவளிடம் சிறு சலனமும் இல்லை. எழுந்திருக்கவும் மாட்டாள் எனத் தோன்றியது.

வெளியில் வந்தாள்.

''ஸாரி மாமா... தலைவலின்னு சொல்லிட்டிருந்தா... நல்லாத் தூங்கிட்டா...'' என்றாள் சங்கடத்துடன்.

''இட்ஸ் ஓக்கே... டீ நல்லாருக்கு... அவளுக்கும் குடு. தலைவலிப் போய்டும்! வர்றேன்...!''

அட்டகாசமான ஒரு புன்னகையுடன் வெளியேறினான்.

5

**ம**ஸ்லின் துணியால் போர்த்தப்பட்டது போல் அழுக்கான மேகத்தினுள்

## 70 நாட்கள் விமானத்தில் உலகைச் சுற்றிய விமானி!

ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த இளம் விமானி ரையன் கெம்பல். இவருக்கு 19 வயதாகிறது. ஒற்றை என்ஜின் கொண்ட விமானத்தில் தன்னந்தனியாக 70 நாட்கள் பயணம் செய்து 5 கண்டங்களில் உள்ள 14 நாடுகளை கடந்து சாதனை படைக்க திட்டமிட்டுள்ளார்.

இந்த பயண தூரம் 38 ஆயிரத்து 624 கி.மீ. ஆகும். 18 வயதில் வணிகரீதியான பைலட்டுக்கான




அனுமதிச் சான்றிதழை இவர் பெற்றுள்ளார். இதனைத் தொடர்ந்து உலகத்தை சுற்றிப் பறப்பது என்ற ஆசை இவருக்கு ஏற்பட்டது. கப்பலின் மூலம் உலகைச் சுற்றி வந்த இளம் கப்பலோட்டி ஜெசிகா ஒட்சன் நிகழ்த்திய சாதனைதான் தனக்கு இந்த ஆசையை தூண்டி விட்டதாக கெம்பல் தெரிவிக்கிறார்.

கடந்த ஜூன் மாதம் ஆஸ்திரேலியாவின் நியூசவுத் வேல்சில் இருந்து இவரது பயணம் ஆரம்பமானது. கடந்த மாதம் அவர் நினைத்தபடி இந்த உலகைச் சுற்றி வந்து சாதனை நிகழ்த்தி காட்டினார். ஏற்கனவே மலேசியாவைச் சேர்ந்த 21 வயதான ஜேம்ஸ் ஆண்டனி என்ற இளம் விமானி விமானம் மூலம் உலகைச் சுற்றி வந்து சாதனை படைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அதற்கு அடுத்தபடியாக கெம்பல் இந்த சாதனையை நிகழ்த்தி காட்டியிருக்கிறார்.

மறைந்திருந்தது நிலா. உறவினர்கள் களைப்பின் மிகுதியால் ஹாலிலும் அறையிலும் கிடைத்த இடங்களில் சயனித்திருந்தனர்.

பூக்களும், சந்தனக் கிண்ணமும், குங்குமமும் அடங்கிய தட்டு, விஞ்சிய பொருட்களுடன் ஒரு ஓரமாய் முக்காலி மீது அமர்ந்திருந்தது.

மாடி பால்கனியில் அமர்ந்திருந்தனர் சகோதரிகள்.

"சீக்கிரம் போட்டு முடி தானு... முதுகு வலிக்குது!"

''சீக்கிரமாவா? இப்பதானே ஆரம்பிச்சிருக்கேன்?"

தான்யா... அவள் கையில் மாயாஜாலம் நிகழ்த்திக் கொண்டிருந்தாள். அட்சர சுத்தமாய் மணமகள் ஊர்வலத்தை கையில் வரைந்துக் கொண்டிருந்தாள்.

ஒரு கையில் முடித்து விட்டு அடுத்த கையில் ஆரம்பித்த போது சலித்துக் கொண்டாள்.

"ப்பா... இந்த கையில் போட்டு முடிக்க ஒரு மணிநேரம் ஆகும். அதுக்குப் பிறகு காயணும். கல்யாணம்னா இப்படி உடம்பு முழுக்க மெகந்தி போட்டுக்கணும்னு யார்டி கண்டுபிடிச்சது? சுத்த போர்!"

வெறுப்புடன் பேசியவளை வியப்புடன் பார்த்தாள்.

'மெகந்தி என்றால் சாதாரண நேரத்தில் போட்டுக் கொள்ளக் கூட ஆசைப்படும் பெண்கள்தான் அதிகம். அதுவும் கல்யாணப் பெண் என்றால் முகத்தில் வெட்கமும், ஆசையும் அதிகமிருக்குமே! 'நன்றாக சிவந்து விட்டால், கணவருக்கு தன் மேல் ஆசை அதிகம்' என்று மூர்க்கத்தனமாய் யோசிக்கும் பெண்கள் மத்தியில்... இவளென்ன வித்தியாசமாய்? அதுவும், இதற்கு முன் பலமுறை இவளுக்கு போட்டு விட்டிருக்கேனே!'

சின்னதாய் ஒரு பொறி தட்டியது.

"காவி..."

"ம்..."

"நேத்து கௌஷிக் வந்தப்ப ஏன் பேச வரலே?"

"நான்தான் தூங்கிட்டேனே!"

''அவரைப் பார்த்ததும் தூக்கம் வந்திடுச்சா?"

"அவர் வந்ததே எனக்குத் தெரியாது."

''உனக்கு அவரைப் பிடிக்கலையா காவி?" சன்னமாய் கேட்டாள்.

''சேச்சே... இப்ப கல்யாணம் வேண்டாம்னுதான் சொன்னேன்!"

"அப்ப... அவரை ஏன் அவாய்ட் பண்ற மாதிரி நடந்துக்கிட்டே?"

''நான்தான் தூங்கிட்டேன்னு சொல்றேனே!"

அழுத்தமாய் சொன்னவளின் பேச்சை, எந்தளவிற்கு நம்புவதென்றுப் புரியவில்லை.

□ □ □

**மா**டி அறை!

அது கௌஷிக்கின் அறை!

ஜன்னல் கம்பியில் ஒட்டியிருந்த தூசை வாயால் ஊதி சுத்தப்படுத்தியவன், தலையைத் துவட்டியபடி பீரோவிலிருந்து சட்டையை எடுத்தான்.

உள்ளே வந்தாள் சங்கவி.

"அண்ணா நலங்கு வச்சிட்ட பிறகு வெளியே எங்கேயும் போகக்கூடாதாம். நீ பாட்டுக்கு பைக்கை எடுத்துட்டு கிளம்பிடாதே!"

"என்ன விளையாடறியா? காய்கறி வாங்க அட்வான்ஸ் மட்டுந்தான் குடுத்திருந்தேன். முழுத் தொகையும் குடுத்தாதானே நாளன்னிக்கு கல்யாணத்துக்கு வாங்க முடியும்? சாஸ்திரம், சம்பிரதாயமெல்லாம் நம்மளமாதிரி ஆளில்லாதவங்களுக்கு ஒத்து வராது."

"சொன்னாக் கேட்க மாட்டே! திட்டப் போறாங்க. ஹூம்... ரூமை பளபளன்னு வைச்சிருக்கே? அண்ணிக்காகவா?"

"ஏய்... கேலி பண்ணாமப் போய்டு!" என்றான் வெட்கச் சிரிப்புடன்.

"என்ன கேலி? அதான் பார்த்தேனே! ஒரு தூசி தும்பைக் கூட விடறதில்லே... இதுக்கு முன்னாடி ஒரு நாளாவது இப்படி பண்ணியிருப்பியா? இப்பப் பார்..."

"ஏய்... சும்மா ஓட்டாதே... போ!"

"உண்மையிலேயே வெட்கப்படறப்ப ரொம்ப அழகாயிருக்கேண்ணா!"

சங்கவி நிறைந்த உள்ளத்துடன் கீழிறங்கினாள்.

□ □ □

**வீ**ட்டில் இடித்துக் கொண்டு நகர வேண்டிய அளவுக்கு உறவினர் கூட்டம்!

''வரிசைத் தட்டில் வைக்கறதுக்கு எத்தனை வகை பழங்கள் வாங்கினீங்க?"

வயதில் மூத்த பெண்மணி வீட்டில் எல்லோரையும் கேள்வியால் துளைத்துக்

கொண்டிருந்தாள்.

"எல்லாமே வாங்கியாச்சு பெரியம்மா" என்று பதில் அளித்த பத்மினி, வியர்த்து களைத்து பரபரப்புடன் இருந்தாள்.

''எல்லாரும் பொழுதோட மண்டபத்துக்குப் போய்டணும்!"

"காவி... சீக்கிரம் லன்ச் சாப்பிட்டுட்டு மூணு மணி வரை நல்லாத் தூங்கி எழுந்துடு! அப்பதான் முகம் ரொம்ப பளிச்சுன்னு இருக்கும்!"

பேசிக் கொண்டிருக்கும் போதே தான்யா செல்போன் சிணுங்கியது.

அதில் ஒளிர்ந்த பெயரைப் பார்த்து படபடத்தாள். சட்டென போனை எடுத்துக் கொண்டு, அறையை விட்டு வெளியில் வந்தாள்.

"ஹலோ..."

"ஹாய் செல்லம்!"

"பிரகாஷ்ராஜ்னு நினைப்பு!"

"ம்ஹூம்... நான் வில்லன் இல்லே! ஹீரோ. செல்லம்ங்கறது அவருக்கு மட்டுமே சொந்தமான வார்த்தையில்லே. இது என்னோட தான்யா குட்டிச் செல்லத்தை கூப்பிடற செல்லம்!"

"மறை கழண்டு போச்சு வைகுந்த்!"

"உனக்கா?"

"உனக்குத்தான்டா மடையா!"

"என்னடி... மரியாதைத் தேயுது!"

"சும்மாச் செல்லமா!"

"நல்லாதான்டிப் பேசறே!"

"சரி சரி... சொல்லுப்பா... என்ன விஷயம்?"

"என்ன விஷயமா? என் காதலிக்கிட்டே பேசறதுக்கு ஏதாவது விஷயமிருக்கணுமா என்ன? உன்னைப் பார்த்து முழுசா ஒரு வாரம் ஆகப் போகுது. கண்லேயே நிக்கிறே தானும்மா! பார்க்கணும் போல இருக்கு. நானும் உன் அக்கா கல்யாணத்துக்கு வரட்டுமா?"

"ஏய்... என்ன விளையாடறியா?"

"எங்கே விளையாடறது? தோள் மேல கையப் போடக் கூட விடமாட்டேங்கிறே! சொல்லு வந்துடட்டுமா? சும்மா பட்டுப்புடவை, நகைன்னு தேவதை மாதிரி கல்யாணத்தன்னைக்கு ஜொலிப்பியே... பார்க்கணும் ப்ளீஸ்டா!"

"வைகுந்த்... ப்ளீஸ்... இப்படியெல்லாம் பேசி என்னை எமோஷனல் ஆக்காதே! அப்புறம் வந்துடேன்னு சொல்லிடுவேன். ஆனா, வேண்டாம். இப்போதைக்கு நம்ம விஷயம் யாருக்கும் தெரிய வேண்டாம். ஒரு சரியான சந்தர்ப்பத்தில் வீட்ல சொல்றேன்."

''யாருக்கும் சந்தேகம் வராதபடி, மாப்பிள்ளை வீட்டுக்காரன்னு சொல்லிக்கிட்டு, வந்துட்டு போய்டறேன். ப்ளீஸ்டா!"

''ம்ஹூம்... அது சரி வராது. நான் டென்ஷனாகி, நானே காட்டிக் குடுத்துடுவேன். கல்யாணம் முடிஞ்சதும், ஒரே வாரம்தான்... பெங்களூருக்கு ஓடி வந்துட மாட்டேனா? ப்ளீஸ்... புரிஞ்சுக்க..."

"ரொம்பதான் பிகு பண்ணிக்கறே..."

"பார்த்தியா... தப்பாவே நினைக்கிறே!"

"சும்மாதான்... வச்சிடட்டுமா?"

"ஒக்கே... பை!"

அவள் வைத்ததும்... பின்னாலிருந்து குரல் கேட்டது.

"யாரும்மா போன்ல?"

விஜயன் நின்றிருந்தார்.

"ப்...ரண்டுப்பா... கல்பனான்னு பேரு... பெங்களூருல பழக்கம்..."

"அதுக்கேன் இப்படி பதர்றே? உள்ளே அம்மா தேடிக்கிட்டிருக்காப் பார்!"

விட்டால் போதும் என்று உள்ளே ஓடிப் போனாள்.

□ □ □

**ப**ரியம், சடங்கு என பிரமாதமாய் நடந்தேறியது. மறுநாள் திருமணத்திற்கு வரமுடியாதவர்கள் பரியத்திற்கு பரிசுப் பொருளோடு வந்து விட்டனர்.

"இப்பல்லாம் யாரு பரியம் போடறது? ரொம்ப நாள் கழிச்சி இப்படியொரு சம்பிரதாயத்தை பார்க்கிறப்ப மனசு நிறைவாதான் இருக்கு!"

''ஆமாந்தம்பி! தாலிக்கட்டறதுக்கு முன்னாடியே பொண்ணையும், புள்ளையையும் மேடையேத்தி விடறதென்ன? அதுங்க உரசிக்கிட்டும், இளிச்சுக்கிட்டும் நிக்கறதென்ன... கண்கொண்டு பார்க்க முடியாது."

"பரவாயில்லை... விஜயன் அப்படியொரு அனர்த்தமான காரியத்தைப் பண்ணலை!"

இரண்டு பெரிசுகள் மட்டுமல்ல... வந்திருந்த பலபேரும் அதைப்பற்றிதான் பாராட்டிப் பேசிக் கொண்டிருந்தனர்.

கௌஷிக்... காவ்யா கண்களில் தட்டுப்படும் போதெல்லாம்... ஆவலாய் விழி முழுக்க நிரப்பி நெஞ்சில் இறக்கிக்

கொண்டான்.

விடிந்தால் திருமணம்!

அனைவரும் உறங்கி விட்டிருந்தனர்.

பட்சிகளின் ஆரவாரத்தோடு... அந்தநாள் விடிந்தது.

ஆனால்...!

## 6

**கா**வ்யாஸ்ரீயைக் காணவில்லை!

பாத்ரூம்... மாடி... இன்னபிற இடங்களில் தேடியும் இல்லை. பத்மினியின் அடிவயிற்றில் கொள்ளிக்கட்டையை தணலோடு சூடிழுத்ததுபோல்... துடித்துப் போனாள்.

உறவுகளின் முகத்தில் கலவரம்! நகைப்பெட்டி அப்படியே இருந்தது. திறந்துப் பார்த்தபோது நகைகளுடன் ஒரு கடிதமும் இருந்தது.

'மன்னித்து விடுங்கள்! இந்தத் திருமணத்தில் விருப்பமில்லை. என் மனதுக்குப் பிடித்தவருடன் வாழக் கிளம்பி விட்டேன். நான் இல்லாவிட்டாலும், இந்தத் திருமணம் வேறொரு மணப்பெண்ணுடன் நடக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

–இப்படிக்கு,
காவ்யாஸ்ரீ.'

விஜயன் திக்பிரமையோடு அமர்ந்து விட்டார்.

'ஒன்பது மணிக்கு முகூர்த்தம். இப்படி கடைசி நேரத்தில் கழுத்தை அறுத்துவிட்டு போய்விட்டாளே! இத்தனை நாளும் மவுனமாய் இருந்தது இப்படி என்னை எல்லார் மத்தியிலும் நிற்க வைத்து அவமானப்படுத்தவா? என்ன செய்யப் போகிறேன்? மாப்பிள்ளை வீட்டாருக்கு என்ன பதிலைச் சொல்லப் போகிறேன்?'

உறவினர்களின் கேள்விகளுக்கு பதில் சொல்ல முடியவில்லை. குளித்து விட்டு மணமேடையில் அமரத் தன்னை தயார் படுத்திக் கொள்ள முனைந்த கௌஷிக்கிற்கும் விஷயம் வர...

ஆடிப் போனான்!

பார்த்து பார்த்து ரசித்த பவுர்ணமி நிலவு திடீரென வெடித்துச் சிதறி பாகம் பாகமாய் அவன் தலையிலேயே வந்து விழுந்ததுபோல் அதிர்ச்சி.

'ஏன்... ஏன்?'

'என்னைப் பிடிக்கவில்லையா? பார்த்த அன்றே சொல்லியிருக்கலாமே! மணமேடை ஏறும் சமயம் பார்த்தா ஓடிப் போக வேண்டும்? யாருடன் ஓடிப் போனாலும், எல்லாத் தகுதியிருந்தும் ஆண்மையில்லாதவனைப் போல் அசிங்கப்படுத்திவிட்டுப் போய் விட்டாளே! வெளியில் எப்படி தலைகாட்டுவேன்? ஆபீஸில் புறம்பேசியே மண்ணில் புதைய வைத்து விடுவார்களே! அம்மா... ஐயோ... அம்மாவுக்கு தெரிந்தால்... முதலுக்கே மோசம்! உடல் இருக்கும் நிலையில் சிறு அதிர்ச்சியும் ஆட்கொல்லி மருந்தாயிற்றே?'

ஆனால் விஷயம் கற்பகம் காதிற்கு போனதும் கிட்டத்தட்ட மயக்கத்திற்குப் போனாள். வந்திருந்த உறவினர்களில் இருந்த மருத்துவரை எழுப்ப ஓர் ஆள் போனது.

சங்கவி ஆற்றாமையால் அழுதாள்.

அம்மாவின் பயம்... இப்பேர்ப்பட்ட பயங்கரத்துடன் நடந்தே விடும் என்று துஞ் சித்தும் எதிர்பார்க்கவில்லை.

அந்த நிலையிலும் ஒரு மாற்று உபாயம் தோன்றியது.

மாமியாரும் அங்குதான் இருந்தாள்.

'அவளிடம் கெஞ்சி கேட்டு அதே முகூர்த்தத்தில் மஞ்சுவை அண்ணனுக்கு மணமுடித்தால் என்ன?'

எண்ணம் சொல்லாக வெளிவர... அம்பாய் சீறி விட்டாள் அத்தை.

''என் பொண்ணை என்ன எச்சில் சோத்துக்கு காத்திருக்கிறதா நினைச்சிட்டியா? அழகான உருவத்துக்கு ஆசைப்பட்டு மயங்கினவங்கதானே நீங்க? ஆனா, நடத்தை அழகாயிருந்துச்சா? என்ன சுயநலம்டி உங்களுக்கு? அவ வேணாம்னு ஓடிப்போனதும் என் பொண்ணை கல்யாணப் பொண்ணாக்கணுமா? நாங்களும் உப்பும் உறைப்புமா சாப்பிடறவங்கதான். மானம், ரோஷம் எல்லாமே அதிகமாகவே இருக்கு. மொய் எழுதிட்டு போகத்தான் வந்தோம். மானத்தை அடகு வைக்க அல்ல. நான் நினைச்சாக்கூட இது நடக்காது. என் பொண்ணு அவ்வளவு கோவமா இருக்கா. அதனாலதான் அவ இந்தக் கல்யாணத்துக்குக் கூட வரலே!''

அதற்கு மேல் அவளிடம் என்ன எதிர்பார்க்க முடியும்?

ஆனால், யாரோ ஒரு வயதானப் பெண்மணிதான் திடீரென அந்த யோசனையைச் சொன்னது.

“சட்டுபுட்டுன்னு ஆகறதைப் பாருங்க. ஓடிப் போன சிறுக்கியை நினைச்சு அழறதெல்லாம் அப்புறம். அதான் அவளோட தங்கச்சி இருக்காளே! அவளை ரெடிப் பண்ணி உக்கார வையுங்க!”

‘அட... ஆமாம்ல? இது ஏன் தோணாமல் போய்விட்டது? பெயரையும், வயதையும் தவிர இவளுக்கும் அவளுக்கும் பெரிய வித்தியாசமில்லை. திருமணத்திற்கு வருபவர்களுக்கும் இந்த வித்தியாசம் தெரியப் போவதில்லை.’ விஜயன் செயலில் இறங்கினார்.

பத்மினிக்கும் அந்த யோசனை நிம்மதியைத் தந்தது. மாப்பிள்ளை வீட்டாரைக் கலந்துப் பேசினர். அவர்களுக்கும் கிணற்றிலிருந்து காப்பாற்றிவிட்ட உணர்வு. கௌஷிக் மவுனமாய் இருந்தான்.

சரி என்றோ, வேண்டாம் என்றோ சொல்லக்கூடிய மனநிலை அற்று இருந்தான்.

அம்மாவின் நிம்மதி ஒருபுறம். தன்னை அவமானத்திலிருந்து, சங்கடத்திலிருந்து தற்காத்துக் கொள்வது மறுபுறம். ஆக, தலையாட்டிதான் ஆக வேண்டும்.

ஆனால்?

திடீரென்று வேறு உடையை அதே நிறத்தில், அதே விலையில் வேறு கடையில் வாங்குவது போலல்லவா உள்ளது? இதுவா வாழ்க்கை?

‘அதிலுள்ள மனசு, கனவு, விருப்பம், எதிர்பார்ப்பு... எதுவுமே பகிர்ந்துக் கொள்ளாத ஒரு புதுப்பெண் எப்படி என் மனைவியாக முடியும்?’

ஒருகணம்... தான்யா மனக்கண்முன் வந்துப் போனாள்.

ஏனோ... நெஞ்சை நீவி விட்டதுப் போல்தான் இருந்தது.

சொல்லப் போனால்... ஓடிப் போன காவ்யாவைவிட, இவளிடம்தான் சில நிமிடங்களாவது பேசியிருக்கிறேன்.

அதற்கு மேல் தராசு தட்டில் வைத்து நிறைகுறைகளை எடைபோட அவகாசமில்லை.

உடைமாற்றி மாலையும், வேட்டி சட்டையுமாய் மணையில் அமர வைக்கப்பட்டான்.

சற்று நேரத்தில்... திடீர் மணமகள் தான்யா பக்கத்தில் அமர்த்தப்பட்டாள். அவள் முகத்தை ஏறிட்டுப் பார்க்கத் தயங்கி... அவள் பக்கமேத் திரும்பவில்லை.

திரும்பியிருந்தால் பார்த்திருக்கக் கூடும்... அவள் கண்களோரம், வைரமுத்துக்கள் கரை கட்டி நிற்பதை!

அவள் வாழ்நாளில் சந்தித்திராத, பெரும் துயரத்தை, சங்கடத்தை, வேதனையை, இழப்பை, தோல்வியை, தன் சந்தோஷத்தை... அரைமணி நேரம் முன்பு சந்தித்திருந்தாள்.

அவள் தமக்கை செய்த பிழைக்காக, கோழைத்தனத்திற்காக... பெற்றவர்கள் இவள் காலைப் பற்றி... கவுரவத்தை பிச்சையாகக் கேட்டபோது செத்தேப் போனாள்.

என்னவென்று சொல்லுவாள்?

அக்கா எதற்காக உங்களை தலைகுனிய வைத்தாளோ, அதே காதல் எனக்கும் இருக்கிறது. யாருக்காகவும் வைகுந்தை என்னால் இழக்க முடியாது என்றா? சொன்னால்... அதுவும் இந்த சூழ்நிலையில்... உயிர் மிஞ்சுமா பெற்றவர்களுக்கு?

‘‘சனியனை பெத்த கடனுக்கு நாங்க அசிங்கப்படலாம். அதில் ஒரு நியாயமிருக்கும். ஆனா, மாப்பிள்ளை என்னப் பண்ணினார்? என்ன அருமையான பிள்ளை? பெத்தவ... மயங்கி விழுந்துட்டா. உடம்புக்கு முடியாத அந்த மனுஷிக்கு ஏதாவது ஆகிவிட்டால்? பாரேன்... எத்தனை பேர் பலிகடா ஆகறாங்க! நீதான் இப்ப எங்க குலதெய்வம். மாப்பிள்ளை வீட்ல சரின்னுட்டாங்க. இப்ப உன் சம்மதம் வேணும். நீ மறுத்திட்டா... எங்க மரணம் நிச்சயம். உனக்கு யோசிக்க கூட உரிமைத் தர முடியாத பாவியா கூனிக் குறுகி நிக்கிறோம் தான்யா... எப்பேர்ப்பட்ட அநியாயம் தெரியுமா... உனக்கு நாங்கப் பண்றது? ஆனாலும் வேற வழித் தெரியலே...’’

அப்பாவும், அம்மாவும் மாறி மாறி கெஞ்சினார்களே தவிர, மிரட்டவில்லை. மண்டபத்தில் சூழ்நிலை தரைக்காற்றாய்... சுழன்றடித்துக் கொண்டிருந்தது.

இக்கட்டான தருணம்!

என்னை ஒரு வாரம் பார்க்க முடியாமல் தவித்துப் போன வைகுந்திற்கு... எவ்வளவு பெரிய தண்டனை கிடைக்கப் போகிறது!

வேறு வழி என்று ஒன்றுமே இல்லாமல் சம்மதிக்க வேண்டிய சூழல்.

கொஞ்சமும் எதிர்பாராத ஒரு ஆண், இதோ என் பக்கத்தில்!

‘மன்னிச்சிடு வைகுந்த். எல்லாமே முடிஞ்சு போச்சு. நமக்குள்ளே இருந்த காதல், உரிமை, எதிர்காலத்தைப் பற்றி கட்டியிருந்த கோட்டை, நம் மழலைச் செல்வங்கள், எல்லாமே பின்னோக்கிப்

போய் ஒரு புள்ளியாய் மறையப் போகிறது. இனி உன்னைப் பார்ப்பேனா? தெரியாது. ஆனால் உன்னை மறப்பேன்!'

அதற்கு மேல் ஐயர் அவளை யோசிக்க விடவில்லை. கெட்டிமேளம் ஒலிக்க, அட்சதைகள் பொழிய... கழுத்தில் தாலி கட்டப்பட்டது.

அதற்கடுத்து என்ன நடக்கிறதென்று இருவருமே உணரவில்லை. எந்திரமாய் நின்று, சிரித்து, பரிசுப் பொருட்கள் பெற்று, போஸ் கொடுத்து... ரொம்பவே களைத்துப் போய்விட்டனர்.

சம்பிரதாயப்படி... மணமகன் வீட்டிற்கு தம்பதிகளை அழைத்துச் சென்று, பால் பழம் தர வேண்டும்.

காரில் மாமியார் வீட்டிற்கு வந்திறங்கினாள்.

கௌஷிக்கின் அறையில் அமர வைக்கப்பட்டனர்.

கௌஷிக்... தன் அறைக்குள்ளே இருந்த பாத்ரூமிற்குள் சென்று கதவை சாத்திக் கொள்ள...

தான்யாவின் செல்போன் அலறியது.

'வைகுந்த்!'

## 7

**அ**ந்த நேரத்தில், அந்த சூழ்நிலையில் இப்படியொரு தொலைபேசி அழைப்பை கொஞ்சமும் எதிர்பார்க்காத தான்யா... நெஞ்ச படபடப்புடன் மொபைலை எடுத்தாள்.

"ஹலோ" என்றாள்.

"ஹாய் செல்லம்... எப்படியிருக்கே? ரொம்ப பிஸியா? கல்யாணம் நல்லபடி முடிஞ்சுதா? நம்ம கல்யாணம் எப்ப?"

"அப்புறம் பேசறேன்."

"ஏய்... கட் பண்ணிடாதே... உங்கிட்ட பேசணும் போல் இருக்கு."

"புரிஞ்சுக்க வைகுந்த்... அப்புறம் பேசறேன்."

"உன் வாய்ஸே சரியில்லையே... என்னாச்சு? ஏதாவது பிரச்சினையா?"

"அப்புறம் பேசறேன் வைகுந்த். இப்ப எதையும் பேச முடியாது. நானே கால் பண்றேன்!"

கட் பண்ணினாள்.

'ஸ்விட்ச் ஆப் பண்ணிவிடலாம். அம்மா, அப்பா பேச முயற்சிக்கலாம். ஒரு வேளை காவ்யாக் கூட லைனில் வரலாம். மறுபடி வைகுந்த் கால் பண்ணிவிடக் கூடாது.'

பாத்ரூமிலிருந்து வெளிப்பட்ட கௌஷிக், அவள் பதற்றமாய் பேசி போனை கட் பண்ணுவதை பார்த்தான்.

அவள் ரிலாக்ஸாய் இல்லை என்பதைப் புரிந்து கொண்டவன்... பரிதாபப்பட்டான்.

"தான்யா..."

"ம்..." என்று எழுந்துக் கொண்டாள்.

"ஐய்யோ... அதுக்கேன் எந்திரிக்கிறே? உட்கார்!"

அப்போதும் நின்றுக் கொண்டே இருந்தாள்.

அமர்ந்துக் கொண்டவன், "இப்ப உட்காரலாமே!" என்றான்.

அமர்ந்தாள்.

"நீ ரொம்ப டென்ஷன்ல, குழப்பத்துல இருக்கேன்னு பார்த்தாலேத் தெரியுது. இல்லேன்னாதான் ஆச்சர்யம்."

"இ...இல்லே... லைட்டா தலைவலி!"

"தெரியும் தான்யா. மாத்திரை இருக்கு தர்றேன். போட்டுட்டு சூடா ஒரு காபி... காபி சாப்பிடுவியா, இல்லை டீயா?"

"ரெண்டும் சாப்பிடுவேன்!"

"குட்! போட்டுத் தரச் சொல்றேன். குடிச்சிட்டு படுத்துக்க. உன்னை யாரும் டிஸ்டர்ப் பண்ணாத அளவுக்கு பார்த்துக்கறேன். இன்க்லூடிங் மீ! நானும் கீழே போய்டறேன். மறுபடி ராகு காலம் முடிஞ்சுதான் உங்க வீட்டுக்கு கூட்டிட்டுப் போவாங்க! அதுவரைக்கும் நல்லா ரெஸ்ட் எடு!"

கனிவுடன் பேசியவன் மேல் மரியாதை ஏற்பட்டது. 'அடுத்தவர் உணர்வுகளை எளிதாய் புரிந்துக் கொண்டு மதிப்பளிக்கிறானே! ஒவ்வொரு கணவன் மனைவிக்கும் இருக்க வேண்டிய குணமல்லவா? டென்ஷன் எனக்கு மட்டுமா? இவருக்கில்லையா? என்னோட வலியும், வேதனையும் இவருக்கும்தானே?'

வெளியேறிப் போனவனை ஆச்சர்யமாய் பார்த்தாள்.

□ □ □

**கி**டைத்த சிறு சந்தர்ப்பத்தில் வைகுந்திடம் எல்லாவற்றையும் சொல்லிவிட்டு, பாத்ரூமில் சென்று சத்தம் வராமல் அழுது தீர்த்தாள்.

மணமக்கள் பெண் வீட்டிற்கு அழைத்து வரப்பட்டனர்.

அங்கு கௌஷிக்கிடம் தனிமையில் விஜயன் கை கூப்பி மன்னிப்பு கேட்டு அழுதார்.

''எங்களால உங்களுக்கு ஏற்பட்ட அநீதி மன்னிக்க முடியாதது! காவ்யா எங்களை நிமிரவே முடியாத அளவுக்கு தலைகுனிய வச்சிட்டா. அவ எந்த சூழ்நிலைல வந்தாலும் நான் மன்னிக்கவேப்



போறதில்லை. தான்யா... ரொம்ப நல்லப் பொண்ணு. இந்த திடீர் கல்யாணத்துனால அவ கொஞ்சம் அதிர்ச்சியாய்ட்டா! எங்களை மன்னிச்சிடுங்க மாப்பிள்ளை! ஏதாவது கோபமிருந்தா எங்ககிட்டே காட்டுங்க. அதை தான்யா கிட்டே..."

"சேச்சே... என்ன மாமா இப்படிப் பேசறீங்க? உங்க பெரியப் பொண்ணு பண்ணின தப்புக்கு தான்யா எப்படி பொறுப்பாவா? என்னால எல்லாரையும் புரிஞ்சுக்க முடியும் மாமா!"

"இது... இதுபோதும் மாப்பிள்ளே...! அப்புறம் சங்கடம் வேண்டாம்னு... ரெண்டு நாளைக்கு ஸ்டார் ஹோட்டல்ல ரூம் போட்டிருக்கேன்!"

"ஹோட்டல்ல ரூமா... எதுக்கு?"

"நீங்க ரெண்டுபேரும் பேசி புரிஞ்சுக்கறதுக்கு..." இழுத்தபடி நாசூக்காய் சொன்னார்.

அதுதான் சரி என மவுனமானான்.

நல்ல நேரம் பார்த்து... கார் ஹோட்டலுக்குச் சென்றது.

தான்யா கலக்கமும், கலவரமும் ஒரு சேர... சோர்ந்துப் போனாள்.

அமர்க்களமான சூட்!

அழகான இளநீலநிற பட்டுப்புடவையில் உடம்பெங்கும் தங்க காசுகளை பதித்து வைத்தாற்போன்ற செல்ப் டிசைன் அவளை அப்சரஸாய் காட்டியது.

குழந்தைத்தனமான முகத்தின் மருட்சி, நேர்த்தியான அலங்காரத்தின் அழகு, மனதிற்கு இதமாய் இருந்தது.

சில கணங்கள் எல்லாமே மறந்துப் போயின. அருகேச் சென்று அவள் முகத்தை நெஞ்சில் சாய்த்துக் கொள்ள துடித்தது.

'இவள் எனக்காக பூவுலகத்திற்கு அனுப்பப்பட்ட தேவதையா?'

கட்டில் பூக்களால் கர்வமாய் காத்திருந்தது. அதைப் பார்க்கவே பயமாய் இருந்தது.

"தான்யா..."

"........."

"தானு..."

"அ...?!" திடுக்கிட்டு நிமிர்ந்தாள்.

'எப்படி கூப்பிட்டார்? தானு என்றா?'

"இப்படி உட்காரும்மா!" அனுசரணையாய் வந்தன வார்த்தைகள்.

அவன் காட்டிய ஒற்றை சோபாவில் அமர்ந்தாள்.

"ரொம்ப டென்ஷனாத் தெரியறே! பி... கூல்! நாம உன் அக்காவைப் பத்தி பேசி மனசை மேலும் டென்ஷனாக்கிக்க வேணாம். அவ எங்கிட்ட உண்மைய சொல்லியிருந்தா... யாருக்கும் வேதனை இல்லை. காதலிக்கறது தப்பேயில்லை. அது அடுத்தவங்களை கஷ்டப்படுத்திடக் கூடாது. பாவம் நீ... அக்கா கல்யாணத்துக்குன்னு வந்துட்டு, உனக்கே கல்யாணம்னா... உன்னை... உன் மனசை என்னாலப் புரிஞ்சுக்க முடியுது. இந்த சமயத்தில... இதோ இந்த ரூம், கட்டில், முதலிரவுன்னு கண்டிப்பா உன் மனசு இப்ப இதுக்கெல்லாம் தயாரா இருக்காதுன்னு தெரியும். ஏன்... என் மனசேத் தயாரா இல்லை. உனக்கு என்கிட்ட ஏதாவது பேசணும்னா... தயவு பண்ணி தைரியமாப் பேசு."

அவன் பேசப் பேச... அவன் மீது மரியாதை மேன்மேலும் அதிகமாயிற்று. கொஞ்சம் பிரமிப்பும் ஏற்பட்டது. பாதுகாப்பான உணர்வு மனசெங்கும் நிரவுவதை அனுபவித்தாள்.

'இப்படிப்பட்ட மனிதனையா காவ்யா கஷ்டப்படுத்தினாள்.'

'இவரிடம் எதையுமே மனம் விட்டுப் பேசலாமே!'

ஏனோ, அவளுக்கு தன் காதலைப் பற்றி சொல்லி விட வேண்டும் என்றுத் தோன்றியது.

அவன் முகம், பேச்சு... நம்பிக்கையை விதைத்தது. மெஸ்மரிசம் பண்ணியது.

அவள் தன்னை தயங்கியபடி ஏறிட்டு நிலம் பார்க்க... புரிந்துக் கொண்டான்.

"ஏதோ சொல்லணும்னு நினைக்கிறே! தயங்காம சொல்லு! முதல்ல நாம ப்ரண்ட்ஸ்! அதுக்கு பிறகுதான் பந்தம், உறவு எல்லாமே. நாம இப்ப எல்லாத்தையும் ஷேர் பண்ணிக்கறது நல்லதில்லையா?"

தெளிவாய்... கனிவாய் பேசினான்.

அவள் மெதுவாய் தலையாட்டினாள்.

"தவிர... நாம ரெண்டுபேரும் எதிர்பார்க்காத கல்யாணம் இது! அதனால நாளைக்கு நமக்குள்ளே எந்த பிரச்சினையும் வந்துடக் கூடாது. சொல்லு... எதையும் தப்பா எடுத்துக்க மாட்டேன்."

சற்றே நிமிர்ந்து தீர்க்கமாய் அவனைப் பார்த்தாள்.

சிறு முறுவலிப்பை சிநேக பாவத்துடன் வெளிப்படுத்தினாள்.

அதுவே அவனுக்குப் போதுமானதாய் இருந்தது.

'தானு... ஏனோ தெரியவில்லை. உன் மீது அதிகமாய் பாசம் உண்டாகிறது. எனக்கானவள் நீ மட்டும்தான்... என்ற எண்ணம் ஆழமாய் ஏற்படுகிறது. காவ்யா ஓடிப்போனதுக் கூட நல்லதுதானோ என்ற நிம்மதி உண்டாகிறது. தயக்கங்கள் உதறி வா... கண்ணே! இனிமையாய் இல்லறம் ஆரம்பிப்போம்!' மனசுக்குள் பரவசம்.

அத்தனையும் ஒரு நிமிடம்தான்!

தான்யா வாயைத் திறந்தாள்.

''என் அக்கா மாதிரி உங்ககிட்டே மறைக்க விரும்பலே... நான் ஒருத்தரை காதலிக்கிறேன்... அவர் பெயர் வைகுந்த்!''

கௌஷிக் தலையில் பெரிய கல்லை வீசி எறிந்தாற்போல் துடித்துப் போனான்.

கொட்டக் கொட்ட விழித்திருந்தாள் தான்யா. உடம்பு அசதியில் கெஞ்சியது. ஆனால், இமைகள் ஒன்றுசேர மறுத்தன.

எதிரே இருந்த சோபாவில் நிச்சலனமாய் உறங்கிக் கொண்டிருந்த கௌஷிக்கை கவலையுடன் பார்த்தாள்.

'என்ன இவர்? மனம் விட்டுப் பேசியது தவறா? வைகுந்த் பற்றிச் சொன்னதும் அதிர்ச்சியானார். அது இயல்பான விஷயம். ஆனால், அதற்கு பிறகு ஒரு வார்த்தைக்கூட அது சம்பந்தமாய் பேசவில்லையே! யார், என்ன, எப்படி காதல் ஏற்பட்டது, இப்ப உள்ள சூழ்நிலை என்ன? இப்படி எதுவுமே கேட்கவில்லையே! கேட்டால்தானே சொல்ல முடியும்? அதுவும் நானாக எப்படி கூற முடியும்? இவர் மனதில் என்ன இருக்கிறதோ?'

கலவரங்கள் கைகோர்த்து உள்ளத்தில் சூழ்ந்துக் கொண்டது.

கண்கள் மூடியிருந்தனவே ஒழிய கௌஷிக் உறங்கவில்லை. அவன் நெஞ்சத்தில் பேரலைகள் ஆர்ப்பரித்து எழுந்து கண்களை நனைத்தது.

இரண்டு பெண்களால் ஏமாற்றப் பட்டதை, அவனால் ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை.

காவ்யா ஒரு பக்கம். அவளை இப்போது நினைப்பதே பாவம். ஆனால், தான்யா சட்டரீதியாக, தேவர்கள் சாட்சியாக, பல நூறுப்பேர் முன்னிலையில்

## 90 வயதில் 1,497 கி.மீ. சைக்கிள் பயணம்!

சாதனை முயற்சிக்கு வயது ஒரு தடையே அல்ல என்பதை அமெரிக்காவைச்



சேர்ந்த பெர்த் பிளெவன்ஸ் என்ற 90 வயது முதியவர் நிருபித்துக் காட்டியிருக்கிறார். இவருக்கு சைக்கிள் பந்தயத்தில் மிகுந்த ஈடுபாடு உண்டு. கென்சுகியில் இருந்து புளோரிடா வரையில் 1,497 கி.மீ. தூரம் சைக்கிளில் பயணம் செய்ய திட்டமிட்டார்.

தனது இந்த சாதனைப் பயணத்திற்காக பிரத்தியேகமாக 3 சக்கர சைக்கிளை தயாரித்தார். சாய்ந்து கொண்டு ஓட்டக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்ட இந்த சைக்கிளில் தனது பயணத்தை தொடங்கியவர், 21 நாட்களில் வெற்றிகரமாக பயணத்தை முடித்தார். நெடுஞ்சாலைகளில் அவரது மூன்று சக்கர சைக்கிளுக்கு அனுமதி கிடைக்காததால் கூடுதல் நாட்கள் பிடித்ததாக வருத்தப்படுகிறார் பிளெவன்ஸ்.

இவரது இந்த பயணத்தின் போது பாதி தூரம் வரையில் அவரது மகனும், அடுத்த பாதிதூரம் மகளும் பாதுகாப்புக்கு உடன் வந்தனர். தன்னால் முடியும் என்று நினைத்ததால் தனது பயணத்தை நிறைவு செய்ததாக கூறும் பெர்த், இந்த பயணத்தின் போது தனக்கு சோர்வே ஏற்படவில்லை என்று 20 வயது இளைஞரைப் போல உற்சாகமாக சொல்கிறார். சாதிக்க நினைத்தால் வயது குறுக்கே நிற்பதில்லை என்ற உண்மையை இவர் மூலம் தெரிந்து கொள்ள முடிகிறது.

மனைவியானவள். அவளும் காதல் வலையில் விழுந்திருப்பது... தொண்டைக்குள் சிக்கிய எலும்புத் துண்டாய்... துக்கத்தை கூட விழுங்க முடியாத வலி.

கௌஷிக் மிக வசீகரமானவன். அவன் மென்மையான சிரிப்பிற்கும், பார்வைக்குமே பல காதல்கள் பின்னோக்கி வந்தன. அதில் தான்யா மாதிரி அழகான பெண்களும் அடக்கம். ஆனால், தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான். விடலை மனசு ஆவலைத் தூண்டினாலும் கடமையை நினைத்து... புறந்தள்ளினான்.

சிறுவயதிலேயே தகப்பனை இழந்த பிள்ளைகள். கற்பகம் கஷ்டப்பட்டு வளர்த்தாள். எக்ஸ்போர்ட் கம்பெனியில் துணிகளை அயர்ன் பண்ணுகிற வேலை. மாசத்தில் நான்கு முறை எட்டிப்பார்க்கும் நெஞ்சுவலியோடு பிள்ளைகளுக்கு நல்ல படிப்பினைத் தந்தாள். அம்மாவின் சிரமம் உணர்ந்தே வளர்ந்தனர் இருவரும். சங்கவிக்கு நகை, பணம் என்று அவள் தந்தை எதையும் சேமித்து வைத்திருக்கவில்லை.

அதையும் உணர்ந்திருந்த கௌஷிக் நன்கு படித்து, டி.என்.பி.எஸ்.சி. எக்ஸாம் எழுதி பாஸாகி அரசாங்க உத்தியோகத்தில் அமர்ந்தான். தேவையற்ற எந்த செலவையும் அவன் ஏற்படுத்திக் கொள்ளவில்லை. தங்கைக்கு சேமித்து, நகை, சீருடன் அருமையாய் திருமணம் செய்து வைத்தான். அவள் அதிர்ஷ்டம் கணவனாக அமைந்த மதனுக்கு மாமியார் வீட்டில் கொள்ளையடிக்கும் கேடுகெட்ட புத்தியில்லை.

கௌஷிக் பொறுப்பான ஆண்மகனாய் இருந்ததால்... காதல் என்ற வலைக்குள் தலையை விடவில்லை. அதனாலேயே ஒரு நப்பாசை. தன் மனைவியாக வரும் பெண்ணிற்கு முதல் காதல் என்பது தன்னிடமிருந்தே கிடைக்க வேண்டும் என்று! நியாயம்தானே? ஆனால், அடுத்தடுத்து இரண்டு வெடிகுண்டுகள் ஒரே நாளில் வெடிக்கக் காண்பான் என நினைக்கவில்லையே!

அதுவும் தான்யா சொன்ன விதம் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

'நான் ஒருத்தரை காதலிக்கிறேன்' என்றல்லவாச் சொன்னாள்? காதலித்தேன் என்றுச் சொல்லவில்லையே? அப்படியானால்... இப்போதும் அவள் அவனைக் காதலிக்கிறாள் என்றுதானே அர்த்தம்?' ஆத்திரம் அவசரமாய் உற்பத்தியானது.

ஆனால், அவனின் நல்ல மனசு மேலெழுந்து வந்தது. 'இதென்னடா நியாயம்? இன்னொருவனின் காதலிதான், இப்போது மனைவியாகி இருக்கிறாள். என்னென்ன கற்பனைகளுடன் வாழ்ந்திருப்பாள்? சில நாட்களிலேயே காவ்யாவைப் பற்றிய சிந்தனையிலேயே ஏக்கத்துடன் இரவுகளை தள்ளி விட்டிருக்கேனே!

இதில் தான்யாவின் தவறென்ன? உண்மையில் சொல்லப்போனால், இந்தக் கல்யாணத்தில் அவள்தானே பலிகடா? என் மானத்தைக் காப்பாற்றவும், தன் பெற்றோரின் கவுரவத்தை காப்பாற்றவும் அவள் காதலை நசுக்கி, மணமேடையில் அமர வைக்கப் பட்டிருக்கிறாள். ஒரு அவசரத்திற்காக கழுத்தை நீட்டியிருக்கிறாளே ஒழிய... என் கூட வாழ்வதற்காக அல்ல! படித்தப் பெண். தைரியமாய் பெங்களூருவில் தங்கிப் பணிபுரிந்தவள். தெளிவானவள். தைரியசாலியும் கூட! காதலன் பக்கம் எந்த பிரச்சினையும் இல்லாமல், எப்படி காதலில் தோல்வி அடைய விரும்புவாள்? மறுபடி காதலனுடன் சேர்ந்து வாழும் எண்ணம் இருப்பதால்தானே, காதலிக்கிறேன் என்றாள்?

நல்லவேளை... அவள் மீது அவசரமாய் துளிர்த்த காதலை வெளிப்படுத்தாமல் போனேனே? அடுத்து நான் என்ன செய்ய வேண்டும். முதலில் அவளுக்கு எந்த சங்கடத்தையும் தரக் கூடாது. அடுத்து, இதற்கு என்ன முடிவு என்பதை யோசிக்க வேண்டும். நான் பாட்டிற்கு, அவள் சொன்ன விஷயத்தைக் கேட்டதும், பதில்மொழி கூறாமல் மவுனமாய் வந்து படுத்து விட்டேனே! அதனால்தான், சங்கடத்துடன் உறக்கம் வராமல் தவிக்கிறாளா? சாரி தானு... ம்ஹூம்... தான்யா!'

□ □ □

சிறு சப்தத்தில் விழித்துக் கொண்ட தான்யா... ட்ரஸ்ஸிங் டேபிள் முன்பு நின்று தலைவாரிக் கொண்டிருந்த கௌஷிக்கைப் பார்த்து அரக்கப்பரக்க எழுந்தாள்.

நாலுமணி வரை கூட தான் விழித்திருந்ததாய் ஞாபகம். எப்போது தூங்கினாள் என்று அவளுக்கேத் தெரியவில்லை.

தனக்கு முன்பே குளித்து தயாரானவனைப் பார்த்து சங்கடப்பட்டாள்.

'அவர் முன்பு நன்றாய் உறங்கிக் கொண்டிருந்திருக்கிறேனே!

'குட்மார்னிங்' சொல்லலாமா, வேண்டாமா?

கண்ணாடி வழியே நான் எழுந்தமர்ந்ததை பார்த்தாரே! அவர் எனக்கு குட்மார்னிங் சொல்லவில்லையே! நான் சொல்லி, பதிலுக்குச் சொல்லாவிட்டால்?'

அதற்கு மேல் கட்டிலில் அமர்ந்திருக்காமல் பாத்ரூமில் புகுந்துக் கொண்டாள்.

குளித்து ப்ரஷ்ஷானாள்.

இளம்பச்சை பனாரஸ் பட்டுடுத்தி... மெலிதான ஒப்பனையுடன், அவன் முன் வந்தாள்.

அந்த அழகு நெஞ்சையடைத்தது.

அவளிடம் நிலைபெற்ற பார்வையை வலுக்கட்டாயமாய் அகற்ற வேண்டியிருந்தது கௌஷிக்கிற்கு.

'பாவிப் பெண்ணே! இத்தனை அழகாய் இருக்கிறாயே? எனக்கு எல்லா உரிமையிருந்தும், இல்லாதவனாக்கி விட்டாயே!'

பசித்தது.

நேற்றிரவுக் கூட இருவருமே சாப்பிடவில்லை.

தான்யாவுக்கு பசியைப் பொறுத்துக் கொள்ள முடியாது.

'அவர் பேசுகிறாரோ இல்லையோ, நாமேக் கேட்டு விடுவது நல்லது. ஒருவேளை நானேப் பேச வேண்டும் என்று எதிர்பார்க்கிறாரோ?'

"பசிக்குது... சாப்பிடலாமா?" அவனேக் கேட்டு விட்டான்.

முகம் மலர்ந்தது.

"நானே கேக்கணும்னு நினைச்சேன்!"

"அப்ப சரி... என்னல்லாம் வேணும்? சொன்னால் ஆர்டர் பண்ணி விடலாம்!" என்றபடி இன்டர்காமில் தொடர்பு கொண்டான்.

சிறு ஏமாற்றம் உண்டானது தான்யாவிற்கு. அவனுடன் காரிடாரில் நடந்துச் சென்று, லிப்டில் பயணித்து, டைனிங் ரூமிற்கு சென்று மெதுமெதுவாய் சாப்பிட வேண்டும் என்று ஆசைப்பட்டாள்.

அவனானால்?

"கேட்டேனே! இன்னும் சற்று நேரத்தில் சர்வீஸ் ஆள் வந்து விடுவார். அதோ, டேபிள் மீது மெனு கார்ட் இருக்கிறதே... அதிலிருந்து ஆர்டர் செய்து விட்டால் என் வேலை எளிதாகி விடும்."

"எனக்கு இது அது என்றில்லை. சைனீஸ், தாய்புட், இட்லி, தோசை... எதுவாயிருந்தாலும் சாப்பிடுவேன். வேண்டாம்னு நான் ஒதுக்கியது பாம்பு, தேள், நாய், மாடு... மட்டுமே! ஸோ, நீங்களே ஆர்டர் செய்யுங்கள். அதுவே எனக்கும்!"

"அதெப்படி?" என்று ஆரம்பித்தவன், பின் மெனு கார்டை எடுத்து குறித்துக் கொண்டான்.

சற்று நேரத்தில் அறையிலேயே இருவரும் சாப்பிட்டு முடித்தனர்.

'அடுத்து என்ன புரோகிராமாக இருக்கும்? நேற்றெல்லாம் இவர் அவ்வளவுப் பேசினார்? இன்று அளந்துப் பேசுகிறார். அட்லீஸ்ட் ப்ரண்டாக நினைத்தாவது ஏதாவது பேசலாம். ம்ஹூம்! அப்பா வேறு ரெண்டு நாளைக்கு இந்த 'சூட்'டை புக் பண்ணி விட்டிருக்கிறார்.'

"ஒக்கே... நான் கொஞ்சம் வெளியேப் போய்ட்டு வர்றேன். உள்ளே தாழ் போட்டுக்க. நான் பேர் சொல்லி கூப்பிட்டா மட்டும் கதவைத் திற! வர்றேன்..." என்று அவள் முகம் பார்த்துப் பேசாமல், சொல்லிவிட்டுப் போய்விட்டான்.

எதுவும் எண்ணத் தோன்றாமல், சில கணங்கள் அப்படியே நின்று விட்டாள் தான்யா.

## 9

**அ**வன் குரல் கேட்குமா? என்று ஒவ்வொரு கணமும் எதிர்பார்த்து ஏமாந்தாள். வீரியம் குறைந்த சூரியன் பலமின்றி மேற்கில் வீழ்ந்து அமிழ்ந்துக் கொண்டிருந்தான்.

தான்யாவிற்கு அழுகைக் குமுறிக் கொண்டு வந்தது.

'என்ன நடக்கிறது இங்கே? மிக கஷ்டப்பட்டு இயல்பாய் இருப்பதுப் போல் காட்டிக் கொள்வது எதற்காக? இவர் மனசு கஷ்டப்படக் கூடாதென்றுதானே? ஆனால், இவரென்றால், காலையில் சென்றவர் இன்னும் ஹோட்டலுக்கு வரவில்லை. அவர் செல் நம்பர் எனக்குத் தெரியாது. என் நம்பர் அவருக்கும் தெரியாது. அப்பாவிடமும் கேட்க முடியாது. பிறகு, எல்லாமே வெட்ட வெளிச்சம் ஆகி விடும்.

காலையில் அம்மாவும், அப்பாவும் பேசியபோதுகூட, அவர் ரிசப்ஷனில் தன் நண்பர்களுடன் பேசிக் கொண்டிருப்பதாக பொய் சொன்னேனே! இதுவரை

## ஒரே மரத்தில் 250 வகையான ஆப்பிள் பழங்கள்!

இங்கிலாந்தில் மேற்கு செஷல்ஸ் பகுதியில் வசித்து வருபவர் பவுல் பெர்னாட். இவருக்கு 40 வயதாகிறது. இவருக்கு விதவிதமான ஆப்பிள்களை ஒரே மரத்தில் காய்க்க வைக்க வேண்டுமென்பது ஒரு தணியாத ஆசையாக இருந்தது. இதற்காக தனது தோட்டத்தில் 1989-ம் ஆண்டு முதல் ஆப்பிள் மரத்தை வளர்த்தார். 24 வருடங்கள் செலவிட்டு இந்த மரத்தை வளர்த்து பெரிதாக்கினார். வருடத்தின் ஒவ்வொரு குளிர் காலத்திலும் புதிய ஆப்பிள் வகையினை ஒட்டுமுறை மூலம் இணைத்தார்.



இவ்வாறு இணைத்ததின் பயனாக ஒரே மரத்தில் அரிதான சமையல் ஆப்பிள் உள்ளிட்ட 250 வகையான ஆப்பிள்கள் கனிந்தன. இது குறித்து மகிழ்ச்சி பொங்க கூறும் பெர்னாட், ''எனது குடும்பமே தோட்டக்கலையில் ஆர்வத்துடன் ஈடுபடும். எனது பெற்றோரும் இந்த தோட்டத்தினை உருவாக்க பெரிதும் உதவினார்கள். அவர்களுடைய ஒத்துழைப்பால் இந்த சாதனையை நிகழ்த்திக் காட்ட முடிந்தது. எனக்கு ஏராளமான மரங்களை நடவேண்டும் என்று விருப்பம்தான். ஆனால் அதற்கு போதுமான இடவசதி எங்களிடம் இல்லை. ஆகவேதான் இந்த குடும்ப மரம் ஒன்றை மட்டும் உருவாக்கினேன்'' என்றார்.

உலகம் முழுவதும் 6 ஆயிரம் வகையான ஆப்பிள் வகைகள் உண்டு. இதில் 2,200 வகையான ஆப்பிள்கள் தேசிய பழங்கள் சேகரிப்பகத்தில் இருப்பதாகவும், அவற்றில் தனது தோட்டத்துப் பழங்களும் உண்டு என்று பெருமைப்பட செய்கிறார் பெர்னாட்.

---

வரவில்லை. அப்படியானால், என்மீது கோபமோ வெறுப்போ இருக்கிறது என்றுதானே அர்த்தம்? வெளிப்படையாக, உண்மையைப் பேசுவது அவ்வளவு பெரிய குற்றமா?'

மேலும் ஒரு மணி நேரம் கழித்த பிறகே ஹோட்டலுக்கு வந்தான் கௌஷிக்.

அவனைப் பார்த்ததும் அப்படியொரு நிம்மதியுணர்வு. அதைவிட அழுகைப் பொங்கி வந்தது.

பதற்றத்துடன் அவனை நெருங்கினாள்.

''மணி என்ன ஆகிறதுத் தெரியுமா?''

"ஸாரி...!"

''காலையில் சென்றவர் ஏழு மணிக்குத்தான் திரும்பி வர்றீங்க. தனியா இங்கே... ரொம்ப கஷ்டமாயிருந்துச்சு!''

அவள் குரலின் தொனி கௌஷிக்கை கரைத்தது. அவள் தலையைத் தடவி பயத்தைப் போக்க வேண்டும் போல் எழுந்த ஆவலை அடக்கிக் கொண்டான்.

''உன்னை சங்கடப்படுத்தக் கூடாதுன்னுதான்... ஈவ்னிங் வரை பீச்சிலே உட்கார்ந்துட்டு வந்தேன்!''

"........?!"

''உன் மனசு எனக்குப் புரியுது தான்யா. மனசை ஒருத்தரிடம் கொடுத்து விட்டு, என் கையால கட்டாயத் தாலிய சுமந்துக்கிட்டு... இதெல்லாம் எவ்வளவு பெரிய கொடுமைன்னு எனக்குப் புரியுது. இதுல யாரை நோகறது? இங்கேயே இருந்து உன்னை சங்கடப்படுத்த விரும்பலம்மா! தவிர, உனக்கும் நடந்த விஷயங்களை அவருக்குத் தெரியப்படுத்தணும் இல்லையா?''

"............?!"

"இப்பவும் எதுவும் தலைக்கு மீறிப் போயிடலே. அவர்... அவர் பேரென்ன சொன்னே? கைலாஷ்...! இல்லேயில்லே... வைகுந்த்! கரெக்ட்தானே?"

"ம்..."

"அவர்கிட்டே நானேப் பேசறேன்!"

"பேசி?"

"பயப்படாதே! உங்க ரெண்டுபேரையும் நான் சேர்த்து வைக்கிறேன். கொஞ்சநாள் அவர்கிட்ட டைம் வாங்கிக்கறேன். என் அம்மாவுக்கு டாக்டர் ஆறு மாசமோ, ஏழு மாசமோ கெடு வச்சிருக்கார். அவங்களுக்காகத்தான் அவசர அவசரமா முகூர்த்தம் வச்சது."

"அம்மா... அம்மாவுக்கு என்ன?" பதறினாள்.

"ஹார்ட் ப்ராப்ளம். ஓபன் ஹார்ட் சர்ஜரி பண்ணினோம். இதய தசையோடு ஒட்டி ஒரு கட்டி இருக்கு. அதை ரிமூவ் பண்ற அளவுக்கு வயசும், உடல்நிலையும் கைகுடுக்கலே! வால்வுல உள்ள அடைப்பு மட்டும் சரி பண்ணி விட்டுட்டாங்க! அம்மா எங்களுக்காக ரொம்ப கஷ்டப்பட்டுட்டாங்க! அவங்களோட கனவே, எனக்கும் என் தங்கைக்கும் நல்லபடி கல்யாணம் ஆகணும்னுதான்! கல்யாணத்தன்னைக்கு உன் அக்கா அப்படி ஒரு காரியம் பண்ணினதுத் தெரிஞ்சதுமே... அம்மாவை ஹாஸ்பிடல்ல சேர்க்கற அளவுக்கு ஆகிடுச்சு. இப்ப இந்த விஷயம் தெரிஞ்சா?" கண்களில் லேசாய் ஈரம் படர்ந்தது.

"..........?!"

"அம்மா இருக்கிற கொஞ்ச நாளைக்கு நாம இணக்கமான தம்பதியா நடிச்சாப் போதும்! அதுக்கு நீ மனசு வைக்கணும். ப்ளீஸ்... செய்வியா?"

'என்னவென்று சொல்லுவாள்? தான் மாடர்னாக வளர்ந்தாலும், இந்த மண்ணின் கலாசாரத்தை மதிப்பவள், கட்டாயப்படுத்தி கட்டப்பட்ட தாலிதான் என்றாலும், அதற்கு தான் எவ்வளவு மரியாதைத் தருபவள் என்று எப்படி உணர்த்துவேன்? வேறு வழியின்றி, வைகுந்தை மறந்துதான் ஆகவேண்டும் என்ற முடிவுக்கு தான் வந்ததை எப்படிச் சொல்லுவேன்? ஒருவேளை அப்படிச் சொன்னால், இதுநாள் வரை காதலித்ததெல்லாம் பொய்யாகி விடுமா? அவ்வளவு எளிதில் அவனைத் தூக்கி எறிகிறாள் என்றால், கணவனை தூக்கி எறிய எவ்வளவு நேரம் ஆகும்? என முரண்பட்ட சிந்தனையில் ஊறிப் போனவராய் இருந்துவிட்டால்?'

'நாம் மனதொத்து வாழலாம்!' எனச் சொல்ல எதுவோத் தடுத்தது.

'அவர் வாயிலும் அப்படி ஒரு வார்த்தை வரவில்லையே! அடுத்தவன் காதலியை மனைவியாக ஏற்க பிடிக்கவில்லை போலும்!'

"தான்யா உன்னைத்தான்!"

"அ...என்ன?"

"எனக்காக... ஸாரி... என் அம்மாவுக்காக நடிப்பாயா?"

மெல்ல தலையாட்டினாள்.

"அவர்... அவரோட நம்பரைத் தருகிறாயா?"

"யார் நம்பர்?"

"வைகுந்த்! பேசிவிடலாம்!"

"வேண்டாம். நானே சொல்லிக் கொள்கிறேன்!" வார்த்தையில் கொஞ்சம் கனம் சேர்ந்திருந்தது.

அதற்கு மேல் அவனும் வற்புறுத்தவில்லை.

□ □ □

ஒரு மாதம் கடந்தது!

சம்பிரதாயங்கள் அனைத்தும் முடிந்து தான்யா மாமியார் வீட்டிற்கு வந்து விட்டாள்.

மாடி அறையில் கணவனுடன் இருக்கையில், தேவை ஏற்படின் பேசுவாள்... அவனும்தான்! அதுவும் ஓரிரு வார்த்தைகளில் உரையாடல் முடிந்து விடும். தனித்தனி படுக்கை. பெட்ஷீட்டை தலை வரை இழுத்துப் போர்த்திக் கொண்டால், காலையில்தான் எடுப்பான் கௌஷிக்.

காலையில் எழுந்துவிடும் தான்யா, முடிந்தவரை எல்லா வேலைகளையும் தானே செய்தாள். அவளுக்கு சங்கடம் தர விரும்பாமல் வீடு துடைக்க, பாத்திரம் தேய்க்க, துணி துவைக்க ஒரு பெண்மணியை வேலைக்கு நியமித்தான்.

ஆனால், கேட்டு கேட்டு சமைத்தாலும், அற்புதமாய் சமைத்தாள் தான்யா.

மாமியாரை குழந்தையைப் போல் தாங்கினாள்.

அதையெல்லாம் பார்க்க கௌஷிக்கிற்கு ஆச்சர்யமாக இருந்தது.

'நடிப்புக்காக என்றாலும் முகம் சுளிக்காமல் செய்கிறாளே!'

சங்கவியும், அவள் குழந்தையும் அவளிடம் நன்றாக ஒட்டிக் கொண்டு விட்டனர்.

அம்மாவை அண்ணி நேசமாய் கவனித்துக் கொள்வதும், அவளுக்கென எண்ணெய் சேர்க்காத உணவாய், தனியாய் சமைப்பதும் மலைக்க வைக்கிறது.

தான்யாவும் அவர்கள் இருவருக்கும் அழகாய் மெஹந்தி போட்டு விடுவாள். சிலசமயம் மாமியாருக்கும் போட்டு விட்டு,

ஜாலியாய் கிண்டல் பண்ணுவாள்.

அம்மா மனம் விட்டு சிரிப்பதைப் பார்த்து ஆனந்தக்கண்ணீர் விட்டான் கௌஷிக்.

'இந்த வீட்டின் சந்தோஷம் அப்படியே நிலைத்து விட்டால் எப்படியிருக்கும்? தானு... அந்த வைகுந்தை நீ மறந்து விடக் கூடாதா?' ஏங்கிப் போனான்.

அன்று...

அலுவலகம் புறப்பட்டுக் கொண்டிருந்தான் கௌஷிக்.

மதிய உணவு அடங்கிய ஹாட்பேகை கொண்டு வந்து கணவனிடம் கொடுத்தாள் தான்யா.

முகத்திலும், இடுப்பிலும் வியர்வைப் பளபளத்து... அதுவே ஒரு தனிக் களையாய் இருந்ததை ரசித்துப் பார்த்தான்... அவளறியாமல்.

ஆனால், அவன் பார்ப்பதுத் தெரிந்துதான் தான்யாவும் அங்கேயும் இங்கேயுமாய் பார்வையைச் சுழல விட்டாள்.

"தாங்க்ஸ்"

"எதுக்கு?"

"இதோ... இந்த லன்ச் பேகுக்காக?"

"நல்லாயிருக்கு கௌஷிக்! பொண்டாட்டிக்கு யாராவது தாங்க்ஸ் சொல்லுவாங்களா?" என்றபடி அம்மா அங்கே வந்தாள்.

"இப்ப அதெல்லாம் தப்பே இல்லேம்மா... என்ன தானு நான் சொல்றது?"

"ம்ஹூம்... அத்தை சொல்றதுதான் சரி... என் புருஷனுக்கு நான் ஆசை ஆசையாய் சமைச்சுத் தர்றேன். அதுக்கு தாங்க்ஸ் சொல்லி சர்வரா ஆக்கிடாதீங்க!"

அந்த வார்த்தையை அவள் வாயால் கேட்கும் போது, ஆசை துளிர்த்தது.

"ஏம்ப்பா... நீ பாட்டுக்கு ஆபீசுக்கு போய்ட்டு, வீடு வந்து சேர்றதுன்னு இருந்தா எப்படி? இந்த பொண்ணை ஊட்டி, கொடைக்கானல்னு ஒரு வாரம் கூட்டிட்டுப் போயேன்ப்பா!"

'ஒரு வாரமா, அதுவும் ஊட்டிக்கா?'

இருவரும் திகைத்துதான் போயினர்.

மற்றவர்கள் முன் நடிப்பதற்காக சினிமாவிற்கென சென்று, மூன்று நான்கு முறை பீச்சில் தனித்தனியே அமர்ந்திருந்த கதை... யாருக்குத் தெரியும்?

இப்போது அடுத்த குண்டு!

## உலகின் மிகச்சிறிய குட்டிக்கார்!

அமெரிக்காவைச் சேர்ந்தவர் ஆஸ்டின் கால்சன். இவர் ஒரு கார் வடிவமைப்பாளர். வித்தியாசமான பல கார்களை வடிவமைத்து உள்ளார். இதில் புதுமை படைக்க வேண்டும் என்ற ஆர்வம் இவருக்கு ஏற்பட்டது. அந்த ஆர்வத்தில் சிறிய ரக கார் ஒன்றை வடிவமைத்தார். அந்த கார் 25 அங்குல உயரமும், 4 அடி நீளமும்




மட்டுமே இருக்கும்படி வடிவமைத்தார். இந்த காரில் பயன்படுத்துவதற்காக பாதுகாப்பு கண்ணாடி, ஒலிப்பான், சீட்பெல்ட் போன்றவற்றை சேகரித்து

## 10

'கழுத்துவலி, திருகுவலி' என தான்யா கதைவிட, 'ஆபீஸில் லீவே கிடையாதாம், மேற்கொண்டு லீவு எடுத்தால், வடக்குப் பக்கம், வறட்சியாய் இருக்கும் இடமாய் பார்த்து மாற்றல் போட்டு விடுவார்களாம்' என கௌஷிக்கும் சேர்ந்து கற்பகத்தின் வாயை அடைத்து விட்டனர்.

கற்பகத்தின் அண்ணன் வீடு ராயபுரத்தில் இருந்தது. புது தம்பதிகளுக்கு விருந்துக் கொடுக்க அழைத்திருந்தனர். உடன் கற்பகமும் கிளம்பி விட்டாள். அண்ணன் வீடாயிற்றே?

மிக பிரமாண்ட விருந்து! அசைவத்தில் என்னவெல்லாம் உண்டோ, அத்தனையும் சமைத்திருந்தனர். தலைவாழை இலையில்... நிரம்பியிருந்த பதார்த்தங்களைப் பார்த்ததுமே ஏப்பம்தான் வந்தது.

பொருத்தினார். சாலை போக்குவரத்து வாகன விதிகளின்படி இந்த காருக்கு அனைத்து அம்சங்களும் இருக்கும்படி பார்த்துக் கொண்டார். பிறகு இந்த காருக்கு தடையில்லா சான்றிதழையும் பெற்றார்.

இதன் பின்னர் அரசு ஒப்புதலுடன் தான் வடிவமைத்த காரை சாலையில் ஓட்டிக் காண்பித்தார். இந்த முயற்சியில் அவருக்கு வெற்றி கிடைத்ததோடு கின்னஸ் உலக சாதனை புத்தகத்தில் உலகின் மிகச்




சிறிய கார் என்ற பெருமையையும் அது பெற்றுள்ளது. மூர்த்தி சிறியதானாலும் கீர்த்தி பெரியது என்பார்கள். அதைப் போல கால்சனின் சாதனையும் பாராட்டத்தக்கதே.

எப்படி சாப்பிட முடியும்?

அண்ணன் வீட்டு உருப்படிகள் எல்லாம் சேர்ந்து அவர்களை கேலியும், கிண்டலுமாய் படுத்தி எடுத்து விட்டனர்.

இருவரும் ஊட்டிக் கொண்டால்தான் ஆச்சு என குழுமிக் கொள்ள,

சங்கடத்தை விட இருவருக்கும் வெட்கம் ஊற்றெடுத்தது என்பதுதான் நிஜம்.

வேறுவழியின்றி சாதத்தை தான்யாவுக்கு ஊட்டிவிட, அவள் கைமேலெல்லாம் சிந்தி விட்டது.

''ஸாரி... ஸாரி...'' என்றபடி அவள் கையில் அவசரமாய் பருக்கைகளைத் தள்ளிவிட...

இவள் ஊட்டியது மீசையில் ஒட்டிக் கொள்ள, அதை கர்ச்சீப்பால் துடைத்துவிட...

''தோ... பார்டா... இவங்க இன்னமும் துடைச்சு விட்டுக்கிட்டுதான் இருக்காங்களாம்... நாமளும் நம்பணுமாம்!'' என திருமணமாகி குழந்தையைப் பெற்ற அண்ணன் பையன் ஊதிவிட...

''ஓஹ்ஹோ...'' என மற்றவர்கள் கோரஸாய் சத்தமிட.....

'இதெல்லாம் நிஜமாகிவிடக் கூடாதா?' என தான்யாவின் உள்ளம் அரித்தது.

□ □ □

கௌஷிக் வீடு திரும்பிய போது... நிசப்தமாய் இருந்தது.

அம்மா ஹாலில் டி.வி. பார்த்துக் கொண்டிருந்தாள்.

வேறு யாரும்... வேறு யாரென்ன... தான்யாதான்... இருப்பதாய்த் தெரியவில்லை.

அம்மாவைத் தொந்தரவு செய்ய விரும்பாமல் மாடிக்குச் செல்ல முற்பட்டவனைப் பார்த்து விட்டாள்.

"வந்துட்டியாப்பா? முகம் அலம்பிட்டு வா... காபி போட்டுத் தர்றேன்!"

"ஏம்மா? தான்யா இல்லே?"

"ஏன்... உனக்கு அவ போன் பண்ணலே?" வியப்புடன் கேட்டாள்.

'போனா? என் போன் நம்பர்தான் அவளுக்குத் தெரியாதே!'

"என்ன விஷயம்மா? நான்... நான்... செல்லை ஸ்விட்ச் ஆப் பண்ணியிருந்தேன்!"

"சம்பந்திக்கு உடம்புக்கு முடியலையாம். அட்டாக்குன்னு சொன்னாங்க. போன் வந்ததும் பாவம் அந்தப் பொண்ணு ரொம்ப அழுதுட்டா. நானும் கூட வர்றேன்னேன். வேண்டாம்னு தடுத்துட்டா!"

'வேற... உடனே எனக்கு போன் பண்ணி சொல்லச் சொல்லுவே... அவ திருதிருன்னு முழிப்பாளே! சே... என்ன வாழ்க்கை இது?'

''நல்ல மனுஷன். எல்லாம் அந்த காவ்யாவால வந்திருக்கும். அவ பண்ணிட்டுப் போன கூத்துக்கு அட்டாக் வராம... வேறென்ன வரும்? அவளாலேயே நொடிஞ்சுப் போய்ட்டார். நீயும் போய் பார்த்துட்டு வா!"

''இதோப் போறேன்ம்மா... காபி வேணாம்!"

"சாந்தோம் போகணும். டயர்டாகிடும் கௌஷி! ஒரு குளியல் போட்டுட்டு வா... நான் அதுக்குள்ளே காபி போட்டு வச்சிடறேன்!"

□ □ □

பத்மினி ரொம்பவே பயந்து விட்டிருந்தாள். அழுதழுது... கண்கள் சிவந்துப் போயிருந்தன.

ஹாஸ்பிடல் வெகு சுத்தமாய்... தரையில் கால் வைக்கவேக் கூசியது. நர்ஸ்கள் விமானப் பணிப்பெண்கள் போல நேர்த்தியான அழகுடனும், கனிவான பேச்சுடனும் ஆச்சர்யப்படுத்தினர்.

தான்யா அம்மாவைச் சமாதானப்படுத்திக் கொண்டிருந்தாள்.

“அம்மா... ப்ளீஸ்... அதான் அப்பாவுக்கு ஒண்ணுமில்லே, பயப்படாதீங்கன்னு டாக்டர் சொல்லிட்டாரே!”

“இல்லே தானு... உன் அப்பா நெஞ்சை புடிச்சிக்கிட்டு சாஞ்சப்ப... என் உயிரேப் போய்டுச்சிடி. எல்லாம் அவளால வந்தது!”

“யாரு காவ்யாக்காவா?”

‘‘அந்த சுயநலக்காரியால்தான்! அப்பாவுக்கு போன் பண்ணி, புருஷனோட வீட்டுக்கு வரப்போறதா சொல்லியிருக்கா! பதிலுக்கு இவர் கத்தினார். அவளும், அது என் தாத்தா வீடுதானே... எனக்கும் பங்கிருக்குன்ற ரீதியில பேசியிருக்கா...!”

“அம்மா... ஒண்ணைப் புரிஞ்சுக்கணும். அக்கா பேசின முறை தப்புதான்! செஞ்ச முறையெல்லாம் அநியாயம்தான். ஆனா, அவ நம்ம வீட்டுப் பொண்ணும்மா! கடைசி வரைக்கும் ஒதுக்கி வச்சிட முடியுமா? ஆசைப்பட்டவனையே கல்யாணம் பண்ணிக்கணும்னு அதை அடைய நினைச்ச வழிதான் அனர்த்தமாயிடுச்சு”

‘‘என்னடிப் பேசறே? அவளால என்னவெல்லாம் நடந்துப் போச்சு? மாப்பிள்ளையும், அவங்க வீட்டாளுங்களும் எவ்ளோ அசிங்கப்பட்டாங்க? நீ சொல்ற மாதிரி மறந்து, மன்னிச்சு அவளை ஏத்துக்கிட்டா... உன் புகுந்த வீட்ல நம்மளைப் பத்தி என்ன நினைப்பாங்க?”

“அதுதான் பிரச்சினைன்னா... அதை நான் சரிப் பண்ணிடறேன்ம்மா!”

‘‘முதல்ல எங்க மனசே அதுக்குத் தயாராயில்லே தானு! இதெல்லாம் உடனே முடிவெடுக்கிற விஷயமில்லே... எங்க காயமெல்லாம் ஆறணும். இதைப் பத்தி இப்ப பேசவே வேணாம்... விட்ரு!”

“சரிம்மா... அப்பா எப்ப கண்விழிப்பார்?”

‘‘நல்லா ரெஸ்ட் எடுக்கணும்னு இன்ஜெக்ஷன் போட்டிருக்காங்க. லேட்டாகும்... நீ கிளம்பு... இருட்டிப் போச்சு! மாப்பிள்ளைக்கு இந்த விஷயம் சொல்லிட்டியா?”

அவள் பதில் சொல்லும் முன், காரிடாரில் வந்துக் கொண்டிருந்த கௌஷிக்கைப் பார்த்துவிட்டாள் பத்மினி.

‘‘அதோ... மாப்பிள்ளையே வந்துட்டாரே!”

ஆச்சர்யத்துடன் திரும்பிப் பார்த்தாள் தான்யா.

முகத்தில் சின்னப் பதற்றத்துடன், பேண்ட் பாக்கெட்டில் வலது கையை நுழைத்தபடி, வேகமாய் நடந்து வந்ததில் ஒரே சீராய் எழுந்தமர்ந்த கேசத்தை ஒதுக்கி விட்டபடி வந்துக் கொண்டிருந்தவனின் வசீகரத்தை அந்த சூழ்நிலையிலும் ஒரு கணம் தன்னிலை மறந்து ரசித்தாள்.

“என்னாச்சு அத்தை? மாமா, இப்ப எப்படியிருக்கார்? டாக்டர் என்னச் சொன்னார்?”

பத்மினியும் தழுதழுத்தக் குரலில் எல்லாவற்றையும் சொல்லி முடித்தாள்.

‘‘மாமாவுக்கு ஒண்ணும் ஆகாது அத்தை! நான் அவரைப் பார்த்துக்கறேன். கவலைப்படாதீங்க.”

“நாளைக்கு டிஸ்சார்ஜ் பண்ணிடுவாங்க. பிரச்சினை இல்லை. ஆனா, அவர் மனசொடிஞ்சுப் போயிருக்கார். அதுவே அவரை கொஞ்சம் கொஞ்சமா அரிச்சுத் தின்னுது.”

‘‘அத்தை... சொல்றேன்னுத் தப்பா எடுத்துக்காதீங்க. காவ்யா... தான் காதலிச்சவரையே கல்யாணம் பண்ணிக்கணும்னு நினைச்சாங்க. அது தப்பில்லே. அதுக்காக அவங்க குறிச்ச நேரம்தான் தப்பு! ஆனா, அதுக்காக அவங்களை ஒரேயடியா ஒதுக்கி வச்சிட முடியுமா? அவங்களும் வேற வழியில்லாம பயத்தில அப்படிப் பண்ணியிருக்காங்க. நாலுபேர் ஏதாவது சொல்லிடுவாங்களோங்கற எண்ணத்தை மனசுல பூட்டி வச்சாக்கூட அட்டாக் வரும் அத்தை! பாசத்தை காட்டறதுக்கு எது தடையா இருக்கோ அதை தூக்கி எறிஞ்சிடணும். ஒரு நாள் மாமாகிட்ட நானேப் பேசறேன்!”

அவன் பேசப் பேச மலைத்துப் போனாள் தான்யா. குளிர்ந்துப் போனாள் பத்மினி.

மேலும் அரைமணிநேரம் அங்கிருந்த பின் வற்புறுத்தி இருவரையும் வீட்டுக்கு அனுப்பி வைத்தாள் பத்மினி.

திருமணமாகி இதுவரை ஜோடியாய் பைக்கில் சென்றதில்லை. ஆட்டோதான்!

முதல்முறையாய் பைக்கில் அமர்ந்தாள்.

அவனுக்குள்ளும் ஏதேதோ உணர்ச்சிகள்.

வெகு நெருக்கத்தில் அவன்! அவனுக்கே உரிய பாடி ஸ்மெல், சாண்டல் சோப்பின் நறுமணம், அப்பாவின் உடல்நிலையால் ஏற்பட்ட மனவருத்தம், அம்மாவிடம் காவ்யாவிற்காக பரிந்துப் பேசிய அவனின் குணம், எல்லாமாய் கலந்து தன்னை மீறி அவன் தோளில் சாய முற்பட....

அது நேரம் வரை அவள் பேசாமல் வருவது கண்டு அரைமனதுடன், "பைக்கில் வருவது சிரமமாய் இருந்தால் ஆட்டோவில் ஏத்தி விடறேன்" என்றான்.

"இதிலென்ன சிரமம்? உங்கள் நாடகத்தில் இதுவும் ஒரு காட்சி, அவ்வளவுதானே?" என்றாள் கசப்பாக.

## 11

**அ**ம்மாவின் முன்பும், மற்றவர்கள் முன்பும் இயல்பாய் பேசினாலும், பெட்ரூமில் வந்துவிட்டால்... மவுனம்தான். மீறிப் பேச வேண்டிய கட்டாயம் ஏற்பட்டாலும், ம், சரி, வேணாம் என்ற ஒற்றைச் சொல்லுடன் முடிந்து விடும்.

இளமையைப் பொதித்து வைத்துள்ள இரண்டு உடல்களும், உணர்வுகளை அடக்கி வைத்த மனங்களும்... தங்களை கட்டுப்படுத்திக் கொள்ள... பெரும் போராட்டம்தான்! அதுவும் ஒருவருக்கொருவர் தங்கள் வீக்னசை மறைக்க, நேசத்தை மறைக்க படும்பாடு இருக்கிறதே... சொல்லில் சொல்லிட முடியாது.

அன்றிரவு வெகுநேரம் உறக்கம் வராமல், எழுந்தமர்ந்து, சுவற்றில் சாய்ந்துக் கொண்டு, வயிற்றைப் பிடித்து அழுத்தியபடி, முகம் சுருக்கியவளை... நெடுநேரம் கழித்தேப் பார்த்தான்.

இரவு விளக்கொளியில்... உற்று கவனித்தப் பின்பே புலப்பட்டது.

தூக்கிவாரிப் போட கட்டிலை விட்டு இறங்கி வந்தான். டியூப் லைட்டைப் போட்டான்.

"தான்யா..."

"ம்..."

"தான்யா... என்னாச்சு?"

"ஒ... ஒண்ணுமில்லே?"

"அப்படித் தெரியலியே... முகமெல்லாம் வியர்த்திருக்கு. வயித்தைப் பிடிச்சிட்டிருக்கே? என்னப் பண்ணுது?"

'என்னவென்றுச் சொல்வாள்? மாதாந்திரப் பிரச்சினையின் போது, இப்படி வயிற்றுவலி வந்து உயிரைக் கொல்லும் என்று? கூடி வாழும் தம்பதியராய் இருந்தால் ஒரு குழந்தையைப் போல் கணவனின் மார்பில் சாய்ந்துக் கொண்டுச் சொல்லலாம். இவரிடம் எப்படிச் சொல்வது? சங்கடமாயிராதா?'

"ஒண்ணுமில்லீங்க?"

''ப்ச்... சொல்லும்மா! பார்க்கவே கஷ்டமாயிருக்கு தானு."

"..........?!"

அவள் முகம் சங்கடத்தில் நெளியப் புரிந்துக் கொண்டான்.

''புரியுது! இந்த டைம்ல ஏதாவது டேப்லட் எடுத்துப்பியா? சொன்னா வாங்கிட்டு வருவேன்!"

"ம்ஹூம்... பழக்கமில்லே... கொஞ்சம் கூலா எதையாவதுக் குடிப்பேன்... அவ்வளவுதான்!"

"இரு... ப்ரிட்ஜ்ல ஏதாவது கூல்ட்ரிங்ஸ் இருக்கான்னுப் பார்க்கறேன்."

"எல்லாம் காலி... பரவாயில்லே... நான் அட்ஜஸ்ட் பண்ணிக்கறேன்!"

''என்னப் பரவாயில்லே? அஞ்சே நிமிஷம்... வந்துடறேன்!"

சடுதியில் சட்டை பேண்ட்டை மாட்டிக் கொண்டு பைக் சாவியுடன் வேகமாய்க் கீழிறங்கினான்.

சொன்னது போலவே பத்து நிமிடத்தில் பெரிய கேரிபேக்குடன் வந்தான்.

பேப்பர் சுற்றிய கவரை அவள் பக்கத்தில் வைத்துவிட்டு, ஒரு கூல்ட்ரிங்ஸ் பாட்டிலைத் திறந்து அவளிடம் கொடுத்தான். மீதி கூல்ட்ரிங்ஸை ப்ரிட்ஜில் அடுக்கி வைத்தான்.

சில்லென்ற பானம் தொண்டையில் இறங்கிய பின்தான்... கொஞ்சம் ரிலாக்ஸானாள்.

கௌஷிக் பக்கத்திலேயே அமர்ந்திருந்தான்.

"நீங்க போய் படுத்துக்குங்க!"

''இல்லே... உன்னைப் பார்க்க கஷ்டமாயிருக்கு. முடியலன்னா, ஹாஸ்பிடல் போகலாமா?"

"அந்தளவுக்கு எதுவுமில்லே... ப்ளீஸ்... போய்ப் படுங்க"

மனமின்றி எழுந்துச் சென்றான்.

கொஞ்சம் கொஞ்சமாய் வயிற்றுவலி மட்டுப்பட, அப்போதுதான் அந்த சிறிய பார்சலைப் பார்த்தாள்.

பிரித்தாள்!

சானிடரி நாப்கின்!

உண்மையில் அவளுக்குத் தேவையாய் இருந்தது.

அதில் இருந்தத் தாய்மை உணர்வு அவளை நெகிழச் செய்தது. கவலையுடன்... அவனை ஏறிட்டாள்.

முதுகு காட்டிப் படுத்திருந்தான் கௌஷிக்.

□ □ □

வெள்ளிக்கிழமை!

மாலை அம்மன் கோவிலுக்குப் போய்விட்டு அப்படியே அம்மாவைப் பார்த்துவிட்டு வரலாம் என்று வீட்டுக்குள் நுழைந்த சங்கவி... ஆச்சர்யத்துடன் அப்படியே நின்று விட்டாள்.

பூஜையறையில் வீணை வாசித்துக் கொண்டிருந்தாள் தான்யா! அருகில் கண்களை மூடி தலையாட்டிக் கொண்டு கற்பகம். தூணில் சாய்ந்து நின்று மனைவியை இமைக்காமல் பார்த்தபடி கௌஷிக்!

அருமையான கல்யாணி ராகம்... அவள் நளினமான விரல்களில் குதூகலமாய் துள்ளியோடி வந்தன.

வாசித்து முடித்ததும், இருப்பெண்களும் மனதாரப் பாராட்ட... கௌஷிக் தன்னறைக்குச் சென்றான்.

'எப்பேர்ப்பட்ட பெண் நீ? அழகும், தெய்வீகமும், கருணையும் கொண்ட பெண் மனைவியாய் அமைவது எப்பேர்ப்பட்ட வரம்? எல்லாம் மறந்து... என் வாழ்நாள் முழுக்க என்னுடனே இருந்துவிட மாட்டாயா? நீயும்தான்... எல்லாமே நாடகம் என்று கூறிவிட்டாயே?'

அப்போது... கற்பூர ஆரத்தித் தட்டுடன் மேலே வந்தவள்... அவனிடம் நீட்டுகிறாள்.

கற்பூர நெருப்பின் ஜொலிப்பு... அவள் கன்னங்களிலும், உதட்டிலும் மினுமினுப்பைத் தந்தது. நெற்றி வகிட்டில் குங்குமம். கண்களில் லேசாய் மை! தலையில் மல்லிகைப்பூ! சின்ன பார்டரிட்ட மைசூர் சில்க் சேலை! குழைவாய், வளைவாய் பளிச்சிட்டுக் காட்டிய இடை என இம்சித்தாள்.

மெல்லியப் புன்னகையுடன், "ம்" என்று நினைவூட்ட... தொட்டு கண்களில் ஒற்றிக் கொண்டவன், விபூதியையும் இட்டுக் கொண்டான்.

அவளையே குறுகுறுவெனப் பார்த்தவன் தலை கவிழ்ந்து சத்தம் வராமல் நகைத்தான்.

"வைகுந்த்... ரொம்ப லக்கி!" என்றான்.

கொஞ்சம் நிமிர்ந்து அவளை பார்த்திருந்தால்... அவள் முகத்தில் படர்ந்த கசப்பையும், கலவரத்தையும் கண்டிருப்பான்.

□ □ □

பூமியைக் கழுவிவிட்ட களைப்பில் உறங்கிக் கிடந்தது மழை. ஈரம் காயாமல் காற்றில் கலந்திருந்தது.

கிச்சனில் தாளிக்கும் வாசமும், கடுகு பொரியும் சன்னமான ஒலியும்... அந்த கிளைமேட்டுக்கு அக்கடா என்று லீவுப் போட்டுவிட்டு, வீட்டிலேயே முடங்கிக் கிடக்கலாம் போல் தோன்றியது.

கௌஷிக் குளித்து முடித்து லுங்கியும், டவலுமாய் கீழிறங்கி வந்தான்.

கற்பகம் சாமந்திப் பூவை நறுக்கி சாமிப்படங்களுக்கு போட்டு முடித்து விட்டு எதிரே வந்தாள்.

"பேப்பர் வந்துடுச்சாம்மா?"

"இல்லேப்பா... மழையாச்சே... பையன் கொஞ்சம் லேட்டாதான் வருவான். அப்புறம், நானும் ரெண்டு நாளா கேட்டுக்கிட்டே இருக்கேன். சம்பந்தியப் போய் பார்க்கணும்... கூட்டிக்கிட்டு போக மாட்டேங்கறே?"

"இன்னைக்கு சீக்கிரமாகவே வந்துடறேன். போலாம்!"

நைட்டியுடன் வெளிப்பட்டாள் தான்யா.

வெற்று மார்பில் டவலோடு நின்றிருந்தவனை ஏறிட்டுப் பார்க்கத் தயக்கமாய் இருந்தது.

அவள் எதையோச் சொல்ல வருகிறாள் என்று புரிய டவலை நன்றாய் போர்த்திக் கொண்டு, "என்ன தான்யா?" என்றான்.

"நான் சங்கவிக்கிட்டே சொல்லி வச்சிருந்தேன். கல்யாணம், விசேஷத்துக்கென்று யாராவது மெஹந்திப் போடக் கேட்டா, சொல்லச் சொல்லி? ஒரு ஆபர் வந்திருக்கு... போகட்டுமா?"

அவள் தன்னிடம் அனுமதிக் கேட்பதே பெரிய சந்தோஷத்தை உண்டுப் பண்ணியது.

"வீட்டிலேயும் எல்லா வேலையும் இழுத்துப் போட்டுச் செய்யறே! போதாததுக்கு இதுவேற... மணிக்கணக்குல

வரையணும்... முதுகு வலிக்காதா?"

"பணம் சும்மாவா? ரெண்டு கையிலேயும் போட நாலாயிரம் பீஸாச்சே?"

"அட..."

"பணத்துக்காக மட்டுமில்லே! எனக்கு பிடிச்ச வேலையிது."

"கண்டிப்பா போய்ட்டு வா! பத்திரம்..."

"தாங்க்ஸ்... அதை நான் பார்த்துக்கறேன்!"

சின்ன முறுவலுடன், சந்தன நிற நைட்டியில் முல்லை மலர் போலிருந்தவளை, தவிப்புடன் பார்த்தான்.

நாட்கள் நகர்ந்தன.

தான்யாவின் திறமைக்கு... நிறைய வாய்ப்புகள் வந்தன. கற்பகத்திற்கு எந்த சங்கடமும் வராமல் தன் வேலை வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டாள்.

மாதங்கள் நான்காகியும் தான்யா இன்னமும் உண்டாகாமல் இருப்பது குறித்து பெரியவர்கள் மத்தியில் கேள்வி எழ...

இருவருமே திடுக்கிட்டுப் போயினர்.

அன்றிரவு திடீரெனக் கேட்டான்.

"வைகுந்த் உனக்கு போன் பண்றாரா தான்யா?"

## 12

அந்த நேரத்தில் அப்படியொருக் கேள்வியை அவன் கேட்பான் என்று எதிர்பார்க்கவே இல்லை.

உறைந்துப் போயிருந்தாள்.

"உன்னைத்தான் தான்யா கேட்டேன்!"

"இப்போது இதைப்பற்றிப் பேச வேண்டாமே!"

அவனுக்கு ஒரு மாதிரியாக இருந்தது. அமைதியாகி விட்டான்.

அன்றிலிருந்து ஏனோ தான்யாவின் முகம் இயல்பாய் இல்லை. யோசனை அப்பியோ, கடுகடுவென எறிந்து விழுந்தோ, அதிகமாய் பேசாமல்...

அவளைப் பார்க்கும் போது வருத்தமாகி விடும் கௌஷிக்கிற்கு. அவள் உள்ளத்தில் என்ன உழல்கிறது என்று அறிந்துக் கொள்ள முடியாமல் திணறிப் போனான்.

'ஒருவேளை வைகுந்தின் நினைவால் தவிக்கிறாளோ? என்னால், அவனுடன் வாழப் போகும் வாழ்க்கை தள்ளிப் போகிறதோ? இல்லை... அவன் அம்மா எப்போது மண்டையைப் போடுவது, நாம் எப்போது ஒன்று சேர்வது? என்று சண்டைப் போடுகிறானோ? என்ன இது இப்படியொரு சிக்கல்?

அம்மா இப்போதுதான், நன்குத் தேறி நடமாடுகிறார். அம்மாவுக்கு தான்யா என்றால் ரொம்பவே பாசம். தான்யாவின் வாழ்க்கை மிக அவசியம்தான். ஆனால், அம்மாவின் உயிரும் மிக மிக அவசியம் அல்லவா? என்ன செய்யப் போகிறேன்? இருவருக்கும் நிம்மதியின்றி இப்படியொரு முடிச்சை ஏன் போட்டாய் கடவுளே!'

கௌஷிக்கும் எந்நேரமும் கவலைப்படிந்த யோசனையுடன் நடமாடியது, தன்னிடம் அதிகமாய் பேசாமல் தனித்திருப்பதை தான்யாவும் கவனிக்கவேச் செய்தாள்.

கௌஷிக் இந்த எண்ணத்திலேயே நடமாடிக் கொண்டிருந்ததன் விளைவு... பைக்கில் செல்லும் போது ஆட்டோவில் மோதி பலத்த காயம்!

அவனுடன் வேலைப் பார்த்த நண்பரின் கண்ணில் பட்டதால்... உடனடியாக ஹாஸ்பிடலில் சேர்த்து.. வீட்டிற்கு வந்து தகவல் சொன்னார்.

அதைக்கேட்டு மயக்கமே வந்து விட்டது தான்யாவிற்கு.

அலறியடித்துக் கொண்டு ஓடினாள். அவள் கண்ணீரையும், துடிப்பையும் ஆழ்ந்த உறக்கத்திலிருந்த கௌஷிக் அறிய முடியவில்லை.

நல்லவேளை... பெரிய அளவில் சேதமில்லை.

வலது கையில் எலும்பு முறிவு. காலில் அடி. நடப்பதற்கு சிரமமாய் இருக்குமளவிற்கு காயம்!

மூன்று நாட்களுக்குப் பிறகு டிஸ்சார்ஜ் செய்யப்பட்டான். எனினும், அவனுடையப் பணிகளை தானே செய்துக் கொள்ள முடியாது.

இடது கைவிரல்களிலும் பிளாஸ்திரி போடப்பட்டிருந்தது.

அவன் மறுத்தாலும் கேட்காமல் குளிப்பதற்கும், உண்பதற்கும் உதவி செய்தாள். பல சமயங்கள் அவளே ஊட்டியும் விட்டாள்.

கற்பகத்திற்கு பிள்ளை அடிபட்டு வந்தது ஒரு பக்கம் வருத்தம் என்றாலும், தாயாய் தாங்கி நிற்கும் மருமகளை பார்க்கையில் பெருமகிழ்ச்சி நெஞ்சை நிறைத்தது.

## 64 வயதில் நீச்சல் வீராங்கனை!

அமெரிக்க நீச்சல் வீராங்கனை டயானா நையத். இவருக்கு 64 வயதாகிறது. இவருக்கு கியூபா தலைநகர் ஹவானாவில் இருந்து அமெரிக்காவின் புளோரிடா வரை 177 கி.மீ. தூரத்தை கடலில் நீந்தி கடக்க வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது. அந்த முயற்சியில் உடனே ஈடுபட்டார். எந்த ஒரு



பாதுகாப்பு கவசமும் இல்லாமல் கடலில் நீந்தினார். 53 மணிநேர தொடர் நீச்சலுக்கு பிறகு புளோரிடாவின் கீ வெஸ்ட் நகர கடற்கரையை வெற்றிகரமாக சென்றடைந்தார்.

இவர் ஏற்கனவே இந்த முயற்சியில் ஈடுபட்டு 4 முறை தோல்வி அடைந்து இருக்கிறார். இப்போது 5-வது முறையாக முயற்சித்து அதில் வெற்றியும் பெற்று இருக்கிறார். ''ஒருபோதும் முயற்சியை கைவிடாதீர்கள். வயதை கருத்தில் கொள்ள தேவையில்லை'' என்று சொல்லும் டயானா, கடலில் நீந்தும் போது சுறா மற்றும் ஜெல்லி மீன்களின் தாக்குதலில் இருந்து தன்னை பாதுகாத்துக் கொள்ள முகத்தில் சிலிகான் முகமூடியை மட்டும் அணிந்து கொண்டார்.

இந்த சாதனையை முடிக்க இவருடன் 35 உதவியாளர்களும் சென்றனர். ஆர்வம் இருந்தால் அதே சமயம் துணிச்சலும் சேர்ந்திருந்தால் சாதனை என்பது கையளவு தூரம்தான்.

அன்றும் அப்படித்தான் கௌஷிக்கிற்கு தோசையை விண்டு ஊட்டி விட்டுக் கொண்டிருந்தாள்.

''நானே சாப்பிட்டுக் கொள்கிறேன் தான்யா!''

"ஸ்பூனில் சாப்பிடுவது மாதிரி இலகுவான உணவென்றால் பிரச்சினையில்லை. இது தோசை! கையால்தான் சாப்பிட்டாக வேண்டும். பேசாமல் சாப்பிடுங்கள்" என்று ஊட்டி விட,

புரைக்கேறி இருமினான்.

அவசரமாய் தண்ணீர் புகட்டி அவன் தலையில் தட்டி, நெஞ்சை நீவி விட்டாள்.

அவன் கண்கள் கலங்கியது.

"என்ன... என்னாச்சு?"

"............?!"

"தலையை வலிக்கிறதா?"

''ப்ளீஸ் தான்யா... இப்படி பாசத்தை அள்ளிக் கொட்டாதே... அது நடிப்பாய் இருந்தாலும்..."

"என்ன?!"

''நீ வைகுந்திற்கு சொந்தமானவள். நீ எனக்காக இந்தளவு சிரத்தை எடுத்துக் கொள்வதுத் தெரிந்தால் என்னாவது?"

சுருக்கென்று தைத்த மனதின் வலியை உதடு கடித்து அடக்கிக் கொண்டாள்.

''அவர் மனிதாபிமானம் உள்ளவர். யாரும் இதை தப்பாக எடுத்துக் கொள்ள முடியாது. தவிர, இப்போது இந்த வீட்டில் உங்களுக்கு உதவ வேறு யார் இருக்கிறார்கள்? அம்மாவையோ, சங்கவியையோ உதவிக்கு அழைத்தால்... நம்மோட 'நடிப்பு' தெரிந்து விடாதா? செய்வதை திருத்தமாய் செய்வோமே!"

அவன் வாயை அழகாய் அடைத்து விட்டாள். ஆனால், அவள் மனசுதான் ஆர்ப்பரித்துக் கொண்டிருந்தது.

'நடிப்பாம்! நடிக்கவாச் செய்கிறேன்? இதைக்கூட ஒரு மனிதனால் புரிந்துக் கொள்ள முடியாதா?'

கொஞ்ச நாட்களாய் கற்பகத்தின் உடல்நிலை சரியில்லை. இதை அவளே உணர்ந்திருந்தாள். நெஞ்சில் சுருக் சுருக்கென உள்ளிருந்த கட்டி வலியைக் கொடுத்தது. அதை வெளியில் காட்டிக் கொள்ளவும் தயங்கினாள்.

'மகன் அடிபட்டு படுக்கையில்

கிடக்கிறான். மருமகளுக்கு வீட்டையும் கவனித்துக் கொண்டு, கணவனையும் கவனித்துக் கொண்டு, பாவம் சிரமப்படுகிறாள். இப்போது நானிருக்கும் நிலைமையில் கண்டிப்பாய் ஹாஸ்பிடலில் அட்மிட் பண்ணச் சொல்வார்கள்! மேலும் சிரமம் அல்லவா?' என்று தனக்குள்ளேயே முடங்கிப் போனாள். அதற்கான சிகிச்சை எடுத்துக் கொள்ளாததன் விளைவு... ரணம் பெரிதாகி... மூச்சுவிடவே சிரமப்பட்டாள்.

அந்த நேரம், கௌஷிக் தானே தன் வேலைகளைச் செய்து கொள்ளுமளவுத் தேறியிருந்தான்.

மூச்சுவிட சிரமப்பட்டு, கண்கள் சொருக கட்டிலில் கோணல் மாணலாய் முடங்கி இருந்தவளை தான்யாதான் பார்த்தாள்.

வித்தியாசம் உணர்ந்து, கையிலிருந்த ஓட்ஸ் கஞ்சியை முக்காலி மீது வைத்துவிட்டு, "அம்மா, அம்மா" என்று தொட்டு அழைத்தாள்.

பேச முடியாமல், ''ம்'' என்று முனகியவளை பயத்துடன் பார்த்தாள்.

"அம்மா... அம்மா... என்ன செய்யிது... அம்மா என்னைப் பாருங்க... என்னங்க..." என்றபடி கௌஷிக்கை நோக்கி ஓடினாள்.

□ □ □

**அ**வசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்தாள் கற்பகம்.

பயத்தில் முகம் வெளிறிப் போனது கௌஷிக்கிற்கு. டாக்டர்கள் நம்பிக்கையாய் எதையும் சொல்லவில்லை. இதயத்தில் வளர்ந்திருக்கும் கட்டி, உடைந்துவிடும் நிலையில் இருப்பதால்... பிழைக்க வைக்க எந்தச் சாத்தியக்கூறும் இல்லை என்றனர்.

கௌஷிக்கும், தான்யாவும் ஹாஸ்பிடலே கதி என்றிருந்தனர். உறவினர்கள் வந்து பார்த்துவிட்டுச் சென்றனர். சங்கவி தன் மகளுக்கு தேர்வு என்பதால் அருகிலேயே இருந்து கவனித்துக் கொள்ள முடியாமல் தவித்தாள்.

யாருக்கும் சாப்பிடத் தோன்றவில்லை.

கௌஷிக்தான் அவளை வற்புறுத்தினான்.

"நீ வீட்டுக்குக் கிளம்பு தான்யா. குளிச்சு, சாப்பிட்டுட்டு தூங்கு. இங்கே நான் அம்மாவைப் பார்த்துக்கறேன்."

''அங்கே என்னால எப்படி இருக்க முடியும்? என் மனசெல்லாம் இங்கேதானே இருக்கும்? சாப்பிடற அளவுக்கு என் மனநிலை இல்லை!"

"நேத்து முழுக்க எதுவுமே சாப்பிடலை தான்யா. இப்படி இருந்தா உடம்பு என்னத்துக்காகும்?"

"இப்பதான் படுக்கையிலிருந்து எழுந்தவர் நீங்க! உங்களுக்குத்தான் இதெல்லாம் முக்கியம்!"

அவர்கள் வாக்குவாதத்தை கேட்டுக் கொண்டிருந்த விஜயன் அருகில் வந்தார்.

''மாப்பிள்ளை... தான்யாவை கூட்டிக்கிட்டு வீட்டுக்குப் போங்க. ரெண்டு பேரும் சாப்பிட்டுட்டு ப்ரெஷ் ஆகிட்டு வாங்க. நான் பார்த்துக்கறேன் இங்கே!"

''இல்லே மாமா... மனசு வரலே... அம்மாவை இப்படி விட்டுட்டு..."

"புரியுது மாப்பிள்ளை! ஆனா, நீங்களும் கொஞ்சம் சக்தியோட இருக்க வேண்டாமா? ரொம்ப டயர்டாத் தெரியறீங்க. நாங்கதான் இருக்கோமே... போய்ட்டு வாங்க...!"

அதற்கு மேல் முரண்டு பிடிக்க முடியவில்லை. 'ஆனால், அம்மாவுக்கு முடியவில்லை என்றதும் தான்யா தன்னை மீறி தனிமையில் அழுதுக் கொண்டிருந்தாளே! தானு... என் குடும்பத்தின் மீது உனக்கு இந்தளவுக்கு பற்றிருக்கிறதா? எப்போதும், இப்படியே இருந்து விட மாட்டாயா?'

பைக்கில் பயணித்துக் கொண்டிருந்த போது... ஓரிடத்தில் வண்டியை நிறுத்தினான்.

"கொஞ்சம் இங்கேயே நில்லு தான்யா... வந்துடறேன்" என்றவன் பக்கத்தில் இருந்த மெடிக்கல் ஷாப்பில் மாத்திரையும், ஒரு பாட்டில் தண்ணீரும், அருகிலிருந்தக் கடையில் இட்லியும் வாங்கிக் கொண்டு, அங்கேயே பாதையோரம் முடங்கிக் கிடந்த வயதான மூதாட்டியை எழுப்பினான் கௌஷிக்.

''பாட்டி... எந்திரிங்க... உடம்பு இன்னமும் சுடுதே! இந்தாங்க... இந்த இட்லியை சாப்பிட்டுட்டு மாத்திரையைப் போட்டுக்கங்க"

இடுங்கிய கண்களால் அவனைப் பார்த்து முறுவலித்த அழுக்கான அந்த மூதாட்டியின் முகம்... அந்த நேரத்தில் எத்தனை அழகு?!

## 13

**சூ**டான காபி தொண்டைக்கு இதமாய் இருந்தாலும், எண்ணமெல்லாம் ஹாஸ்பிடலிலேயே இருந்தது.

''அந்தப் பாட்டிக்கு உடம்பு சரியில்லேன்னு உங்களுக்கு எப்படித் தெரியும்?''

இப்போதெல்லாம் கொஞ்சம் இயல்பாய் அவனிடம் பேச ஆரம்பித்திருந்ததை உணர்ந்தான்.

"அந்தப் பாட்டிக்கு மட்டுமில்லை... இப்படி பிளாட்பாரத்துல வாழ்ந்துட்டிருக்கிற... பல முதியவர்கள் எனக்கு ப்ரண்ட்ஸ்! நானாகப் போய் பேசி அவங்களுக்கு தேவையானதை செய்வேன். இவனுக்கு ஏதுடா பணம்னு யோசிக்கறியா? எந்த கவர்மெண்ட் ஆபீஸ்ல லஞ்சம் வாங்கலே? எங்க ஆபீஸ்லேயும் அது நடக்குது. அதுல கிடைக்கிற பணம் எல்லாத்தையும் இப்படித்தான் செலவுப் பண்றேன். ஒத்தை ரூபாக்கூட வீட்டுக்கு செலவுப் பண்ண மாட்டேன்."



அவனின் மனிதாபிமானம் வெகுவாய் ஈர்த்தது.

"நல்ல விஷயம்!" என்று பாராட்டினாள்.

''அப்புறம்... நான் குளிச்சிட்டுக் கிளம்பறேன். நீ எதையும் சமைக்காதே... ஹோட்டல்லேர்ந்து வாங்கி குடுத்துட்டு... நான் கிளம்பறேன்!"

''என்னோட சேர்ந்து நீங்களும் சாப்பிடறதாயிருந்தா வாங்கிட்டு வாங்க!"

"ப்ளீஸ்... கம்பல் பண்ணாதே!"

"இது கம்பல்ஷன் இல்லே... அக்கறை! ரொம்ப டல்லாத் தெரியறீங்க. அம்மாவுக்கு ஒண்ணும் ஆகாது... அவங்களை பார்த்துக்கத் தெம்பு வேணாமா? ப்ளீஸ்!"

அவள் கெஞ்சிக் கேட்டது... ஆறுதலாய் இருந்தது. அதற்கு மேல் யோசிக்கவில்லை.

ஹோட்டலுக்கு புறப்பட்டான்!

□ □ □

**ஆ**சைப்பட்டு வளர்க்கும் செடியில் பூக்கும் ரோஜாப் பூ... பார்க்க அழகாக இருக்கிறது. செடியில் இருக்கும் வரையில்தான் அழகு! அதை பறிக்காமல் அப்படியே விட்டு அழகுப் பார்த்தாலும்... செடி, ஒரு குறிப்பிட்ட காலம் வரைக்கும்தான் சுமக்கிறது. இதழ்கள் உதிர்ந்து... கடைசியில் காம்பு மட்டும்தான் மிஞ்சும்.

மனித வாழ்க்கையும் அப்படித்தானே? பூமியிலேயே நிரந்தரமாய் தங்கிய மனிதர் எவருண்டு? நாம் வாழ்ந்த வாழ்க்கைக்கு பூமிக்கு வட்டியும் முதலுமாய் செலுத்துவதுதானே மரணம்?

கற்பகத்தின் கணக்கும் அப்படித்தான் முடிந்துப் போனது.

பயத்துடன்... எதிர்பார்த்திருந்தாலும், அம்மாவின் மரணம் அவனை ஒரேயடியாய் வேதனையில் சுருட்டிக் கொண்டது.

ஊரில் உள்ள முதியவர்களுக்கெல்லாம் வலியச் சென்று உதவுபவன், தன் தாயை இழந்தால் எப்பேர்ப்பட்ட துன்பம் அது? எந்த ஆறுதலும், தேறுதலும் அவன் தாயின் ஆத்மாவை உயிர்ப்பெற செய்யப் போகிறது?

அம்மாவின் மரணம் அவனை முழு அனாதையாக்கி விட்டது. இனி அவனுக்கென்று யார் இருக்கிறார்கள்? அந்த உண்மையே அவன் மனதை முருங்கைக் கிளையாய் முறிந்துப் போக வைத்தது.

அந்த வீட்டில் வந்தது சில மாதங்கள்தான் எனினும், தான்யாவும் சரி, கற்பகமும் சரி, அம்மா மகள் போல்தான் உரிமைக் கொண்டாடினர். மாமியார் என்ற பந்தாவில் இதுவரை கற்பகம் கடிந்து ஒரு வார்த்தைப் பேசியதில்லை. காவ்யா செய்துவிட்டுப் போன களேபரத்தைப் பற்றி, இவள் வந்தபின்பு ஒருநாள் கூட அவளைப் பற்றி பேசியதில்லை. சாப்பிடவில்லையா? உறங்கவில்லையா? என்று அன்புடன் அதட்டியிருக்கிறாள். தான்யாவிற்கும் அவளின் மென்மையான குணம் பிடித்திருந்தது. பெற்ற தாயிடம் கேலியும் கிண்டலுமாய், செல்லம் கொஞ்சியவள்... இந்தத் தாயிடம் சாஷ்டாங்கமாய் அடிபணிந்துப் போனாள். அவ்வளவு பிடிக்கும் தான்யாவிற்கு.

அப்படிப்பட்டவளின் மரணம் அவளுக்கு மட்டும் ஜீரணிக்கக் கூடியதா என்ன?

தவிர, ஒட்டாமல் உறவாடாமல் அந்த வீட்டில் வாழ்ந்துக் கொண்டிருந்த இரண்டு ஜீவன்களின் கதி? கற்பகம் என்கிற மரத்தினை நம்பித்தானே அந்தப் பறவைகள் இளைப்பாறிக் கொண்டிருந்தது. மரம்



வெட்டப்பட்டால்... ஆளுக்கொரு திசையாய் பறக்க வேண்டியதுதான்!

அந்த பயம் அவளுக்கும் இருந்தது. இனிதான் அவள் எதிர்கொள்ள வேண்டிய பிரச்சினைகள் அதிகம் இருக்கிறது.

கற்பகத்தை எரித்து, சாம்பலை கடலில் கரைத்து, காரியங்கள் முடிந்து... வீடு துடைத்து விட்டாற்போல் வெறுமையாக இருந்தது. ஒரு சுனாமி ஊரையே சுருட்டிக் கொண்டு போய்விடுமே! அப்படித்தான் அந்த வீட்டின் மகிழ்ச்சியையும், பேச்சு சத்தத்தையும் கற்பகம் தன்னுடன் எடுத்துச் சென்று விட்டாள்.

எல்லாக் கவலைகளும் சேர்ந்து கௌஷிக்கை நெட்டித் தள்ளியது.

அவனுக்கு இனி பேஸ் பண்ண வேண்டிய பிரச்சினைகள் ஏகமாய் இருக்கிறதே! எல்லோருக்கும் பொருத்தமாய், நம்பும்படியான பொய்களைச் சொல்ல வேண்டும். கேலிப்பார்வைகளை, ஏளனப் பேச்சுக்களை நண்பர்கள் மத்தியில் சந்தித்தே ஆக வேண்டும்.

அதற்கெல்லாம் உடம்பில் தெம்பிருந்தாலும், மனசில் இருக்கிறதா?

சரிவர சாப்பிடாமல், கவலையில் தோய்ந்து, கடுமையான காய்ச்சலில் விழுந்தான். கொஞ்சநேரம் இறங்கும், மறுபடி அனலாய் கொதிக்கும். தான்யா தவித்துப் போனாள். துணியை நனைத்து, நெற்றியிலும் நெஞ்சிலும் பத்துப் போட்டாள். டாக்டர் அது எந்த ரக காய்ச்சல் என்று கண்டுபிடிக்கவே ஐந்து நாள் தேவைப்பட்டது.

சாப்பிட்டதெல்லாம் வாந்தி எடுத்தான். அப்படியொரு சமயம், காய்ச்சலில் அனத்திக் கொண்டிருந்தவன், பக்கத்தில் அமர்ந்து, குளிர்ந்த நீரில் துணியை நனைத்து அவன் நெற்றியில் போட முற்பட்டவளை... மூர்க்கத்தனமாய் அணைத்து, நெற்றியில், கன்னத்தில் வெறித்தனமாய் முத்தமிட்டு கட்டிலில் சாய்த்தான்.

எதிர்பார்க்காத தருணத்தில், அவன் செயலால் தடுமாறிப் போன தான்யாவினால் எதிர்க்க முடியாத அளவிற்கு... அவன் உடம்பு மலையாய் அழுத்திக் கொண்டிருந்தது.

ஒரு நிமிடம்தான்! சுயஉணர்வு பெற்றான். நடந்துக் கொண்டிருப்பதை கிரகிக்க சில நொடிகள் தேவைப்பட, "ஸாரி, ஸாரி... தான்யா... ப்ளீஸ்மா... ரியலி ஐ'ம் ஸாரி... நான்... நான்... எப்படி..." விலகி எழுந்து அவமானத்தில் தாக்குண்டவனாய் அவளுக்கு முதுகு காட்டி நின்றான்.

தன் உடையை சரிப்பண்ணிக் கொண்டு வெளியேறியவளின் இதயத்துடிப்பு இன்னும் கட்டுக்குள் வரவில்லை.

அவள் எதிர்பார்க்காத அட்டாக் இது!

'ஆனால், இதில் எந்த திட்டமிடலும் இல்லை. அன்பைத் தேடி அவனுள் இருக்கும் மிருகம் மூர்க்கமாய் அலைகிறது. அவர் என்னச் செய்வார் பாவம்?'

ஒருநாள் முழுக்க... இருவரும் எதிரெதிர் வருவதைத் தவிர்த்தனர்.

நடந்த சம்பவத்தினால் ஏற்பட்ட அதிர்ச்சியோ, என்னவோ காய்ச்சல் இறங்கிவிட்டது.

இரவு... அறைக்குள் உறங்க வந்தவளை தயங்கி ஏறிட்டான்.

"ஸாரி... நான் வேணுமின்னே எதுவும்..."

"அதைப் பத்தி பேச வேண்டாமே!"

"உனக்கு என்மேல கோபம் இல்லையே!"

"அதான் பேச வேண்டாம்னு சொல்றேனே?"

"எப்படி பேசாம இருக்க முடியும்? நீ இன்னொருத்தனுக்கு உரிமையாகப் போறவ... நான் இப்படி... ச்சே... மனுஷனா நான்?"

"நைட்டுக்குப் போட வேண்டிய மாத்திரை இதில் இருக்கு. போட்டுட்டு பால் குடிங்க. சூடா இருக்கு... கொஞ்சம் ஆறட்டும்!" டேபிள் மேல் தம்ளரை வைத்தாள்.

சில கணங்கள் கண்கள் பனிக்க அவளையேப் பார்த்தான்.

"எப்படி இன்னமும் என்மேல கருணையோட இருக்கே தான்யா? உன் எடத்துல வேற யார் இருந்திருந்தாலும் காறித் துப்பிட்டுப் போயிருப்பாங்க. ஆனா, நீ? வைகுந்த் ரொம்ப குடுத்து வைத்திருக்கணும் தான்யா!"

அவள் முகம் சட்டென வாடிப் போனது.

"இதெல்லாம் நான் பார்த்துக்கறேன். நீ கீழேப் போய் படு!"

"இல்லே... உங்களுக்கு காய்ச்சல் வந்தா..."

"இனிமேல் வராது! அதான் வீட்ல வேற யாருமில்லையே! யாருக்கு பயந்து ஒரே ரூம்ல படுக்கணும்? நீ கீழே அம்மா ரூம்ல படுத்துக்க!"

அதற்கு மேல் அங்கு நிற்க அவளால் முடியவில்லை.

நெஞ்சம் விம்ம, ஒரு மாதிரி ஏமாற்றம்

உள்ளத்தை அரிக்க... உறக்கம் வராமல் புரண்டுக் கொண்டே இருந்தாள்... விடியும் வரை.

அவனுக்கு மட்டும் அவளைத் தனியே படுக்க வைக்க ஆசையா என்ன? இதுநாள் வரை அவள் இந்தக் குடும்பத்தை தாங்கிய விதமும், அம்மாவை கவனித்துக் கொண்ட அக்கறையும், அவன் மேல் காட்டிய பரிவும், அவ்வளவும் ஒரு உள்நோக்கத்துடன் என்ற போதிலும், அவள் மீது காதல் இமயமாய் வளர்ந்திருந்தது. அதன் வெளிப்பாடுதான் நேற்றைய சம்பவம்!

மறுபடி நடக்காமல் இருக்க முடியுமா என்று அவனுக்கேத் தெரியவில்லை. ஏனென்றால் மனசெல்லாம் அவளிடமே! அவள் அவனுக்குத் தேவை!

ஆனால், அவள் அவனுக்குச் சொந்தமில்லை.

யோசித்து... ஒரு முடிவுக்கு வந்தான்!

## 14

**“எ**ன்னைக்கு வரணும்?”

“...........?!”

“எத்தனை மணிக்கு பங்ஷன் ஆரம்பிக்கும்? எத்தனை பேருக்கு போடணும்?”

“............?!”

“சரி... வர்றேன்!” என்று செல்லை அணைத்தவள் ஹால் சோபாவில் அமர்ந்திருந்த கௌஷிக்கை அப்போதுதான் பார்த்தாள்.

களைத்துப் போய் தெரிந்தவன் முகத்தில் கவலை.

“எப்ப வந்தீங்க? லன்ச்சுக்கு கூட வரலை.”

“ஆமா... ஒரு முக்கியமான வேலையாப் போயிருந்தேன்.”

அவள் முகத்தைப் பார்க்காமலேப் பேசினான்.

“ஆபீஸ்க்குக் கூட லீவுப் போட்டுட்டீங்க. அதான் லன்ச்சுக்கு வருவீங்கன்னு சமைச்சு வச்சேன்!”

“அதை நைட்டுக்கு சாப்பிட்டுக்கறேன். நாளைலேர்ந்து சமையல் பண்ண ஒரு அம்மாவை ஏற்பாடுப் பண்ணியிருக்கேன்!”

தான்யா துணுக்குற்றாள்.

“ஏன்... என் சமையல் பிடிக்கலையா?”

“நம்ம கணவன் மனைவி நாடகமெல்லாம் ஒரு முடிவுக்கு வந்திடுச்சே தான்யா!”

“............?!”

“இதுக்கு மேலே நீ இங்கிருக்க வேணாம். நான் வைகுந்தை பார்க்கணும். அவர் போன் நம்பர், கம்பெனி அட்ரஸ் தா!”

“எதுக்கு?”

“சொல்லேன் தான்யா. பெங்களூருல இன்போடெக்ல சர்வீஸ் என்ஜினீயரா இருக்கார்னு சொல்லியிருந்தே! பட், அவர் காண்டாக்ட் நம்பர்தான் தரவேயில்லை! குடு”

“என்ன விஷயம்னு சொல்லுங்களேன்?” பொறுமையிழந்துக் கேட்டாள்.

அவள் இந்தளவு டென்ஷனாகி இப்போதுதான் பார்க்கிறான்.

மென்மையாகப் புன்னகைத்தான்.

“சொன்னா சந்தோஷப்படுவே!”

“..........?!”

“நான் எங்கேப் போய் வந்தேன்னு நினைக்கறே? ஒரு நல்ல அட்வகேட்டை பார்த்து... நம்ம டைவர்ஸ் விஷயமா பேசிட்டு வந்திருக்கேன். இதோ அப்ளிகேஷன். சைன் பண்ணு. மியூச்சுவல் அண்டர்ஸ்டான்டிங்ல டைவர்ஸ் வாங்கிடலாம்னு உறுதியாச் சொல்லிட்டார். கல்யாணமாகி ஒரு வருஷம் ஆகியிருக்கணுமாம். இன்னும் ஆறேழு மாசம் வெயிட் பண்ணிட்டா... நீயும் வைகுந்தும் கல்யாணம் பண்ணிக்கலாம்!”

கால் நரம்புகளை யாரோ சுரீரென உருவியதைப் போல் தடுமாறினாள்.

“எ...என்ன?”

“தெரியும்... நீ சந்தோஷப்படுவேன்னு! உன்னை என்னால மறக்க முடியாது தான்யா! வைகுந்த் அருமையான லவ்வர். அவரை ஒதுக்கிட்டு என்னைக் கல்யாணம் பண்ணிக்கணும்னு அவசியமே இல்லை! உன் அக்கா பண்ணியக் குளறுபடியால என் குடும்ப மானத்தை மட்டுமில்லே... என் அம்மா உயிரையும் காப்பாத்திட்டே. இத்தனை மாசம் அம்மா உயிரோட இருந்ததேப் பெரிய விஷயம். அவங்களுக்காகத்தானே நீ இத்தனை மாசமா இங்கேப் பொறுமையா இருந்தே? கல்யாணம் ஆன அன்னைக்கே, உன் காதல் விஷயத்தை சொன்னப்ப... என் பொறுப்புணர்ச்சி அதிகமாய்டுச்சு! எந்தளவுக்கு அவரை நேசிச்சிருந்தா.. நான் தப்பா எடுத்துப்பேனோங்கற

தயக்கமில்லாம... சொல்லியிருப்பே? உனக்கு நான் நிறைய கடமைப்பட்டிருக்கேன்."

"..........?!"

"ஒரு நல்லத் தோழியப் பிரியப் போகிறோமேன்னு வருத்தம் நிறைய இருக்கு. ஆனா, உன் வாழ்க்கை முக்கியமாச்சே?"

'தோழியா?'

"ப்ச்... உங்க வீட்லதான் இதை எப்படி எடுத்துக்கப் போறாங்கன்னுத் தெரியல. பாவம், உங்கப்பா இப்பதான் ஒரு அட்டாக்லேர்ந்து மீண்டு வந்தார். இதை எப்படி அவர்கிட்ட.... தான்யா... அவருக்கு வைகுந்தை பத்தித் தெரியுமா?"

"தெரியாது!" என்றாள் கோபத்தை விழுங்கி.

"அப்ப... என்னன்னுச் சொல்லி..."

"அதை நான் பார்த்துக்கறேன்..."

"அதெப்படி? அப்படி பொறுப்பில்லாம விட்டுட முடியும்? இப்போதைக்கு நமக்குள்ளே மிஸ் அண்டர் ஸ்டாண்டிங்னு சொல்லிடலாம். நீ உங்க வீட்லேயே இரு. அவங்க என்ன சமாதானம் பண்ணினாலும்... என் மேல கோபம் இருக்கிற மாதிரி காட்டிக்க. அதுக்குள்ளே டைவர்ஸ் கிடைச்சிடும். அப்ப வைகுந்தை பத்தி வீட்லச் சொல்லு!"

"உங்க ஐடியாவுக்கு நன்றி! நான் இப்பவேக் கிளம்பட்டுமா? இல்லே நாளைக்குப் போகட்டுமா?"

"வெள்ளிக்கிழமை... விளக்கு வச்ச நேரம். தெரிஞ்சோத் தெரியாமலோ, விரும்பியோ விரும்பாமலோ, நீ இந்த வீட்டுக்கு வந்த மகாலட்சுமி! இன்னைக்கு வேண்டாம்..."

நெஞ்சம் கனக்கப் பேசினான்.

"சரி" என அறைக்குள் சென்று தாழிட்டுக் கொண்டவள்... சாப்பிடக் கூட வெளியில் வரவில்லை.

அவனும் காலையிலிருந்தே சாப்பிடாமல்தான் இருந்தான். பசிக்கவே இல்லை. எல்லா உணர்வும் செத்துப் போனதுப் போலிருந்தது.

'ஏன் தான்யா? உனக்காக... இதயம் வெடிக்க இத்தனை விஷயங்கள் செய்து விட்டு வந்திருக்கேன். ஒரு நன்றி கூடச் சொல்ல மாட்டாயா?'

மறுபடி காய்ச்சல் வருவதுப்போல் ஒரு பதற்றம். 'தான்யா என் வாழ்க்கையிலிருந்து முற்றிலும் அகலப் போகிறாள். அதன்பிறகு என் வாழ்க்கை? இன்னொருப் பெண்ணை, இந்த வீட்டில் என்ன, மனதிலும் புக முடியாதே! உன் மனசு முழுக்க வைகுந்தை நிரப்பி வைத்து இருக்கும் போது... என்னால் உன் இதயத்திற்குள் எப்படி வரமுடியும்? ஒரு சின்ன நப்பாசை... உங்களை விட்டு என்னால் போக முடியாது என்று ஒரேயொரு வார்த்தை... வந்து விழாதா என்று... அது என்றுமே கனவுதான்! பாரேன்... நேற்றுவரை ஒரு தாயைப் போல் என்னைப் பார்த்துக் கொண்டவள், தடை அகன்றதுமே என் இரவு உணவைக் கூட மறந்து விட்டாய். ஆனால், உன்னை மறந்து எப்படி இருக்கப் போகிறேன் என்றேத் தெரியவில்லை தானு!

பெண் பார்க்க வந்த போதுக் கூட காவ்யாவை நான் சரியாகப் பார்க்கவில்லை... கூச்சம் தடுத்தது. அவளை போட்டோவில்தான் சரியாகப் பார்த்தேன். ஆனால் வீடுதேடி வந்தபோது, வண்ணமயில்போல், 'மாமா' என்று வாய்நிறைய அழைத்து 'என் மனைவி' என்ற உரிமையோடு, ஆசையோடு பார்த்ததே உன்னைத்தான்! உன் கலகலப்பேச்சும், அழகும் என்னைக் கட்டிப் போட்டுவிட்டது. அதேபோல் ஆச்சர்யமாய் நீயே என் மனைவியானாய்.

எத்தனை முறை கனவு கண்டேன் தெரியுமா... நீ என் காதருகே வந்து, மூக்கை நிமிண்டி, மீசையை முறுக்கி 'மாமா' என்றழைப்பது போல்!

அத்தனையும் கனவாகவே முடிந்து விட்டது.

ஆனாலும், இந்தளவு பொறுமையாய் இத்தனை மாதம் இங்கிருந்ததே பெரிய விஷயம். அதைவிடப் பெரிய விஷயம் வைகுந்த்... இதற்கெல்லாம் சம்மதித்தது. சச் ஏ கிரேட் மேன்!'

விடியும் வரை கௌஷிக்கின் இமைகள் சேரவேயில்லை.

அவன் கீழே இறங்கி வரும்போது... தனது பெட்டிகளுடன் தயாராய் அமர்ந்திருந்தாள் தான்யா.

அதைப் பார்த்தவன் சில கணங்கள் சலனமற்று நின்றான்.

'என்னிடமிருந்து கட்டறுந்துச் செல்வதில் இத்தனை வேகமா?'

அவனைப் பார்த்ததும் எழுந்து நின்றாள்.

'காபி போடவா?' எனக் கேட்க நினைத்து அடக்கிக் கொண்டாள்.

'இனி, இவர் யாரோ, நான் யாரோ?'

"புறப்பட்டுட்டியா? கொஞ்சநேரம் வெய்ட் பண்ணு. குளிச்சிட்டு நானும்

வந்திடறேன்.''

"இல்லே... வேண்டாம்!"

"எ...ஏன்?"

"நான் அம்மா வீட்ல ஆசையாத் தங்கப் போகலே. நிரந்தரமாப் போறேன். இதுக்கு எதுக்கு நீங்க?"

''அதுக்கில்லே... நாம டைவர்ஸ் பண்றதை...!"

"அதை நான் சொல்லிக்கறேன்!"

அந்த பதில் முகத்திலடிப்பது போல் இருந்தது. ஒரே நாளில் தான்யா வேறுமாதிரித் தெரிந்தாள்.

"அப்படி விட்டுட முடியாது தான்யா. பெரியவங்ககிட்டே நான் சொல்லணும்... அதுதான் மரியாதை!"

"நான் எதையாவது சொல்லிக்கறேன். வைகுந்த் பத்தி அப்பாவுக்கு இப்போது எதுவும் தெரியக்கூடாது. தவிர, உங்களை அப்பாவுக்கும் அம்மாவுக்கும் ரொம்பப் பிடிக்கும். கன்வின்ஸ் பண்ணப் பார்ப்பாங்க. உங்களை பத்தி நீங்களே... கோபம் வர்றமாதிரிச் சொன்னாலும் எடுபடாது!"

''அந்த உறவுகளும் எனக்கில்லாமல் போகப் போகிறது அல்லவா?'' குரல் கம்மியது.

தான்யா தலை நிமிரவே இல்லை.

"எப்படியிருந்தாலும் இது சம்பந்தமாய் பேச அவர்கள் என்னை அணுகுவார்களே!"

''நீங்கள் பிடிகொடுத்துப் பேச வேண்டாம்!"

"சரி... ஆட்டோ... அழைத்து வரவா?"

"ஐந்து நிமிடத்தில் கால்டாக்ஸி வந்து விடும்!"

'எல்லாமே முன்னேற்பாடா?'

"அ... ஒரு நிமிஷம்... மறந்துவிட்டாயே!" திரும்பினான்.

"என்னவாம்?"

''டைவர்ஸ் அப்ளிகேஷன்ல கையெழுத்துப் போடலியே!"

"மனசளவில் நாம் பிரிந்திருக்கும்போது... சட்டம் யார் நம் விஷயத்தில் தலையிட? இல்லை... சட்டப்படிதான் நடக்கணும் என்றாலும், கொண்டு வாருங்கள்... கையெழுத்துப் போடுகிறேன்!"

பேச்சிலிருந்த கடுமை, முகத்தில் வெளிப்பட்டது.

இது... இதுவரைப் பார்த்திராத தான்யா. மனம் சுருங்கிப் போனான் கௌஷிக்.

## 15

மேல் கூரையில்லாத வீட்டில் சுடுகதிர்கள் ஊடுருவி இம்சிக்குமே!

அப்படியிருந்தது கௌஷிக்கின் வீடு!

தன்னந்தனி வாழ்க்கை. வேலைக்காரி வீடு பெருக்கி, சமைத்து, துவைத்து விட்டுப் போய் விடுவாள். குடும்பப் பெண்ணின் கைப்படாத பூஜையறை சாம்பல் பூத்துக் கிடந்தது. டி.வி.யில் ஏதாவது வீணையின் நாதம் கேட்டால்... அவன் இதய நரம்பு சுண்டப்பட்டு கண்கள் கசிந்து விடுகிறது.

தான்யா அவனை விட்டுச் சென்று ஆறு மாதமாகி விட்டது.

படுக்கவும் பிடிக்கவில்லை, எந்திரிக்கவும் முடியவில்லை. குளிப்பதும், சாப்பிடுவதும் கசந்தது. இந்த ஆறு மாதத்தில்தான், அவளை தான் எந்தளவு நேசித்திருக்கிறோம் என்றுப் புரிந்தது.

இருவருக்கும் ஒத்து வரவில்லை என்றுதான் எல்லோரிடமும் கூறப்பட்ட காரணமாய் இருந்தது.

தான்யாவின் வீட்டில் பிரச்சினை பெரிதாய் வெடித்தது.

''அவரோடு என்னால் வாழவே முடியாது... என்னை இப்படியே விட்டு விடுங்கள்'' என்று கதறியவளால், ஏன் எதற்காக என்று தெளிவாய் ஒரு காரணத்தைக் கூட முன் எடுத்து வைக்க முடியவில்லை.

மீறி கேட்டால், ''பிடிக்கவில்லை... அவ்வளவுதான்... எதையென்று சொல்வது?" என்றாள்.

'ஆனால் உண்மையில் ஒரு காரணம் சொல்ல முடியுமா? எப்பேர்ப்பட்ட ஆண்? ஒரே அறையில் பலமாதங்கள் ஒன்றாய் இருந்தும், அந்த ஒரு நாளைத்தவிர, ஒரு சின்ன சபலப்பார்வை? உரசல் எதுவுமே இல்லையே!

நான் அடுத்தவன் காதலி என்றறிந்ததும் போன் நம்பர் கூட வாங்கிக் கொள்ளவில்லையே! சொன்னால் யாருமே நம்பக்கூட மாட்டார்களே!'

அவளைப் பெற்றவர்கள் அவனைத் தேடி வந்து கேட்டனர்.

என்னவென்று சொல்வான்?

'அருமையானப் பெண்! அவளை மனைவியாக அடைய பெரிய அதிர்ஷ்டம் செய்திருக்க வேண்டும். ஆனால், அவள்

பறவையை காப்பாற்ற

ஹெலிகாப்டரில் பறக்கும் மனிதன்

சாலையில் உயிருக்கு போராடிக் கொண்டிருக்கும் மனிதனை காப்பாற்ற முயற்சிக்காமல் வேடிக்கை பார்த்துச் செல்லும் மனிதர்கள் இருக்கும் இந்த சமுதாயத்தில் மனிதாபிமான உள்ளம் கொண்டவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆனால் நம்மில் எத்தனை பேர் இப்படி இருக்கிறோம் என்பது கேள்விக் குறிதான்.



பரிதாபப்படும் மனம் இருந்தாலும் உதவ வேண்டும் என்ற எண்ணம் பலருக்கும் இருப்பதில்லை. காரணம் தேவையில்லாத பிரச்சினை நம் தலையில் விழுந்துவிடுமோ என்ற பயம். ஆகவே எந்த ஒரு பிரச்சினையாக இருந்தாலும் தப்பித்துக் கொள்ளவே பார்க்கிறார்கள்.

ஆனால் இந்தப் படத்தில் பார்க்கும் காட்சி நமக்கு என்ன உணர்த்துகிறது என்றால், உயிருக்கு போராடும் பறவையை காப்பாற்ற ஹெலிகாப்டரில் ஒரு மனிதர் பறக்கிறார் என்றால் அவருக்கு எந்த அளவுக்கு பரந்த மனப்பான்மை இருக்கும் என்பதை புரிந்து கொள்ள முடியும்.

மின்கம்பத்தில் மின்சாரக் கம்பியில் சிக்கிய பறவையை உயிருடன் காப்பாற்ற அவர் எந்த அளவுக்கு முயற்சிக்கிறார் என்பதையும் இந்த படத்தைப் பார்க்கும் போது தெரிந்து கொள்ள முடியும். ஏதோ இந்த காட்சி இந்தியாவில் எடுக்கப்பட்டதாக நினைத்துக் கொள்ள வேண்டாம். வெளிநாட்டில் எடுக்கப்பட்ட வினோத காட்சிதான் இது.

மனதில் வேறு ஒருவர் இருக்கும்போது, நான் என்னப் பண்ணமுடியும் என்றா சொல்ல முடியும்?'

எதுவும் பேசாமல் அமைதியாகவே இருந்து விட்டான். அந்த மவுனம் கோபத்தைத் தூண்ட கன்னாபின்னாவென்று திட்டிவிட்டார் விஜயன்.

சங்கவி அதற்கும் மேல் வந்து கத்திவிட்டுப் போனாள்.

"உனக்கென்ன பித்துப் பிடித்துவிட்டதா அண்ணா? எனக்குத் தெரிந்தவரையில் தான்யா அண்ணியைப் போல், அவ்வளவு பதவிசாக என்னால் கூட குடும்பம் நடத்த முடியாது. உன்கிட்டதான் ஏதோ தப்பிருக்கு. டைவர்ஸ் அளவுக்கு போறதுக்கு அப்படியென்னப் பண்ணிட்டாங்க? போண்ணா... கிடைச்ச நல்ல வாழ்க்கையை ஒண்ணுமில்லாமப் பண்ணிட்டியே!"

அழுது புலம்பி விட்டாள். அதன்பிறகு அந்த கோபத்தில் அந்த வீட்டின் பக்கம் கூட எட்டிப் பார்ப்பதில்லை.

'பாரேன் தானு... உன்னைப் பற்றி என் வீட்டில் எவ்வளவு உயர்வான இமேஜை வளர்த்திருக்கிறாய்?'

அன்று டைவர்ஸ் அப்ளிகேஷனில் கையெழுத்து போட்டு கொடுத்துவிட்டுச் சென்றவளை... அத்தோடு சரி... அதன்பிறகு பார்க்கவில்லை.

அவள் சொன்ன வார்த்தைகள் இன்னமும் ஒலித்தது.

'மனசளவில் நாம் பிரிந்திருக்கும் போது, சட்டம் யார் நம் விஷயத்தில் தலையிட?'

'அப்படியானால் ஒரு நூலிழை அளவுக் கூட உன் மனதில் நான் இடம்பெறவில்லையா தான்யா? ஒரு நர்ஸைப் போல், என் வேண்டுகோளுக்காக, எல்லோருக்கும் சர்வீஸ் பண்ணிவிட்டுப் போயிருக்கிறாய்... அப்படித்தானே?'

மனசுக்குள் பாறாங்கல்லைச் சுமந்து டைவர்ஸூக்கு அப்ளை செய்தான்.

சமரச மையத்திலிருந்து இருவருக்கும் கடிதங்கள் பலமுறை அனுப்பப்பட்டு... தான்யா பக்கமிருந்து எந்த பதிலும் வராமல் போக... ஒரு வருடம் கழித்து ஒருதலை பட்சமாய் நீதிமன்றம் விவாகரத்து கொடுத்துவிட்டது.

வெகுநாட்கள் கழித்தே காற்றுவாக்கில் அந்தச் செய்தி கிடைத்தது.

தான்யா சென்னையிலேயே இல்லை. இங்கிருந்துச் சென்ற இருபதாவது நாளில் பெற்றோருக்கும், அவளுக்கும் வாக்குவாதம் முற்றி, அவளை ''நீயும் எங்களுக்குப் பெண்ணில்லை. காவ்யாவைப் போல் உன்னையும் தலை முழுகுகிறோம்'' என்றதால், வீட்டை விட்டு வெளியேறி விட்டதாய் தகவல்.

'எங்குச் சென்றிருக்கப் போகிறாள்? அவள் உயிருக்குயிரான வைகுந்திடம்தானே?

இன்னும் ஒரே ஒரு முறை தான்யாவைச் சந்திக்க வேண்டும். இந்த டைவர்ஸ் பத்திரத்தை அவளிடம் கொடுத்து... அவளை நிம்மதியுறச் செய்ய வேண்டும்.'

□ □ □

**அ**வனை அறிந்தவர்களும், நண்பர்களும் வேறொரு திருமணம் செய்யச் சொல்லி வற்புறுத்தினர். அவன் சின்னப் புன்னகையோடு பதிலேதும் கூறாமல் வாயை அடைத்து விடுவான்.

மறுமணம் என்பது இப்படியொரு சூழ்நிலையில், சாத்தியமான நியாயமான விஷயம்தான்! ஆனால், அப்படியொரு எண்ணமோ, உடல் சம்பந்தமான ஆசையோ எழவே இல்லை. அம்மா என்றால் அவள் மட்டும்தான். தங்கை என்றால் சங்கவிதான். அதுபோல் மனைவி என்றால் அது தான்யா மட்டும்தான்.

'எத்தனை காலம் அவள் நினைவுகளோடு காலம் தள்ள முடியுமோ அத்தனை காலம் ஓடட்டுமே!'

எப்போதாவது பாரம் மனதை அழுத்தும் போது மட்டும், நண்பர்களால் பழக்கப்படுத்தப்பட்ட மதுவை துணைக்கழைத்துக் கொள்வான்.

□ □ □

**அ**ன்று முக்கியமான நண்பனின் தங்கை திருமணம்... காஞ்சிபுரம் கோவிலில் நடந்தது.

தாலி கட்டி முடித்தபின்... நண்பர்களுடன் பேசிக் கொண்டே பிரகாரத்தை வலம் வந்தபோது உடல் சிலிர்த்துப் போனது.

ஊதாநிற பட்டுப்புடவையில், சரம் சரமாய் மல்லிகைச் சூடி, கணவனின் கையைப் பற்றி, தோளோடு உரசியபடி, சிரிப்பை அள்ளி வீசி... நடந்து வருவது...

தான்யாதானே?

ஆமாம்... அவளேதான்!

திருமணமாகி விட்டதா? முகம் சந்தோஷத்தில் பூத்து... உடம்பெங்கும் பூசினாற்போல்... எவ்வளவு அழகாய் இருக்கிறாள்?

'சீச்சி... என்ன கௌஷிக் இது? அவள் இப்போது அடுத்தவன் மனைவி. அழகை ரசிக்கிறாயே!'

'வைகுந்திடம் தாங்க்ஸ் சொல்ல வேண்டும். டைவர்ஸ் கிடைத்துவிட்டதைச் சொல்ல வேண்டும்.'

''இருங்க வர்றேன்'' நண்பர்களிடம் சொல்லிவிட்டு அவர்களை நோக்கி ஓடினான்.

"எக்ஸ்க்யூஸ் மீ!"

இருவரும் திரும்பினர்.

அவன் முகத்தில் கேள்வி.

அவள் முகத்திலோ அதிர்ச்சி.

"யெஸ்..." என்றான் அவன்.

"ஐ'ம் கௌஷிக்!"

"கௌஷிக்?"

"அதாங்க... அவரு... அந்த கௌஷிக்?" என்றாள் சங்கடத்துடன்.

அவள் சங்கடம் அவனுக்கும் பற்றிக் கொள்ள தயக்கத்துடன் கையைப் பற்றிக் குலுக்கினான்.

''ஓ... க்ளாட் டூ மீட் யூ... மிஸ்டர் கௌஷிக்!"

''எப்படியிருக்கே தான்யா?'' என்று அவளைப் பார்த்து கேட்க...

தூக்கிவாரிப் போடப் பார்த்தாள்.

"தான்யாவா? நா... நான் காவ்யா!"

"ஓ... ஸாரி... ஸாரி..." பெரும் அதிர்ச்சி இப்போது அவன் பக்கம்.

''எப்படியிருக்கே தான்யான்னு கேட்கறீங்க... அப்ப தான்யா உங்களோட இல்லையா?" என்றாள் பதற்றத்துடன்.

வேறு வழியின்றி நடந்தவைகளை, எல்லோரிடமும் சொன்ன அதே காரணத்தை, சுருக்கமாக அவளுக்குச் சொன்னான்.

அப்போதே தங்கைக்கு போன் போட்டாள். இப்போது அது அவளோட நம்பர் இல்லை. நம்பரையும் மாற்றி விட்டாள்.

கௌஷிக்கை உறுத்தலுடன் பார்த்தாள். அதில் யாரும் அறியா மன்னிப்பும் இருந்தது.

□ □ □

மேலும் இரண்டு வருடங்கள் ஓடிப் போயின! இளமையை அரித்துத் தின்றன... நாட்காட்டி தாள்கள்! எப்போதாவது சங்கவி வந்து பார்த்து விட்டு, மறு கல்யாணத்தைப் பற்றி வற்புறுத்திவிட்டு முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு போய் விடுவாள்.

ஒரே மாதிரி வாழ்க்கைப் போனது.

எல்லாமேப் பழகி விட்டது.

இப்போதெல்லாம் அவன் டைவர்ஸ் பத்தி யாரும் பேசுவதில்லை. அது பழங்கதையாகி விட்டது.

'இந்த மூன்று வருடத்தில் தான்யா என்னை மறந்தாலும், மறந்திருக்கலாம்!'

அலுவலகத்தில் அவனை பெங்களூருவுக்கு அனுப்பி வைத்தார்கள்.

அந்த ஊரில் கால் வைத்ததுமே... குளிர்ச்சியான காற்றைப் போல அவளின் நினைவும் மனசுக்குள் குளிரடித்தன.

'தான்யா இந்த ஊரில்தானே இருக்கிறாள்?'

## 16

அழகான சிட்டி!

வேகமான மனிதர்கள். எல்லா இளைஞர்கள் முகத்திலும் படித்த களை! மாடர்ன் யுவதிகள். மற்ற நாட்டினருக்கு சவால் விடும்... கட்டப்படும் கட்டிடங்கள். சுத்தமான சாலை!

கௌஷிக்கிற்கு அந்த ஊரை ரொம்பவேப் பிடித்து விட்டிருந்தது.

நல்ல ஹோட்டலில் ரூம் போட்டிருந்தான்.

வரும்போதே ஒரு முடிவுடன்தான் வந்திருந்தான். 'எப்படியாவது தான்யாவையும், வைகுந்தையும் பார்த்துவிட வேண்டும். டைவர்ஸ் நோட்டீஸை கொடுத்துவிட வேண்டும். குழந்தை இருக்கும் அல்லவா? ஒண்ணா, ரெண்டா?

வைகுந்தை எப்படித் தொடர்புக் கொள்வது? அவன் போன் நம்பரைக் கடைசி வரை தான்யா தரவே இல்லையே! அவ்வளவு ஏன் அவள் நம்பரே இதுவரை எனக்குத் தெரியாதே! நானும் கேட்கவில்லையே? பொதுவாய் யாரைப் பார்த்தாலும் போன் நம்பரைப் பரிமாறிக் கொள்ளும் யுகம் இது! ஆனால், அருகருகே ஒரே அறையில் மாதக்கணக்கில் இருந்தும்... கேட்க ஈகோ தடுத்திருக்கிறது.'



அவனின் ஆபீஸ் பெயர் நினைவில் இருந்தது. அந்த எண்ணைப் பெறுவதில் சிரமம் இருக்கவில்லை. அதன் மூலம் எளிதாய் வைகுந்தை பிடித்துவிட்டான்.

மறுமுனையில் கேட்ட அந்த ஆணின் குரலில் தெரிந்த சிநேகபாவமே சொல்லிற்று அவனின் நல்ல குணத்தை.

"ஹலோ..."

"ஹலோ... வைகுந்த்?"

"யெஸ்... நீங்க?"

"ஐ'ம் கௌஷிக்!"

"கௌஷிக்?"

"தான்யா சொல்லி இருப்பாங்களே...!"

"தான்யா? ஓ... மிஸ்டர் கௌஷிக் நீங்களா? ஸ்வீட் ஷாக். ஹவ் ஆர் யூ மிஸ்டர் கௌஷிக். வீட்ல எல்லாரும் சவுக்கியமா?"

'வீட்லயா? நான் வேற கல்யாணம் பண்ணிக்கிட்டதா நினைச்சிட்டார் போல...'

"நல்லாருக்கேங்க... நீங்க, வீட்ல...?"

"வெரி... வெரி... பைன்! எங்கேர்ந்து பேசறீங்க?"

"அபிஷியலா பெங்களூரு வந்தேன்!"

"கூட..."

"நான் மட்டும்தான்!"

"வாங்களேன் வீட்டுக்கு. உங்களை மீட் பண்ணணும்னு ஒரு க்யூரியாஸிட்டி!"

"ஷ்யூர்... அட்ரஸ் சொல்லுங்க!"

"குறிச்சுக்குங்க!"

அவன் சொல்லச் சொல்ல எழுதிக் கொண்டான்.

"குழந்தைங்க?"

"ஒரே ஒரு பையன்தான்! கண்டிப்பா டின்னர் எங்க வீட்லதான்... ஒக்கே?"



"சரிங்க!" சிரித்தான்.

இன்னும் நேரமிருந்தது.

பர்ச்சேஸ் பண்ணினான். பொம்மை, ஸ்வீட், பூ, பழம், சாக்லெட், பிஸ்கட் என்று பை நிறைந்தது.

நல்ல உடை உடுத்திக் கொண்டான்.

ஏழு மணியானதும் புறப்பட்டான்.

அவர்களை பார்க்கப் போகிறோம் என்ற எண்ணமே படபடப்பை உண்டுப் பண்ணியது.

'இயல்பாய் பேசுகிறான். என்னைப் பற்றி தான்யா நிறைய சொல்லி இருக்கிறாள் போலும்.'

அது பிளாட்! நான்காவது மாடியில் இருந்தது அவர்களின் குடியிருப்பு! ஓரளவு அப்பர் மிடில்க்ளாஸ் வாழக்கூடிய சூழல் உள்ள சுற்றுப்புறம்.

குறிப்பிட்ட வீட்டின் முன் நின்று சுவிட்சை அழுத்தியதும், கதவைத் திறந்து வெளியில் வந்தவன் கொஞ்சம் சூர்யா சாயலில் வெகு ஸ்மார்ட்டாய் இருந்தான்.

"யெஸ்!"

"ஐ'ம் கௌஷிக்!"

"வாங்க... உள்ளே வாங்க..." என்று கைகுலுக்கி அப்படியே அழைத்துச் சென்றான்.

"உக்காருங்க!"

வீட்டை அமர்க்களமாய் இன்டீரியர் பண்ணியிருந்தான்.

பெரிய ஹால்! ரவுண்டு ஷேப்பில் சோபா! கண்ணாடி டீப்பாய்! சுத்தமான ஷோ கேஸ்! அதில் விதவிதமான டாய்ஸ் கலெக்ஷன்.

சுவற்றில் விதவிதமான குழந்தையின் போட்டோ! மூன்று பெட்ரூம் கொண்ட ப்ளாட் போல.

வைகுந்தின் கையிலும் கழுத்திலும் பிளாட்டினச் செயின்கள்!

இரண்டரை வயதுள்ள குழந்தையொன்று சிரித்தபடி வெட்கமுடன் இவனைப் பார்த்தது.

"அங்கிளுக்கு ஹாய் சொல்லு விஷ்வா!"

"ஹாய் அங்கிள்!"

இழுத்து கன்னத்தில் முத்தமிட்டு, "ஹாய் ஸ்வீட் பாய்... இந்தா!" டாய்ஸ் கவரைக் கொடுத்ததும்... சந்தோஷமாய் வாங்கிக் கொண்டு ஓடியது.

"எதுக்குங்க..."

"குழந்தையாச்சே..." என்றவன் சுற்றிலும் பார்த்தான்.

"அம்மு... காபி கொண்டு வா!" என்று உள்ளே பார்த்து குரல் கொடுத்தவன், "தான்யா எல்லாமேச் சொன்னா. எதிர்பாராம ஏதேதோ நடந்து போச்சு... எனிவே பாஸ்ட் இஸ் பாஸ்ட்!"

மெல்லத் தலையாட்டினான்... என்ன பதில் சொல்வதென்று தெரியாமல்.

சில கணங்கள் கழிய... ஜீன்ஸ், குர்தா போட்டுக் கொண்டு பாய்கட் பண்ணியிருந்த இளம் பெண்ணொருத்தி கையில் ட்ரேயுடன் வந்தாள்.

"ஹாய் வெல்கம்!" என்றபடி அவன் முன் நீட்டினாள்.

"த... தாங்க்ஸ்!" என்று ஒரு கோப்பையை எடுத்துக் கொண்டான்.

'யாரிவள்?'

"ஷி இஸ் மை வொய்ப் சாய்கிருபா! அம்மு நான் சொல்லியிருந்தேனே... தான்யா... அவங்களோட ஹஸ்பண்ட்!"

"யா... யா... சொல்லியிருந்தீங்களே... பேசிட்டிருங்க... டின்னர் ரெடிப் பண்ணிட்டிருக்கேன்!"

நாசூக்காய் அவள் நகர்ந்துவிட, பேயறைந்தாற்போல் இருந்த கௌஷிக் அதிர்வுடன் கேட்டான்.

"அப்ப... அப்ப... தான்யா எங்கே வைகுந்த்?"

"வாட்? தான்யா எங்கேயா? என்னச் சொல்றீங்க?" துள்ளி எழுந்தான் அதிர்வுடன்.

கௌஷிக் எல்லாமேச் சொன்னான்.

"மைகாட்!" நெற்றியை பிடித்துக் கொண்டான். "என்ன முட்டாள்தனம் பண்ணியிருக்கீங்க கௌஷிக்!"

"எ...என்னாச்சு?"

"தான்யாவைப் பத்தி என்னத் தெரியும் உங்களுக்கு?"

"..........?!"

"அவ இந்தக் காலத்துப் பொண்ணாயிருந்தாலும், சடங்கு சம்பிரதாயத்தை மதிக்கிறப் பொண்ணு! திடீர்னு உங்களோட கல்யாணம் ஆனதை எதிர்பார்க்கலே. ஆனா, என்கிட்ட 'ஸாரி' கேட்டுட்டு, இனிமே நமக்குள்ளே எந்த ப்ரண்ட்ஷிப்பும் வேண்டாம். என்னோட நம்பரை டெலிட் பண்ணிடுங்க, நானும் டெலிட் பண்ணிடறேன். இனி, கௌஷிக்கோடதான் என் வாழ்க்கைன்னு

சொன்னாளே! என்ன சார் இப்படி சொதப்பிட்டீங்க?"

"கடவுளே... கடவுளே! தான்யா என்கூட வாழ ஆசைப்பட்டாளா? நான்தான் புரிந்து கொள்ளாமல் 'காதலனுடன் சேர்த்து வைக்கிறேன்... கொஞ்சநாள் மனைவியாய் நடி' என்று வார்த்தைகளை விட்டு..."

"ஒண்ணைப் புரிஞ்சுக்குங்க சார்! தான் காதலிக்கிறப் பொண்ணை இன்னொருத்தனோட மனைவியா நடிச்சிட்டு வான்னு எவனும் சொல்ல மாட்டான் சார். நான் மட்டும் எப்படி ஏத்துப் பேன்னு நினைச்சீங்க? உங்களுக்கு அந்த விசாலமான மனசிருக்கா?"

"ஸாரி... ஸாரி!" இதயம் கனத்துப் போயிருந்தது.

"பிரிஞ்சுப் போய் மூணு வருஷம் ஆயிடுச்சுங்கறீங்க? சென்னையிலே இல்லேன்னா... வேற எங்கேப் போயிருப்பா?"

''இங்கே அவங்க பெரியம்மா வீடு இருக்கிறதா கேள்விப்பட்டேன்!"

"ஆமாம்... யுவனி கூடச் சேர்ந்து பார்லர் நடத்திக்கிட்டிருந்தா. மறுபடி அப்படி வந்த மாதிரித் தெரியலியே"

"அந்த யுவனியோட போன் நம்பர் கிடைக்குமா?"

"இப்ப இல்லே... ஒரு ப்ரண்ட் மூலமா ட்ரை பண்ணித் தர்றேன்!"

அதன்பிறகு, அவன் வேண்டாமென்று மறுத்தும் டின்னர் சாப்பிட வைத்தான்.

அங்கிருந்து புறப்பட்டபோது இன்பமும் துன்பமுமாய் உள்ளம் அலைக்கழிந்தது.

'தான்யா... என்னுடன் வாழத்தான் ஆசைப்பட்டாளா? ஆமாம், ஒரு நாள் கூட நான் வைகுந்திடமே போய் விடுகிறேன் என்றுச் சொன்னதேயில்லையே! நானாகவே வார்த்தையைவிட்டு வாழ்க்கையைத் தொலைத்து விட்டேனே! இதில் மெனக்கெட்டு டைவர்ஸ் வரை வாங்கி... ச்சே!

எங்கே இருக்கிறாய் தானு... நான்தான் முட்டாள். நீயாவது கோடிட்டுக் காட்டியிருக்க வேண்டாமா?'

அறைக்குச் சென்று வாய்விட்டு அழுதான்.

## செல்லப்பிராணியான சிங்கம்!

தென்னாப்பிரிக்காவைச் சேர்ந்தவர் அன்னெல் கினைமன். இவருக்கு 31 வயதாகிறது. வாட்டர் பேக் என்ற இடத்தில் வசித்து வரும் இந்தப் பெண், ரிம்பா என்ற சிங்கக்குட்டியை எடுத்து வளர்க்கத் தொடங்கினார். அதை தன் செல்ல நாய்க்குட்டி போல வளர்த்து வந்தார். இப்போது இந்த



சிங்கம் 120 கிலோ எடை உள்ளது.

தினமும் 9 ராத்தல் உணவை உட்கொள்கிறது. இறைச்சியுடன் சேர்த்து இனிப்பு உணவுகளையும் ஆர்வமாக உண்கிறது. அதுமட்டு மல்லாமல் காபியையும் அருந்துகிறது.

அன்னெலுடன் கட்டிப்பிடித்து விளையாடுகிறது. வீடு முழுவதும் சுற்றி வருகிறது. முத்தம் கொடுக்கிறது. கட்டிப்பிடித்து தூங்குகிறது. இப்படி எல்லா வேலைகளையும் இந்த சிங்கம் செய்கிறது. அன்னெல் இந்த சிங்கம் மட்டுமல்லாமல் 6 பூனைகள், ஒரு சிறுத்தைக் குட்டி, 5 சிங்கங்கள், ஒரு வெள்ளை சிங்கம், ஒரு புலி ஆகியவற்றையும் வளர்த்து வருகிறார். இந்த பிராணிகளுடன் இந்த சிங்கம் தோழமையோடு பழகுகிறது. அவர் தோட்டத்தில் அவற்றுடன் சேர்ந்து விளையாடுகிறது.

பூனையை வளர்க்கவே பயப்படும் இந்த காலத்தில் அன்னெல் கினைமன் சிங்கத்தை வளர்த்து குழந்தை போல பாதுகாப்பதை பார்க்கும் போது அதிசயமாக மட்டுமல்ல ஆச்சரியமாகவும் இருக்கிறது.

# 17

**யு**வனியின் நம்பர் கிடைத்து இரவு பத்து மணிக்கு எஸ்.எம்.எஸ். அனுப்பியிருந்தான் வைகுந்த்.

காலையில் தொடர்பு கொண்டான்.

'யுவனியிடமும் இப்போது தான்யா இல்லை' என்றாள்.

மிக வற்புறுத்திக் கேட்ட பின்பே அவள் இருப்பிடம் பற்றிச் சொன்னாள்.

மதுரையில்... புறநகரில் இசைப்பள்ளி நடத்தி வருவதாக...

'இந்தளவு தனிமைப்பட்டுப் போக என்ன காரணம்? நானா?

ஒரு திருமணவாழ்க்கை வெற்றியடையச் செய்ய வேண்டுமென்றால் இருவர் தேவை! ஆனால் ஒரு பெண்ணின் மனதைக் கூட புரிந்துக் கொள்ள முடியாத முட்டாளாய் இருப்பவனால் எப்படி வெற்றிப் பெற முடியும்?'

ஒரு காரை அமர்த்திக் கொண்டு மதுரைக்குப் பறந்தான்.

கடந்துப் போன ஒவ்வொரு கணமும் தன் தேவதையை பார்ப்பதற்கான இடைவெளியை குறைத்து வருவதையுணர்ந்து இதயம் வேகமாய் துடித்தது.

மலைத் தொடர்ச்சியின் அடிவாரத்தில், கேரள பாணியில் ஓடு வேயப்பட்ட, தூண்கள் தாங்கிய... மாடி வீடு!

அது ஒரு பள்ளி மாதிரி இருந்தது.

ஒவ்வொரு ஹால் வாசலிலும் போர்டு மாட்டப்பட்டு, நடனத்திற்கு, இசைக்கு, பாடத்துக்கு என ஆசிரியை பெயர் பொறிக்கப்பட்டிருந்தது.

நான்காவது அறை வாசலில் தான்யா, வீணை டீச்சர் என்றிருந்தது. கதவில் பூட்டுத் தொங்கியது. அந்தப் பெயரை விரலால் தடவினான்.

"யார் சார் நீங்க... இங்கே என்னப் பண்றீங்க?"

ஐம்பது வயதொத்த அந்த ஆண் அங்கு பணிபுரிபவராக இருக்க வேண்டும்.

"என் பேர் கௌஷிக். தான்யா டீச்சரைப் பார்க்கணும்."

உற்றுப் பார்த்தவர், இறுகியிருந்த முகம் தளர்ந்து சிரித்தார்.

"மாடியிலதான் அவங்க வீடு... போய்ப் பாருங்க..."

அவர் காட்டிய திசையில் வேகமாய் படியேறினான்.

இதுவரை அவன் இதயம் இப்படி துடித்ததில்லை.

அறைக்கதவு திறந்தே இருந்தது. ஊதுபத்தியின் நறுமணம் காற்றில் பரவி, அவன் நாசியை நிரவியது. வீணையின் நாதம், உள்ளத்து சோகத்தைக் கொட்டி மீட்டதால்... அவனை என்னவோச் செய்தது.

கால்கள் தன்னிச்சையாய் உள்ளேச் சென்றன.

சின்ன வீடுதான். ஹால் தாண்டி உள்ளே நுழைந்தால்... முதுகை காட்டி அமர்ந்தபடி வீணையை மடியில் கிடத்தி மீட்டிக் கொண்டிருந்தாள். அவளின் அடர்ந்த கூந்தல் தளர்வாய் பின்னி... நறுக்கிய சிறுத்துண்டு கதம்பப்பூவை தலையில் சொருகி இருந்தாள்.

சுவற்றில்... அவர்களின் திருமணத்தின் போது எடுத்த போட்டோ.

அந்த நபர் சிரித்ததன் காரணம் புரிந்துப் போனது.

'என்னை மறக்காமல், நானில்லாமல், என்னுடனே வாழ்ந்துக் கொண்டிருக்கிறாயா என் கண்மணி?'

அதற்கு மேல் பொறுக்க மாட்டாமல் "தான்யா..." என்றழைத்தான்.

தூக்கிவாரிப் போட்டவளாய், விழுந்து விடப் போன வீணையை சட்டென பிடித்து... திரும்பினாள்.

"நீ...நீ..ங்..க..ளா?"

நம்ப முடியாமல் எழுந்தாள்.

"எ... என்ன தான்யா இதெல்லாம்? எதற்கிந்த தனிமை? என்ன சொல்லி என்கிட்டேர்ந்து பிரிந்து வந்தே? ஆனா, யாரும் கண்டுபிடிக்க முடியாத எடத்தில... எதுக்காக... எதுக்காக... இதெல்லாம்?"

அவள் அவனையேப் பார்த்தபடி நின்றிருந்தாள்... எதுவும் பேசாமல். கண்களில் ஈரம் ஊற்றெடுக்கத் துவங்கியது.

"சொல்லு தானும்மா... எதுக்கு இப்படிப் பண்ணினே? நான் வைகுந்தை பார்த்துட்டுத்தான் வர்றேன். யுவனிதான் இந்த அட்ரஸை..."

"வைகுந்தையா? எதுக்கு?"

சுருக்கமாய் சொன்னான்.

வலியுடன் சிரித்தாள். கன்னங்களில் நீர் உருண்டு வந்தது.

தீபாவளிக்கு இன்னும் ஒரு வாரம்

இருந்ததால் தூரத்தில் யாரோ வாணவெடி வெடித்ததில் தொடர்ச்சியாய் மத்தாப்பு சொறிந்துக் கொண்டே இருந்தது.

"நீ அவரை கல்யாணம் பண்ணிக்கிட்டு..."

கைதூக்கி மேற்கொண்டு பேசவிடாமல் தடுத்தாள்.

"நான் அவரை கல்யாணம் பண்ணிக்கப் போறேன்னு எப்பச் சொன்னேன்?" சினத்துடன் கேட்டாள்.

"அவரைக் காதலிக்கிறேன்னு சொன்னியே?"

"நம்ம கல்யாணத்துக்கு முன்னாடியே இருந்த காதலைச் சொன்னேன்!"

"ஒரு வேளை... அவரைக் காதலிச்சேன்னு சொல்லி இருந்தா... நான் புரிஞ்சுக்கிட்டிருந்திருப்பேனோ?"

'ஒரு சின்ன வார்த்தை மாற்றமா, வாழ்க்கையையே மாற்றிப் போட்டு விடும்?' திகைப்புடன் பார்த்தாள்.

"உன்னை எனக்கு எந்தளவுக்கு பிடிக்கும் தெரியுமா? இதெல்லாம் நடிப்புக்காக, அதுக்காக இதுக்காகன்னு சொல்லிச் சொல்லி... அப்பல்லாம் மனசு எப்படி வலிச்சது தெரியுமா தானு? எல்லாத்தையும் மறந்து எங்கூடவே இருந்துட மாட்டியான்னு எந்தளவு ஏங்கினேன் தெரியுமா?"

"நான் அந்த வீட்ல நிரந்தரமா இருக்கணும்னுதாங்க வந்தேன். ஆனா, நீங்கதான் இன்னும் கொஞ்சநாள் பொறுத்துக்கன்னு விலக்கி வச்சீங்க?"

"எப்படி புரிஞ்சுக்காமப் போனேன்?"

"ஒரு பொண்ணு தனக்குப் பிடிச்சவனோட வாழ முடிவெடுத்துட்டா, உறவு, சிக்கல்னு எதையும் யோசிக்க மாட்டா. அப்ப நான் ஏங்க உங்களுடன் இருக்கணும்? உங்களோட ஆறுமாசம் இருந்துட்டு, அப்புறம் மனசுக்கு புடிச்சவனை மறுகல்யாணம் பண்ணிக்கணும்... இல்லே? எவ்வளவு மோசமா எடை போட்டுட்டீங்க என்னை? அந்த கோபத்துலதான் யார் கண்லேயும் படாம இங்கே வந்துட்டேன்!" தன்னை மீறி விசும்பினாள்.

தன்னை நினைத்து அருவருப்பாய் உணர்ந்தான்.

"எல்லாத் தப்பும் எம்மேலதான்னுப் புரியுது தானு! என்னோட முட்டாள்தனத்தால நாம ரெண்டுபேரும் இழந்தது நிறைய... இதுக்கு மேலேயும் பேசிப்பேசி காலத்தை கடத்த வேண்டாம். நீ எந்தளவுக்கு என்னை நேசிக்கிறேன்னு இதோ... இதைப் பார்த்தாலே... புரிஞ்சிடுச்சு." போட்டோவைக் காண்பித்தான்.

**போ**ளி செய்வதற்காகப் பிசைந்து வைத்துள்ள மைதாமாவை நன்கு உலர்ந்த ஆட்டுக்கல்லில் போட்டு ஐந்து நிமிடம் இடித்த பிறகு, போளி செய்தால் விண்டு போகாமல் மிருதுவாக வரும்.

**-என்.ஜரீனா பானு, திருப்பட்டினம்.**

அவனை ஆழமாய் நோக்கினாள். இதுநாள் வரை அவளைப் பிரிந்திருந்த சோகம்... கண்களிலும் இளைத்த உடலிலும் தெரிய... வீம்புக் காட்ட மனம் வரவில்லை.

மூன்றாண்டு பிரிவென்பது அதிகம்தானே?

"என்னை மன்னிச்சு ஏத்துக்குவியா தானு?"

"..........?!"

அவள் முகம், அதில் தெரிந்தக் காதல் கௌஷிக்கை உத்வேகப்படுத்தியது.

"பெரியவங்க ஒரு விஷயம் சொல்லுவாங்க. நாளைக்கு கொடுக்கக் கூடியதாக இருந்தால்... அதை இன்னைக்கே கொடுத்து விடுன்னு... நானும் லேட் பண்ணப் போறதில்லே..."

"எ... எதைக் கொடுக்கணும்?"

"உன்னைத் தூக்கிட்டுப் போய் சென்னையிலேயே நாளைக்கு நம்ம வீட்ல வச்சுக் கொடுக்கணும்னு நினைச்சேன்."

"அதான்... என்ன அது?"

நெருங்கி வந்து மூர்க்கமாய் அணைத்தவன், "என் உயிரை, என் ஆத்மாவை, என்னை... எல்லாமே... என் செல்லமே... என் கண்ணே!"

வேகவேகமாய் அவள் முகமெங்கும் எச்சில் படுத்தினான். கன்னத்தை கடித்தான், மூக்கைக் கடித்தான்... கடைசியாய் இதழ்களையும்!

அவள் ஏன் மறுக்கப் போகிறாள்?

அவளின் பத்து விரல்களும் அவனின் முதுகில் அழுத்தமாய் பதிந்தன.

அவனும், அவள் உதடுகளை விட்டு தன் உதடுகளை விலக்குவதாய் இல்லை!

சதுரங்க விளையாட்டுப் போல்தான் வாழ்க்கையிலும் முன்யோசனைத் தேவை!

தூரத்தே மறுபடி ராக்கெட் சீறிப் பாய...

இருபத்தியொரு முறை... பூ மழைப் பொழிந்தது!

(முற்றும்)

# கோலங்கள்




ரங்கோலி:
- **கே.ஜி.ஜெயலட்சுமி, குத்தாலம்.**




17 புள்ளி 3 வரிசை, 3-ல் நிறுத்தவும் (நேர்புள்ளி)
- **உஷா முத்துராமன், திருநகர்.**



ரங்கோலி:
- **கோ.பரம்ஜோதி, கிளைவ் பஜார்.**



13 புள்ளி 13 வரிசை (நேர்புள்ளி)
- **என்.ரங்கநாயகி, கோவை.**



11 புள்ளி 6-ல் நிறுத்தவும் (இடைப்புள்ளி) சுற்றிலும் ஓரங்களில் 3 புள்ளி 4 வரிசை (நேர்புள்ளி) நடுவில் 3 புள்ளி 1 வரிசை
- **மகாலட்சுமி சுப்பிரமணியன், புதுச்சேரி.**



13 புள்ளி 13 வரிசை (நேர்புள்ளி)
**- ஆர்.ராஜலட்சுமி, சென்னை.**




13 புள்ளி 13 வரிசை (நேர்புள்ளி)
**- ஹரிப்ரியா தியாகராஜன், அக்கரைப்பட்டி.**



19 புள்ளி 1 முடிய (நேர்புள்ளி)
**- வ.சந்திரா மாணிக்கம், மதுரை.**



9 புள்ளி 9 வரிசை, நான்குபுறமும்
5 புள்ளி 2 வரிசை (நேர்புள்ளி)
**- ஜே.ஜெயஷீலா, கவுண்டம்பாளையம்.**

# இனிக்க இனிக்க ருசிப்போம்

தீபாவளி கொண்டாட்டம் என்றாலே இனிப்பு, காரங்களுடன் இல்லத்தவர்களோடு மகிழ்ந்து கொண்டாடும் நாள் தான். லட்டு, மைசூர்பாகு, ஜிலேபி, பால்கோவா, ரவாலாடு தானா இனிப்புகள். எத்தனை எத்தனையோ இனிப்பு, கார வகைகள் இருக்கின்றன. அவற்றில் எளிய முறையில் செய்யக் கூடியவற்றையும், அதே நேரத்தில் சுவையானவற்றையும் இந்தத் தீபாவளிக்கு வழங்குகின்றோம். செய்து பார்த்துச் சுவைத்து மகிழுங்கள்.

அதே நேரத்தில் அதிகச் சிரமமில்லாமல் இருக்க வேண்டும். செலவு அதிகம் வைக்காததாகவும் இருக்க வேண்டும். எல்லாவற்றிற்கும் மேல் எல்லாருக்கும் பிடிக்க வேண்டும். அவ்வகை நம் மண்ணின் இனிப்பு, காரங்கள் இவை.



## கலா கந்த்

**தேவையான பொருட்கள்:**

பால் - 2 லிட்டர், சர்க்கரை - 1 கப், எலுமிச்சைச்சாறு - 1 தேக்கரண்டி, பாதாம்-2, முந்திரிப்பருப்பு - 4, ஏலக்காய்தூள் - ½ தேக்கரண்டி.

**செய்முறை:**

ஒரு லிட்டர் பாலை நன்கு காய்ச்சி அதனுடன் எலுமிச்சைச்சாறு கலந்து அடுப்பில் இருந்து இறக்கி மூடி வைத்தால் 10 நிமிடத்தில் பால் திரிந்து இருக்கும். அதிலிருந்து பனீரை வடிகட்டிக் கொள்ளவும். மீதி ஒரு லிட்டர் பாலைச் சுண்டக்காய்ச்சி அதில் முதல் ஒரு லிட்டர் பாலில் இருந்து எடுத்த பனீரை உதிர்த்து கலந்து, சர்க்கரை சேர்த்துக் கிளறவும். இது சுண்டி அல்வா பதம் வந்ததும் ஏலக்காய்தூள் கலந்து நெய் தடவிய தட்டில் கொட்டித் துண்டு போடவும். மேலே முந்திரி, பாதாம் சீவி அழகுபடுத்தவும்.

## போளகம்

**தேவையான பொருட்கள்:**

அரிசி - 2 தம்ளர், கடலைப்பருப்பு - ½ தம்ளர், சீனி(சர்க்கரை) - ¼ கப், நெய், எண்ணெய் - தேவையான அளவு.

**செய்முறை:**

அரிசியை ஊறவைத்து இடித்துச் சலித்து அந்த மாவை காய்ந்து போகாமல் ஒரு மூடி போட்ட பாத்திரத்தில் போட்டு மூடி வைக்கவும். கடலைப்பருப்பையும் முக்கால் பதத்தில் வேக வைத்து மாவாக்கி மூடி போட்ட பாத்திரத்தில் வைக்கவும்.

பின் ஒரு பாத்திரத்தில் ஐந்துபிடி அரிசி மாவுடன் ஒருபிடி கடலைப்பருப்பு மாவைச் சேர்த்து எண்ணெய் அல்லது நெய் விட்டுப் பிசைந்து எலுமிச்சை அளவுக்கு உருட்டி வைக்கவும். ஒரு அலுமினியத்தட்டைக் கவிழ்த்து வெள்ளைத் துணியை நனைத்துப்

போட்டு உருட்டிய மாவைத் தட்டவும். அதன் மேல் ஒரு ஸ்பூன் சீனியை வைத்து மூடி சூடான எண்ணெயில் போட்டுப் பொரித்தெடுக்கவும்.

## கர்ச்சிக்காய் (சோமாஸ்)

**தேவையான பொருட்கள்:**

மைதாமாவு - 1 கப், பொரிகடலை - 1 கப், முந்திரிப்பருப்பு - 6, தேங்காய்த்துருவல்- 1 மூடி, சீனி - 1 கப், ஏலப்பொடி- ½ ஸ்பூன், எண்ணெய், டால்டா, கசகசா.

**செய்முறை:**

சலித்த மைதாவுடன் டால்டா, தண்ணீர் சேர்த்துப் பிசையவும். பொரிகடலையைப் பொடித்துச் சலிக்கவும். சீனிப்பொடி, வறுத்த கசகசா, வறுத்த தேங்காய்த்துருவல், வறுத்த முந்திரி, ஏலக்காய்தூள் அனைத்தையும் கலந்து வைக்கவும்.

மைதா மாவைப் பூரியாகப் போட்டு அதன் நடுவில் இனிப்புக் கலவையை வைத்து இரண்டாக மடக்கி ஓரத்தை தண்ணீரால் ஒட்டி விடவும். பின் காய்ந்த எண்ணெயில் போட்டு வெந்தெடுக்கவும்.

## சர்க்கரை பாரே (ஆந்திரா)

**தேவையான பொருட்கள்:**

மைதா மாவு - ¼ கிலோ, நெய் - 25 கிராம், சீனி - ½ கிலோ.

**செய்முறை:**

சலித்த மைதாவில் நெய் விட்டுப் பிசைந்து சிறு சிறு உருண்டைகளாக உருட்டிச் சிவந்துவிடாமல் பதமாக நெய்யில் பொரித்தெடுக்கவும். சர்க்கரையை காய்ச்சி நன்கு சுண்டியதும் அதில் உருண்டைகளைப் போட்டு நன்கு புரட்டி ஒரு தட்டில் பரவலாகப் பரப்பி வைக்கவும். சுவையான சர்க்கரை பாரே அனைவரையும் கவர்ந்து இழுக்கும்.

## பஞ்சேரி (பஞ்சாப்)

**தேவையான பொருட்கள்:**

ரவை - 2 தம்ளர், சீனி -2 தம்ளர், காய்ந்த





திராட்சை - ½ தம்ளர், பால்பவுடர் - 2 தம்ளர், சாதிக்காய்தூள் - ½ தேக்கரண்டி, சுக்குத்தூள் - சிறிதளவு, நெய் அல்லது வெண்ணெய் - 2 சிறிய தம்ளர், முந்திரி அல்லது பாதாம் - 1 தம்ளர்.

**செய்முறை:**

வாயகன்ற எவர்சில்வர் பாத்திரத்தில் சிறிது நெய் அல்லது வெண்ணெய் போட்டு மிதமான தீயில் ரவையை வறுக்கவும். அதனுடன் முந்திரி அல்லது பாதாம் தூளைச் சேர்த்து வறுக்கவும். சர்க்கரையைப் பாலில் கலந்து சேர்க்கவும். மீதமுள்ள நெய், சாதிக்காய் தூள் சேர்த்து நன்கு கலந்து பரிமாறவும்.

## அசோகா அல்வா

**தேவையான பொருட்கள்:**

கோதுமை மாவு - 200 கிராம், சிறுபருப்பு - 50 கிராம், சீனி - 400 கிராம், நெய் - 100 கிராம், முந்திரிப்பருப்பு-5, ஏலப்பொடி- ½ ஸ்பூன், புட்கலர் - சிறிதளவு.

**செய்முறை:**

சிறுபருப்பை நன்கு கழுவி குழைவாக வெந்து எடுக்கவும். இரும்புச்சட்டியில் எண்ணெய் ஊற்றி முந்திரியை வறுத்தெடுக்கவும். அடுப்பைக் குறைத்து கோதுமை மாவை வாசனை வரும் வரை வறுத்து மாவு மூழ்கும் வரை நீர் ஊற்றி வேகவைக்கவும். நன்கு வெந்ததும், வெந்த சிறுபருப்பைச் சேர்த்து கிளறவும். பின் சீனியைச் சேர்த்து நன்கு கலந்து வறுத்த முந்திரி, ஏலப்பொடி சேர்க்கவும். விரும்பினால் புட்கலரைப் பாலில் கரைத்துச் சேர்க்கவும்.

## சுருள் போளி

**தேவையான பொருட்கள்:**

மைதா மாவு - 250 கிராம், சர்க்கரை - 200 கிராம், முந்திரிப்பருப்பு- 50 கிராம், தேங்காய்த்துருவல் - 1 மூடி, நெய் - 5 தேக்கரண்டி, ஏலப்பொடி- ¼ ஸ்பூன், எண்ணெய் - பொரிக்க.

**செய்முறை:**

சர்க்கரையைப் பொடிக்கவும். முந்திரியைச் சிறுதுண்டாக்கவும். மைதாவைச் சலித்து கெட்டியாகப் பிசையவும். இரும்புச்சட்டியில் நெய் ஊற்றி முந்திரியை பொன்னிறமாக வறுக்கவும். தேங்காய்த்துருவலையும் பொன்னிறமாக வறுத்து அத்துடன் முந்திரி, சர்க்கரை, ஏலப்பொடி சேர்த்துக் கலக்கவும். மைதா மாவை பூரிகளாக பொரித்து அதன் நடுவில் இனிப்புக் கலவையை வைத்து சுருட்டி வைக்கவும்.



## கறுப்பு உளுந்துப் பணியாரம்

**தேவையான பொருட்கள்:**

அரிசி - 3 கோப்பை, கறுப்பு உளுந்து, பயத்தம் பருப்பு - தலா1 கோப்பை, சர்க்கரை - 1½ கோப்பை, தேங்காய்த்துருவல் - ½ கோப்பை, ஏலக்காய்தூள் - ½ தேக்கரண்டி, எண்ணெய், உப்பு - தேவைக்கேற்ப.

**செய்முறை:**

கறுப்பு உளுத்தம் பருப்பை அரிசியுடன் சேர்த்து மூன்று மணிநேரம் ஊறவைத்துக் கெட்டியாக அரைத்து எடுத்து, உப்புச் சேர்த்துக் கலக்கவும். அதனுடன் கால் கோப்பை சர்க்கரையைக் கலக்கவும். பயத்தம் பருப்பைப் பதினைந்து நிமிடம் ஆவியில் வேகவைத்து எடுத்து உதிர்த்துக் கொள்ளவும். இத்துடன் மீதமுள்ள சர்க்கரை, தேங்காய்த்துருவல், ஏலக்காய்தூள் கலந்து நன்கு பிசைந்து உருண்டைகளாக உருட்டவும். உருண்டைகளை அரிசி, உளுத்தம் பருப்பு மாவில் தோய்த்துக் காயும் எண்ணெயில் போட்டு பொன்னிறமாக வெந்ததும் எண்ணெயை வடித்து எடுக்கவும்.

## சங்குப் பணியாரம்

**தேவையான பொருட்கள்:**

மைதாமாவு - 2 கோப்பை, டால்டா - சிறிது, மிளகாய்தூள் - ½ தேக்கரண்டி, உப்பு - அளவாக, எண்ணெய் - தேவையான அளவு, பேக்கிங் பவுடர் - ¼ ஸ்பூன், பெருங்காயத்தூள் - ¼ ஸ்பூன்.

**செய்முறை:**

மைதாமாவைச் சலித்து உப்பு, மிளகாய்தூள், பேக்கிங் பவுடர், வனஸ்பதி, பெருங்காயம் ஆகியவற்றைச் சேர்த்துத் தண்ணீர் அளவாக ஊற்றிச் சாப்பத்திக்கு மாவு பிசைவது போல் நன்கு அடித்துப் பிசைந்து, சிறு சுண்டைக்காய் அளவு உருண்டைகளாக உருட்டவும். உருட்டியதை புதிய சீப்பில் வைத்துத் தேய்த்தால் சங்குபோல வரும். அதனை காய்ந்த எண்ணெயில் போட்டுப் பொரித்தெடுக்கவும்.

இனிப்புப் பணியாரத்திற்கு மாவில் மிளகாய்தூள், உப்புச் சேர்க்காமல் பிசைந்து சங்கு செய்யவும். சர்க்கரையில் கம்பிப் பக்குவப் பாகு வைத்து, சூடான பாகில் போட்டு வைத்தால் இனிப்பான சங்குப் பணியாரம் ரெடி.

போளி தட்டும் போது பூரணத்தை உருட்டி மாவின் மேல் வைத்தபின் வடை போலத் தட்டி மூடினால் பூரணம் மேல்புறம் கீழ்புறம் சமமாகப் பரவும்.

*-தென்னூர் ராதா, திருச்சி.*

## கேரள சிறப்பு பத்திரி

**தேவையான பொருட்கள்:**

பச்சரிசி மாவு - 1 கப், மைதா மாவு - 1 கப், தேங்காய்த்துருவல் - 1 கப், எள், சீரகம் - சிறிதளவு, உப்பு - ஒரு சிட்டிகை, எண்ணெய்- பொரிக்க.

**செய்முறை:**

ஒரு கப் தண்ணீரைக் கொதிக்க வைத்து இறக்கி சிட்டிகை உப்பு சேர்த்து அரிசி மாவு, மைதாமாவு, தேங்காய்த்துருவல் சேர்த்து, சூடாக இருக்கும்போதே நன்கு கிளற வேண்டும். எள், சீரகம் சேர்த்து ஒரு மணி நேரம் ஊற வைக்கவும். பின்பு பூரிபோல் இட்டு எண்ணெயில் பொரித்து எடுத்துச் சாப்பிடவும்.

## டாக்கர் வாடி (வடஇந்திய வகை)

**தேவையான பொருட்கள்:**

மைதா - 1 பங்கு, கடலைமாவு -2 பங்கு, மஞ்சள்தூள் - சிறிதளவு, பெருங்காயத்தூள் - சிறிதளவு, கொப்பரைத் தேங்காய்த்துருவல் - 1 கரண்டி, கசகசா - 2 கரண்டி, வெள்ளை எள் - 2 கரண்டி, கொத்தமல்லி விதை - 1கரண்டி, சீரகம் - 1 கரண்டி, சோம்பு - 1 கரண்டி, கரம் மசாலா - ½ கரண்டி, மிளகாய் தூள் - 1 கரண்டி, சீனி - 1 கரண்டி, எலுமிச்சைச்சாறு - 1 கரண்டி, எண்ணெய், உப்பு - தேவைக்கேற்ப.



**செய்முறை:**

மைதா, கடலைமாவுடன் உப்பு, மஞ்சள்தூள், பெருங்காயத்தூள் சேர்த்து நீர் விட்டு சாப்பாத்தி மாவுப் பதத்தில் பிசைந்து வைக்கவும். மற்ற பொருட்களை எல்லாம் ஒன்றாகக் கலந்து பூரணமாக்கிக் கொள்ளவும். பெரிய சப்பாத்தியாகப் போட்டு அதில் தயார் செய்த பூரணத்தை வைத்து முழுதாக பரப்பித் தேய்த்துச் சப்பாத்தி மாதிரி இறுக்கமாக உருட்டவும். ஓரங்களில் தண்ணீர் தடவினால் நன்றாக ஒட்டும். அதன்பின் அதை வட்டவட்டமாக ஏதேனும் மூடி கொண்டு வெட்டித் துண்டுகளை எண்ணெயில் போட்டுப் பொரிக்கவும். மிகவும் ருசியாக இருக்கும்.

## சுக்கு - மிளகு லேகியம்

**தேவையான பொருட்கள்:**

சுக்கு - 25 கிராம், மிளகு, சீரகம், கொத்தமல்லி விதை - 2 மேஜைக்கரண்டி, பட்டை - 1 துண்டு, ஏலக்காய் - 2, கிராம்பு - 2, கசகசா - 2 தேக்கரண்டி, அதிமதுரம் - 1, மஞ்சள்தூள் - சிறிது, மாதுளம் பழம்- 1, இஞ்சி - 1 துண்டு, சர்க்கரை -¼ கிலோ, நெய் - ¼ கிலோ, நல்லெண்ணெய்-5 ஸ்பூன்.

**செய்முறை:**

இஞ்சியை அலசி தோல் சீவி சாறு எடுக்கவும். மாதுளம் பழச் சாறு எடுக்கவும். மருந்துப்பொருட்கள் அனைத்தையும் வெந்நீரில் ஊற வைத்து விழுதாக அரைத்தெடுக்கவும்.

இரும்புச்சட்டியில் இஞ்சிச்சாறு, மாதுளைச் சாறை நன்கு கலந்து பொடித்த சர்க்கரையைச் சேர்த்துக் கிளறவும். பின் அரைத்த விழுதைக் கலந்து நெய், எண்ணெய் விட்டு கிளறி சுருள வந்ததும் இறக்கவும்.

## கார்ன்ப்ளேக்ஸ் மிக்ஸர்

**தேவையான பொருட்கள்:**

கார்ன்ப்ளேக்ஸ் - ¼ கிலோ, சிறிய அளவிலான பிஸ்கட்டுகள் (இனிப்பு, உப்பு கலந்தது) -100 கிராம், வேர்க்கடலை - 25 கிராம், முந்திரிப்பருப்பு - 50 கிராம், காய்ந்த திராட்சை - 25 கிராம், உப்பு, மிளகாய் தூள், சீனி, கருவேப்பிலை, பெருங்காயத்தூள் - சிறிதளவு.

**செய்முறை:**

இரும்புச்சட்டியில் எண்ணெய் ஊற்றிக் காய்ந்ததும் கார்ன்ப்ளேக்சை வறுத்து டிஷ்யூ பேப்பரில் போடவும். எண்ணெய் உறிஞ் சியபின் மிளகாய்தூள், உப்பு, பெருங்காயம், பொடித்த சீனி ஆகியவற்றை ஒரு பாத்திரத்தில் போட்டு வறுத்த கார்ன்ப்ளேக்ஸையும் போட்டு நன்கு கலக்கவும். மற்றுமுள்ள பொருட்களை தனித்தனியாக வறுத்துச் சேர்க்கவும். கடைசியில் பிஸ்கட்டுகளையும் வறுத்த கருவேப்பிலையும் கலந்தால் கார்ன்ப்ளேக்ஸ் மிக்ஸர் தயாராகி விடும்.

அவல் லாடு செய்யும் போது அவலை நெய் விட்டு பொன்னிறமாக வறுத்தெடுத்து அதனுடன் சேமியாவையும் நெய்யில் வறுத்து சேர்த்து திரித்து லாடு பிடித்தால் சுவையாக இருக்கும்.

-ஆர்.ஜெயலட்சுமி, நெல்லை.

## கதம்ப பஜ்ஜி

**தேவையான பொருட்கள்:**

கடலைமாவு - 100 கிராம், அரிசிமாவு - 2 தேக்கரண்டி, பெரிய வெங்காயம் - 4, பச்சை மிளகாய் - 2, மிளகாய்தூள் - 1 தேக்கரண்டி, பெருங்காயத்தூள் - ½ தேக்கரண்டி, எண்ணெய், உப்பு- தேவைக்கேற்ப.

**செய்முறை:**

வெங்காயத்தை நீளவாக்கிலும், பச்சைமிளகாயை பொடிப்பொடியாகவும் நறுக்கிக் கொள்ளவும். கடலைமாவு, அரிசி மாவு, மிளகாய்தூள், உப்பு, பெருங்காயப்பொடி ஆகியவற்றை ஒன்றாகக் கலந்து கெட்டியாகப் பிசையவும். இக்கலவையில் நறுக்கிய வெங்காயம், பச்சை மிளகாயை சேர்த்து நன்கு பிசைந்து கொள்ளவும்.

அடுப்பில் வாணலியில் எண்ணெயைச் சூடாக்கி அதில் கலந்து வைத்த மாவை உதிரி உதிரியாகப் போடவும். அடுப்பு குறைவாக எரிய வேண்டும். முக்கால் பதத்திலேயே எடுத்து விட வேண்டும். பொன் முறுவலாகவும், மிருதுவாகவும் இருக்கும். பஜ்ஜிக்குப் பதில் இதைத் தீபாவளி பலகாரமாகச் செய்யலாம்.

-ராஜம்.

PENMANI November-2013 Regd.No.TN/CH(C)/326/12-14.Licensed to Post WPP No.TN/PMG/(CCR)/WPP-49/12-14 Regd. with the Registrar of newspaper for India under No.24258/71. Published 1st of every month.


